www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஒக்.06–12,1996

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 173

# கப்பலில் ஆயுதங்கள்

## கம்போடியாவில் புலிகளின் தளம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



மண்டேலாவின் காதலி

சில்க்சுமிதா கொலையா தற்கொலையா

ராஜீவைக் கொல்ல நடந்த சதி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மாறுபடும் கண்ணோட்டம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"பயங்கரவாதத்தை
உலக அரங்கிலிருந்து ஒழித்துக்கட்ட
இலங்கையும் உதவும்."
வெளிநாட்டமைச்சர் கதிர்காமர்
வெளியிட்டுள்ள கருத்து அது.

'பயங்கரவாதம்'
என்றால் என்ன?
உலக நாடுகள் ஒவ்வொன்றுக்கும்
அதுதொடர்பாக வெவ்வேறு கருத்து!

அமெரிக்காவுக்கு,
தனக்கெதிரானவர்கள் பயங்கரவாதிகள்.
ஃபிடல் காஸ்ரோவில் இருந்து
சதாம் உசேன் வரை
அந்தப் பட்டியலில் இருக்கிறார்கள்!

பிரிட்டனுக்கு
அயர்லாந்துப் போராளிகள்
பயங்கரவாதிகள்!

ரசிய அதிபர் யெல்ற்சினுக்கு
கம்யுனிஸ்டுக்கள் பயங்கரவாதிகள்!

இஸ்ரேலுக்கு
பாலஸ்தீனப் போராளிகள்
பயங்கரவாதிகள்!

இலங்கை அரசுக்கு
புலிகள் பயங்கரவாதிகள்!

ஃபிடல் காஸ்ரோவுடன்
இலங்கைக்கு பிரச்சனையில்லை.
ஈராக் அதிபருடனும் எதிர்ப்பில்லை.
தூதரகமும் இங்குண்டு!

பயங்கரவாதிகள் யார் என்பதில்
உலகநாடுகளிடம்
பொதுக்கருத்துக் கிடையாது!

ஒவ்வொரு நாட்டு ஆட்சியாளர்களும்
தமது நலன் என்ற
ஒரே வண்ணக் கண்ணாடி வழியாகவே
நிகழ்ச்சிப் போக்குகளைக்
கவனிக்கிறார்கள்.

நீலக் கண்ணாடி அணிந்து
பயிரைப் பார்த்தாலும்
அது நீலமாகவே தெரியும்!
பயிரின் நிறம், களையின் நிறம்
இரண்டுக்கும் வேறுபாடு தெரியாது!

பொதுஜன முன்னணி
பதவிக்கு வருவதற்கு முன்னர்
பிரபாகரனை
அரபாத்துடனும், மண்டேலாவுடனும்
ஒப்பிட்டுப் பேசிக்கொண்டிருந்தது.

அப்போது பொதுஜன முன்னணி
அணிந்திருந்தது
எதிர்த்தரப்பு என்ற கண்ணாடி.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு
அன்று புலிகள்
பயங்கரவாதிகளாகத் தெரிந்தார்கள்.
இன்று அதே கட்சிக்கு
புலிகள்
பரவாயில்லைப்போலத் தெரிகிறார்கள்!

அணிந்து கொள்ளும்
கண்ணாடிகளுக்கு ஏற்பவே
கண்ணோட்டங்கள் அமைவதால்
ஏற்பட்டுவரும் கோளாறு இது!

சொந்த நலன் என்ற
வர்ணம் பூசிய கண்ணாடிகளை
கழற்றி வீசும் வரைக்கும்
இந்தக் கோளாறுகள் தீராது!

மக்களுக்கு எதிரான
வன்முறைகள் அனைத்தும்
'பயங்கரவாதம்' என்று அர்த்தம்!

ஆயுதமேந்திய அமைப்புக்கள்
மட்டுமல்ல,
அரசாங்கத்தின் ஆயுதப்படைகளும்
பயங்கரவாதத்தில் இறங்க முடியும்!

ஈராக் மீது
அமெரிக்கப் படைகள்
நடத்தியதும் பயங்கரவாதம்தான்!

பிரிட்டன்
அயர்லாந்து மக்கள்மீது
பாய்வதும் பயங்கரவாதம்தான்!

இலங்கையில் வடக்கு-கிழக்கில்
காணாமல் போவோர் பட்டியல்
நீண்டுகொண்டே போவதும்
'பயங்கரவாதம்' தான்!

"உன்னைத் திருத்திக்கொள்
உலகம் தானாகத் திருந்திவிடும்!"
சுவாமி விவேகானந்தா சொன்னது.

'பயங்கரவாதம்' பற்றிப்
பார் அதிர முழங்கும் நாடுகளும்
முதலில் தம்மைத் திருத்திக்கொள்ளட்டும்:
'பயங்கரவாதம்' தானாக அழிந்துவிடும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## என்றும் ஒரு துணையுண்டு....



இப்புவுலகில் மனிதராய்ப் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் உடலளவிலும் உள்ளத்தளவிலும் துன்ப துயரங்கள், பிரச்சனைகள், மனத் தாபங்கள் வருவது இயற்கை. இன்பமும் மகிழ்ச்சியும் இவ்வுலகில் இல்லாமலில்லை. ஆனால் மக்கள் துன்பத்தைக் கண்டு துவண்டு விடுகிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு வேதாகமம் நல்ல ஆன்மீக அறிவுரைக்களைக் கூறுகிறது.

"நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாயிருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது." (மத்11:29-30)

நுகம் என்பது ஏர். இரண்டு எருதுகளை சேர்ந்து இழுத்துச் சென்று நிலத்தைப் பண்படுத்துவது. எனவே, நமது மனத்தைப் பண்படுத்த இறைவனின் ஆசீர்வாதம் பெற ஆன்மீக வாழ்வை வாழ மாணுடராகிய நாம் அவருடன் சேர்ந்து, இணைந்து வாழவேண்டும். வரும் துன்பதுயரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் தாங்கிக் கொள்ள வேண்டும். எனவேதான் புனித சின்னப்பரும், "நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாய் இருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும் மாளிகையுமாயிருக்கிறீர்கள்" (1 கொரிந்தியர்-3:9) கூறுகிறார்.

ஆக, நாம் தனியாயில்லை. என்றும் அந்த இறைவன் துணை நிற்கிறான்; கூடவே இருக்கிறான். நன் நம்பிக்கைதான் தேவை.

ஏ.பி.வி.கோமஸ்

## அடுத்தவன் குறையை அம்பலப்படுத்தாதீர்!

* ஹஸரத் அபூஹுறைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். "ஒரு முஸ்லிமுடைய குறையை (உலகில்) மறைத்தால், அவருடைய குறையை உலகிலும் மறுமையிலும் அல்லாஹ் மறைத்திடுவான். ஓர் அடியான் தன் (முஸ்லிமான) சகோதரருக்கு உதவி செய்யும் காலமெல்லாம் அல்லாஹுத ஆலா அந்த அடியானுக்கு உதவி செய்து கொண்டிருப்பான்." என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளினார்கள்.

* இன்னுமொரு ஹதீஸில்- "தன்னுடைய (முஸ்லிமான) சகோதரருடைய குறையை மறைப்பவருடைய குறையை கியாமத்து நாளில் அல்லாஹ் மறைத்திடுவான். தன் முஸ்லிமான சகோதரருடைய குறையைப் பகிரங்கப்படுத்துபவருடைய குறையை அல்லாஹுதஆலா பகிரங்கப்படுத்திடுவான். அவன் தன் வீட்டுக்குள்ளிருந்தாலும் அவரைக் கேவலப்படுத்திடுவான்." என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இவ்வாறு ஒரு (முஸ்லிமான) சகோதரனுடைய மரியாதையைக் குலைப்பதனால் மிகக்கடினமான வேதனைகள் இருப்பதாக பல அறிவிப்புக்கள் கூறப்பட்டுள்ளன. எனவே, ஒவ்வொருவரும் தம் சகோதரர்கள் என்று வாழும் நாங்கள் இப்படியான விடயங்கள் எதிர்கொள்ளும் பொழுது நிதானமான முறையில நடந்து கொள்ளவேண்டும். எல்லாம் வல்ல இறைவன் அடுத்தவர் குறையை மறைக்க எமக்கு நல்லருள் புரிவானாக!

மகுத் அஹமத்-காத்தான்குடி

# கவிதைப் போட்டி இல.170

## பரிசுக்குரிய கவிதை



### விண்ணப்பம்

பார்த்துச் சலித்தோம் பசியும் பஞ்சமும்;
கேட்டுச் சலித்தோம் துப்பாக்கி வேட்டுகள்;
பேசிச் சலித்தோம் சமரசத் தீர்வுகள்!
சமாதானத் தேவதையே!
உன்னைக் காண ஏங்கித்தவிக்கும்
எம்முன் திரும்பி உன் முகம் காட்டு!

சி.மு.சுந்தரேசன், அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### காத்திருப்பு

"பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்!"
சொன்ன கவி போனாலும் அவன் சொன்னபடி நடக்கிறது!
"தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்!"
என்று சொல்லிவைத்துப் போனவனும் அவனேதான்; அவன்
சொன்னவைகள் நிஜமாகும் வரை காத்திருப்பேன்
என்நெஞ்சு உள்ளவரை பாரதியை நினைத்திருப்பேன்!

சாரதா-சிவபாதம்-மட்டக்களப்பு.

### காரணங்கள்

உணர்வுகள்
மழுங்கடியும்,
கனவுகள்
உருக்குலையும்,
இவள்-
இலங்கைத் தாய்

சுபா வரன், கண்டி.

### நவயுகத்தாள்...!

கோவலனைப் பார்த்திருந்து,
காற்சிலம்பும் தானிழந்த,
பாவியவள் இவளல்ல....!
சாய்ந்து விழும்
தோள் மூட்டுச் சட்டையுடன்
தன் கணவன் மீண்டுவரும்
வாசல் வழிபார்த்திருக்கும்
மங்கை இவளன்றோ—
மாதர்சி நவயுகத்தாள்!

வி.கவிதாருபன்-தம்பிலுவில்-01.

### சிறகொடிந்த பறவை

குண்டு மழை பொழிய-விட்டுக்
கூரையெல்லாம் நொறுங்கி விழ
மாண்டாரை விட்டுப் பிறர்
மறைவான இடம் ஏக
கன்னி இவள் மாட்டிவிட
காமுகர்கள் குதறிவிட
சித்தம் கலங்கியே-இன்று
சிறகொடிந்த பறவையானாள்!

திருமதி நிரஞ்சனி, சச்சிதானந்தன்-
செங்கலடி.

# கவிதைப் போட்டி இல-173



கவனியுங்கள்!எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 12.10.1996 —முகவரி—
கவிதைப் போட்டி இல.173 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### தன்னைத்தான் சிறைவைத்தாளோ?

எப்படியோ ரூபா பதினொன்றை சேர்த்தெடுத்து
எப்போ வியாழன் வருமென்று காத்திருந்து
தினமுரசை வாங்கிவந்து தன்கதை கவிதை ஏதேனு முளதோ
என அம்மா பார்க்கு முன்னே, முதல் பக்கமதை
மூத்தக்கா பறித்தெடுக்க, நடுப்பக்க சினி விசிட்டை
சின்னக்கா இழுத்தெடுக்க, பாப்பா முரசுக்காய்
தங்கச்சி அடம்பிடிக்க, அசத்தல் கதை படிக்க
அண்ணா வெடவெடக்க, அரசியல் அலசலுக்காய்
அத்தான் கார்லோசாய் உருவெடுக்க, அப்பா
இராமாயணத்தொடர் கிடைக்காமற் புறுபுறுக்க
பாவம் அம்மா கொள்ளை கொடுத்த பூலானாய் மாறாமல்
'தாய்' நினைவு தடுத்துவைக்க தனி அறைக்குள் போனாளோ
அசோகவன சீதையென தன்னைத் தான் சிறை வைத்தாளோ?"

சிவ.கங்காதரி- மட்டக்களப்பு.

### எத்தனை... எத்தனை..

இலங்கையோ ஈராக்கோ
எரித்தியா பொஸ்னியாவோ
வல்லரசு வல்லூறுகள்-விலைக்கு
வழங்குகிற ஆயுதத்தால்
வாழ் விழந்து வாட்டமுறும்
வனிதையர்தான் எத்தனைபேர்?

பழ.சச்சிதானந்தன்.

### சோகத்தால்

எத்தனைக்கோ முகம் கொடுத்தும்
எப்பயனும் இல்லாத சோகத்தாலா?
முகம் கொடுக்க மனம் வெறுத்து
புறமுதுகுகாட்டி நீ,
காலத்தை வெறுத்து
கதைகூற அமர்ந்தனையோ?

க.சுசீலா, கல்லடி வேலூர்,
மட்டக்களப்பு.

### யார் இது?

வாக்குறுதி பலதந்து
வாக்குகளால் வென்று
ஆட்சியில் அமர்ந்தே
ஈராண்டு சென்றும்
சொன்னதைச் செய்ய
முடியாது தடுமாறி
பின் முதுகு காட்டி
உட்கார்ந்திருப்பது
நம்-சந்திரிகா அக்காவோ?

சு.இரத்தினம், தேசிய கல்லூரி,
அக்கரைப்பற்று-7.

### எங்கும் இருள்மயமே!

நிலவில்லாத அமாவாசையாய்
கனவுகளை சொந்தமாக்கி,
உனக்குள் நீயே
ஜனனிக்கும் ஜீவனே!
நினைவுகளின் நெருடலில்
இமை வழுக்கிடும் முன்,
திரும்பிப்பார்! தேசம்
எங்கும் இருள்மயமே!

தெ.நஞ்ஜனா- சின்னப்புதுக்குளம்,
வவுனியா.

# வாசக(ர்) சாலை

பிரியமான முரசே, வாரம் தோறும் உன் வருகைக்காக காத்திருப்போரில் நானும் ஒருத்தி!

நெஞ்சங்களை தொட்டுச் செல்லும் சிறுகதை. தேன் கிண்ணம், சிந்தியா பதில்கள், பட்டுக்கோட்டை பிரபாகரின் மறுபடி தா சுவையாக இருக்கின்றன. உன் வளர்ச்சிக்கு இவளின் வாழ்த்துக்கள்.

பர்ஸானா ஹாஷிம், நீரெல்ல, அக்குறணை-07.

ப்ரிய முரசே....! வாழ்த்துக்கள். "பூலான்தேவி" தொடர் மிகவும் விறுவிறுப்பாக அமைந்துள்ளது. கொழும்பைச் சேர்ந்த ஜெயந்தி ஜெய்சங்கரின் "வானில் இடம் தேடும் நட்சத்திரம்" கதை நன்றாக இருந்தது. காதிலை பூ கந்தசாமியின் கற்பனைவளம் அப்பப்பா அருமையிலும் அருமை. சுபா வரனின் "துப்பாக்கிகளின் காலம்" கவிதையும் நீலா பாலனின் "ஈரமும் இரக்கமும்" கவிதையும் நன்றாக இருந்தன. என்றும் உலா வர வாழ்த்துக்கள்.

பே. மஞ்சுளா,மடுல்சீமை.

என் இனிய நண்பன் முரசே!

விறுவிறுப்பூட்டும் வித்தியாசமான 'தா' தொடர்கதையை மறுபடி 'தா' பாகம் 2ல் தொடர்ந்ததையிட்டு மகிழ்ச்சி. காதில பூ கந்தசாமி சிரிக்க மட்டுமா? சிந்திக்கவும் வைக்கிறார்.

ஜெ. சியானந், மட்/ தாண்டவன்வெளி.

என் இனிய முரசே!

வாசகர் இதயத்தில் நீங்காத இடம் பிடித்துக்கொண்ட நீ தாங்கிவரும் அத்தனை அம்சங்களும் முக்கனியின் சுவைபோல தித்திக்கின்றன. "அந்த நாள் ஞாபகம்" அம்சத்தில் வரும் படங்கள் உண்மையில் பாராட்டத்தக்க அருமையான படங்களே! ஆக்கங்கள் பலவகை தந்து அறிவைவளர்த்து அமுதமாய் இனிக்கும் முரசுக்கு நிகர் முரசே! உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

மயில்வாகனம் மங்கேஸ்வரன், மட்/செங்கலடி.

என் இனிய முரசே

நீ சுமந்து வருபவை அனைத்தும் சிறப்பு மிக்கவை. சிந்தியாவின் குட்டிக் கதைகள் என்னைக் கவர்ந்துள்ளன. அந்தநாள் ஞாபகம் படங்களில் மக்கள் திலகத்தின் படங்கள் அற்புதமானவை. என்றும் எனது வாழ்த்துக்கள்.

செல்வி ரா. ராதா, செங்கலடி.



**முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:**

- ★ செல்வி றிஸ்வானா யூனைடீன்.
- ★ அ. பரமேஸ்வரன், நவிண்டில்.
- ★ கே.எஸ்.எம். ரிஸ்வான், ஹெறாவப்பொத்தானை.
- ★ பாத்திமா சாஜிதா அமீன்,நவகம்புர.
- ★ செல்வி சு. அபிராமி, கொழும்பு.
- ★ காசிம் சலீம் ஜஃபர், கல்முனை.
- ★ செல்வி சசிகலா துரைநாயகம், சாம்பல் தீவு.
- ★ க. தர்ஷன், பெரிய நீலாவணை-1.
- ★ ஸாலி யஸீம், புத்தளம்.
- ★ டி. ராஜ்குமார், காவத்த.
- ★ எஸ்.என். குமார், கண்டி.
- ★ கு. ரகுவரன், மன்னார்.
- ★ சோபியா நிஸார், கற்பிட்டி.
- ★ எம். பஸ்வான், சவுதி அரேபியா.
- ★ செல்வி பா. தில்லை, இராகலை.

அமெரிக்க சண்டித்தனத்தைக் கண்டித்த முரசுக்கு பாராட்டுக்கள். இலங்கையில் மட்டுமல்ல பலநாடுகளில் உள்ள செய்தி நிறுவனங்களை அமெரிக்கா வாங்கிவைத்திருக்கிறது. அதனால் அமெரிக்காவின் வாலாட்டத்தை அவை கண்டிப்பதில் பின்நிற்கின்றன. ஏனோ தானோவென்று செய்திகளை மட்டுமே வெளியிடுகின்றன. அமெரிக்காவின் சுயரூபத்தை தொட்டுக்காட்டிய முரசுக்கு பாராட்டுக்கள் தெரிவிப்பது அதன் காரணமாகவே.

எஸ். தில்லைநாதன், திருக்கோணமலை.

அன்புள்ள ஆசிரியருக்கு!

கிழக்கில் கரும்புலிகள் எனச் சொல்லப்பட்டு கொல்லப்பட்ட இரண்டு இளைஞர்களும் கரும்புலிகள் அல்லவென்று பல தகவல்கள் வெளியாகியுள்ளன. முரசில் ஆசிரியர் தலையங்கத்திலும் அதனை கோடிட்டு காட்டியிருந்தீர்கள். நீதிபதி கூட (மரண விசாரணையில்) சந்தேகம் தெரிவித்துள்ள நிலையிலும் அவர்களைச் சுட்டுக்கொன்றவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப் பட்டுள்ளது. பதவி உயர்வும் பரிசும் வழங்கப்பட்ட செய்தி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன செய்தியிலும் சொல்லப்பட்டது. தமிழ் மக்களின் மனங்களை இப்படித்தான் வெல்லப்போகிறார்களா?

மா. துரைராசா, கல்முனை.

'தாய்' நாவலில் வரும் பாத்திரங்களும், உணர்வுபூர்வமான கருத்துக்களும் தற்காலத்திற்கும் பொருத்தமானவையே. நம்நாட்டில் நடக்கும் கதையோ என நினைக்குமளவுக்கு நம்கால அவலங்களுடன் பொருந்தியிருக்கிறது 'தாய்'.

ஆர். புவனேஸ்வரி, வவுனியா.

வாரா வாரம் ரசிகன் அவர்கள் வழங்கும் 'இலக்கிய நயம்' அருமையிலும் அருமை. தலைப்புக்கு பொருத்தமாக மிளிரும் ஓவியம் அழகாகவும், சிறப்பாகவும் உள்ளது. பாராட்டுக்கள். முரசின் பணி தொடரட்டும். வாழ்த்துக்கள்.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன்,
மட்டக்களப்பு.

அன்பின் முரசுக்கு,

ஒவ்வொரு வாரமும் தப்பாமல் பிரசுரிக்கும் பல்சுவை அம்சத்தில் ஆரம்பப் பிரிவு 'ஆசிரியர்' என்னைக் கவர்ந்தது. "பாப்பா முரசு" அதில் வரும் சிறுகதைகள் வகுப்பறையில் மாணவரை மகிழ்ச்சிப் படுத்தவும், நல்ல கருத்துக்களை சேர்த்துக் கூறவும் வாய்ப்பாக இருக்கிறது.

எஸ்.ரீ. செல்வா, கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

சூடு, சுவை, சுவாரசியம் குன்றாமல் 'இலக்கிய நயம்,', 'பூலான் தேவி' தரும் ரசிகன் ப(ழு)லத்த அனுபவசாலி போலும். மேலும் என்னென்ன தொடர் தந்து எம்மை அசத்தப் போகின்றாரோ....?!

எஸ். பத்மா, உமாஜினி, நவ்சாத்,
கொழும்பு-10.

முரசே! பூலான் தேவியின் முத்தான கதையை கொத்தாகச் சேர்த்து சத்தாகத் தரும் ரசிகனுக்கும் முரசே உனக்கும் என் மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

பி.எம்.எம்.ஏ. காதர்,மருதமுனை-01.



படிப்பகம்

www.padippakam.com

# கைது செய்யப்பட்ட 135 பேரின் கதி தெரியவில்லை!

# யாழ் அரச அதிபரை பெற்றோர் முற்றுகை!

## யாழ் மாவட்ட எம்.பிக்களிடம் முறையீடு

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்பின்னர் யாழ் குடாநாட்டிற்கு திரும்பிய மக்களில் ஆயுதம் தாங்கியோரால் கைதுசெய்யப்பட்ட 135 பேரின் கதி என்னவென்று தெரியவில்லை. பாதுகாப்புப் படையினரிடம் அது தொடர்பாக விபரங்களைக் கோரியுள்ளார் யாழ்ப்பாண அரசாங்க அதிபர்.

யாழ் மாவட்ட நடவடிக்கைகளுக்கு பொறுப்பான தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லால் வீரசூரியாவுக்கு யாழ் அரசாங்க அதிபர் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் அரசாங்க அதிபர் தெரிவித்திருப்பதாவது:

தங்களுடைய கோரிக்கையின்படி பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்படுவோர் பட்டியலைத் தங்களுக்கு அனுப்பி வருகிறேன்.

மீளக்குடியமர்வுக்காக மக்கள் வலிகாமம் திரும்பிய பின்னர் கைதுசெய்யப்பட்டவர்களின் பெற்றோர் அல்லது அவர்களின் உறவினர்கள் எழுத்து மூலம் அளிக்கும் முறைப்பாடுகளைக் கொண்டே பெயர்கள் பெறப்படுகின்றன.

கைதானவர்களில் கணிசமான தொகையினர் பொலிசாரின் பாதுகாப்பில் இருப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பட்டியலை இப்போது ஆராய்ந்தபின்னர் யாழ்ப்பாண நகரிலும், தென்மராட்சியிலும் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 135 பேர் எங்கிருக்கிறார்கள் என்பதைக் கண்டு கொள்ள முடியாதிருக்கிறது. தங்கள் தகவலுக்காக அத்தகையோரின் பட்டியலை இத்துடன் இணைத்துள்ளேன்.

பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட பிள்ளைகளின் 75 பெற்றோர் வரை எனது அலுவலகத்துக்கு வந்து தங்களுடைய பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள் என்பதையிட்டு தகவல் தருமாறு கேட்டார்கள். அத்துடன் யாழ் அரச செயலகம் முன்பாக மறியலில் ஈடுபடவும் அவர்கள் முயற்சிக்கின்றனர். ஆகவே இதில் தலையிட்டு பின்வரும் முறைப்படி நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1. குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த கட்டளையிடும் அதிகாரி கைதானவர்களின் பெற்றோரை அழைத்து தற்போதைய நிலமையை விளக்க வேண்டும்.

2. கைது செய்யப்பட்டவர்களின் இருப்பிடத்தை அறிந்து பெற்றோருக்கு கூடிய விரைவில் தகவல் தரவேண்டும்.

3. எத்தகைய பயங்கரவாத சம்பவங்களுடனும் தொடர்பற்ற நிரபராதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்ட ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோரின் பெற்றோர்கள் முறையிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த திருமதி செ.மெற்றில்டா என்னும் தாய் ஒருவர் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தனது மகனை கண்டறிந்து மீட்டுத் தரும்படி கேட்டுள்ளார்.

செ.மெற்றில்டாவின் மகன் சுப்பிரமணியம் யாழ் மாநகர சபையில் மெக்கானிக்காக வேலை பார்த்துவந்தவர். 9.8.96 அன்று காலை 9 மணிக்கு தனது சைக்கிளில் வேலைக்கு சென்ற சுப்பிரமணியம் இன்று வரை வீடு திரும்பவில்லை.

இதேபோல மற்றொரு முறைமீடும் செய்யப்பட்டுள்ளது. மட்டுவில் தெற்கைச் சேர்ந்தவர் சுப்பிரமணியம் சுபநேசன். 26.07.96 அன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் சென்று திரும்பும்போது காணமல் போனார். இதுவரை விடு திரும்பவில்லை. இவர் ஒரு மாணவன்.

இவ்வாறு பல முறையீடுகள் கிடைத்திருப்பதாகவும் இவை தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதாகவும் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் உள்ள நிலமைகளைக் கண்டறியவும், பாதிக்கப்படும் மக்களின் முறையீடுகளைப் பெறவும் அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புக்களை அனுமதிக்க வேண்டும் என்று ஈ.பி.டி.பி. ஜனாதிபதியைக் கோரவுள்ளதாக டக்ளஸ் தேவானந்தா பா.உ. தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தென்மராட்சி பகுதிகளில் ஒரு இளம் ஆசிரியை உட்பட நான்கு இளம் பெண்கள் காணாமல் போயுள்ளனர். இணுவில் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு பாஸ் எடுக்கச் செல்வதாக கூறிச் சென்ற இளம் ஆசிரியை பின்னர் வீடு திரும்பவில்லை. இச் சம்பவம் தொடர்பாகவும் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடமராட்சி பகுதியில் இரவோடு இரவாக ஒருவீட்டுக்குள் புகுந்த இனம் தெரியாதோர் பெண் ஒருவருடன் தகாத முறையில் நடக்க முற்பட்டனர். அதனைத் தடுக்க முற்பட்ட அப்பெண்ணின் தந்தை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறான ஒரு சம்பவம் மந்துவில் மேற்குப் பகுதியிலும் இடம்பெற்றுள்ளது.

## மோட்டார் தாக்குதல் தொடர்கிறது

## மக்கள் காடுகளுக்குள் புகலிடம்

'சத்ஜய 3' நடவடிக்கை மூலம் படையினர் கிளிநொச்சியில் நிலைகொண்டுள்ளனர்.

கிளிநொச்சி நகருக்குள் படையினர் செல்ல அனுமதித்து பின்வாங்கிய புலிகளின் அணிகள் இடைக்கிடையே மோட்டார் தாக்குதல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

கிளிநொச்சி நகரம் தரைமட்டமாக காட்சியளிக்கிறது. மக்கள் அனைவரும் வெளியேறி காடுகளில் புகலிடம் தேடியுள்ளனர்.

புலிகள் இதுவரை ஆட்டிலறிப்பீரங்கித் தாக்குதலை மேற்கொள்ளவில்லை. அதனை தற்போது வெளியே கொண்டுவந்தால் விமானப் படையினரால் அழிக்கப்படலாம் என்று கருதியே பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

கிளிநொச்சியில் படையினர் நிலை கொண்ட பின்னர் புலிகள் ஆட்டிலறி தாக்குதல் நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதும் கிளிநொச்சியில் இருந்து சத்தங்கள் கேட்டுக்கொண்டிருப்பதாக வவுனியாவில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஷெல் மற்றும் குண்டுத்தாக்குதல்களால் காயமடைந்தவர்களில் சிலர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

வெளியே கூறப்படுவதைவிட இரு தரப்பு போர்முனை இழப்புகள் அதிகம் என்று 'ராய்டர்' செய்தி நிறுவனம் கூறுகிறது.

'சத்ஜய 3' நடவடிக்கையில் தமது தரப்பில் 96 பேர் பலியானதாக 29.09.96 அன்று புலிகள் இயக்கத்தினர் அறிவித்தனர். புலிகள் தரப்பில் 700 பேர் பலியானதாக படையினர் கூறியுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக பலியான புலிகளின் உடல்களை ஒப்படைக்க விரும்பியதாகவும், நூற்றுக்கணக்கான புலிகள் பலியானதாகவும் படையினர் தெரிவித்தனர். எனினும் உடல்கள் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படவில்லை.

தனது பிரச்சாரத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பெயரை அரசாங்கம் இழுப்பதாக புலிகள் குறை கூறியுள்ளனர். கிளிநொச்சியில் உள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்கப் பிரதிநிதி திருமதி பார்பராவை சந்தித்து தமது அதிருப்தியை தெரிவித்ததாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

கிளிநொச்சியில் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருவதாக படையினர் கூறியுள்ளனர். ஒருவார சண்டையில் தமது தரப்பில் 269 பேர் பலியானதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

## பயண அனுமதிக்கு பத்தாயிரம்!

## பயணிகளிடம் தரகர்கள் பேரம்!

விமானம் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதி கேட்டுவிட்டு கொழும்பில் பல நூற்றுக்கணக்கான மக்கள் காத்திருக்கின்றனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு விண்ணப்பித்தவர்களுக்கும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக கொழும்பில் இருந்து செல்லும் பயணிகளை 'ஸ்கேன்' பண்ணி அனுப்பவேண்டி இருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை விரைவாக யாழ் செல்ல அனுமதி மற்றும் விமான ரிக்கெற் பெற்றுத் தருவதாகக் கூறிக்கொண்டு சில தரகர்கள் புறப்பட்டுள்ளனர். சகல அலுவல்களையும் முடித்துத்தர பத்தாயிரம் ரூபா வரை தர வேண்டும் என்று 'ரேட்' பேசுகிறார்களாம்.

முன்னர் பிரபலமாக இருந்த மலையக அரசியல்வாதி ஒருவருக்கு தொடர்பான சிலரும் அவ்வாறு தரகர் வேலையில் ஈடுபடுவதாக தகவல் கிடைத்துள்ளது.

அவசர காரியமாக யாழ் செல்ல விரும்பும் சிலர் பணம் கொடுத்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

பயண அனுமதி வழங்குவதில் பாதுகாப்பு அமைச்சு செய்யும் கால தாமதமே இதற்கெல்லாம் காரணம்.

## புலிகள் எச்சரிக்கை

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் வடிசாராய உற்பத்தியில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று புலிகள் எச்சரித்துள்ளனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட புலிகள் இயக்க அரசியல் பிரிவினரால் மேற்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"வடிசாராய உற்பத்தி என்பது ஒரு சமுக விரோத நடவடிக்கையாகும். இவ்வாறான செயலை யார் செய்தாலும் அவர்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், தகுந்த தண்டனை வழங்கவும் நாம் தள்ளப்படுகின்றோம். தண்டனை வழங்கத் தயங்கவும் மாட்டோம்" என்று தெரிவித்துள்ளனர்.

வடிசாராயத்தால் ஏற்படும் கேடுகள் தொடர்பாக விளக்கமளித்து பிரசுரம் ஒன்றையும் புலிகள் வெளியிட்டுள்ளனர். எதிரியைவிட மோசமானது வடிசாராயம் என்றும் புலிகளின் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்பு யாழ் குடாநாட்டில் வடிசாராய வியாபாரிகளுக்கு புலிகள்தண்டனை வழங்கியமையும், தற்போது யாழ் குடாநாட்டில் மீண்டும் வடிசாராய வியாபாரம் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்ட அசம்பாவிதங்கள்

## பின்னணியில் அரசியல் சக்திகள்!

அம்பாறை மாவட்டத்தில் மருதமுனையிலும், பாண்டிருப்பிலும் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் பின்னணியில் சில அரசியல் சக்திகளும் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

புலிகள் இயக்கத்தினரால் ஊர்காவல் படையினர் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில தீய சக்திகள் தமது திட்டத்தை நிறைவேற்றியுள்ளனர்.

கிழக்கில் சமீபகாலமாக தமிழ்-முஸ்லிம் சமுகங்களுக்கிடையே நல்லுறவான நிலை ஏற்பட்டு வந்தது.

கடந்த காலத்தில் கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளை தற்போது புலிகளும் நிறுத்திக் கொண்டுள்ளனர். முஸ்லிம்கள் தமது காணிகளுக்கு சென்றுவரவும், விவசாயத்தில் ஈடுபடவும் முன்னர் தடை விதித்திருந்த புலிகள் தற்போது அத் தடைகளை விலக்கி வருகின்றனர். முஸ்லிம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தும் புலிகளால் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கிழக்கில் சமூக ஒற்றுமையை விரும்பாத சக்திகள் மீண்டும் இரு சமூகங்களுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தும் தருணத்துக்காக காத்திருந்தன. அவர்கள்தான் சமீபத்திய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டனர் என்று கூறப்படுகிறது.

வன்முறையில் ஈடுபட்ட குழுவினரிடம் ஆயுதங்கள் காணப்பட்டமையும் அவர்களின் பின்னணியில் வேறு ஒரு சக்தி இருந்ததை புலனாக்குகிறது என்று கூறப்படுகிறது.

இரு சமூகங்கள் மத்தியிலும் உள்ள ஐக்கியத்தை விரும்பும் சக்திகள் அம்பாறை அசம்பாவிதங்களை வன்மையாகக் கண்டித்திருப்பதுடன் ஆழ்ந்த கவலையும் தெரிவித்துள்ளன.

## வவுனியாவில் தொடரும் மர்மம்!

## பாதுகாப்புப் படையினர் மௌனம்!!

வவுனியா நகரில் பொலிசார்மீது 27.08.96 அன்று கிரனைட் தாக்குதலை தொடர்ந்து மேலும் சில மர்மச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

27.08.96 அன்று நடைபெற்ற தாக்குதலுக்கு மறுநாள் 28.08.96 அன்று வன்னியில் இருந்து வெளியான புலிகளின் தினசரியான ஈழநாதம் பத்திரிகையில், தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரியிருந்தனர். 'ஊடுருவி நடத்திய திடீர் தாக்குதல்' என்று அதனை விபரித்திருந்தது ஈழநாதம்.

அதன்பின்னர் வவுனியாவில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக புலிகள் எதனையும் தெரிவிக்கவில்லை.

19.9.96 அன்று வவுனியா ரயில் நிலையம் அருகே பொலிசார்மீது ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது. அதற்கு காரணமானவர்கள் யார் என்பது தெரியவில்லை.

25.09.96 அன்று வவுனியா இராசேந்திரம் குளத்தருகே முன்னாள் இராணுவத்தில் கடமையாற்றிய ஒருவர் உட்பட மூன்று பேரின் பிணங்கள் கைகள் வாய்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன. இச் சம்பவத்துக்கும் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையே தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. மேற்படி சம்பவத்தில் கொல்லப்பட்ட முன்னாள் இராணுவ வீரர், முன்னர் ஒரு முறை திருமலையில் வைத்து ரெலோ இயக்கத்தினரால் சுடப்பட்டு தப்பியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

27.09.96 அன்று வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு அருகே ஒரு உடல் காணப்பட்டது. கொல்லப்பட்டவர் யாரென்று இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

பாதுகாப்புப் படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா நகரில் நடைபெறும் மர்மச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை கண்டுபிடிக்கப்படாமல் இருப்பது மக்களிடையே பல்வேறு சந்தேகங்களுக்கு இடமளித்துள்ளது.

1991ம் ஆண்டிற்குப் பின்னர் இன்றுவரை இத்தகைய மர்மக் கொலைகளால் ஆகக் குறைந்தது 250 பேர்வரை உயிரிழந்திருக்கலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

இதேவேளை வவுனியாவிற்கு புதிதாக செல்வோருக்கு அங்கு தங்கியிருக்க பத்து நாட்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அதுவும் கட்டம் கட்டமாகவே அனுமதி வழங்கப்படும்.

முதலில் ஒரு பாஸ் வழங்கப்படும். முதல் மூன்றுநாட்களும் அந்தப் பாஸை பொலிசாரிடம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் 7 நாட்களுக்கு பாஸ் வழங்கப்படும்.

நெலுக்குளத்தில் இயங்கிய இடம் பெயர்ந்தோருக்கான முகாம் தற்போது மூடப்பட்டுள்ளது. வேப்பங்குளத்தில் இடம்பெயர்ந்தோருக்கான முகாம் இயங்குகிறது.

வவுனியா கல்வியியல் கல்லூரியிலும் 750 பேர் வரையான இடம்பெயர்ந்தோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## போக்குவரத்து ஒருநாள் தடை!

(ஏறாவூர் நிருபர்)

கிழக்கில் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் திலீபனை நினைவு கூரும் நாட்களின் இறுதித் தினமான 26.09.1996 அன்று பொதுமக்கள் எவரையும் தமது பகுதிகளிலிருந்து வெளியே செல்லவோ படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து உள்ளே வரவோ அனுமதிக்கவில்லை. அன்றைய தினம் நகர்ப்பகுதிகளில் மக்களின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து நகர் வெறிச்சோடிக் கிடந்தது.

படைத்தரப்பு அன்றைய தினத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் கழித்த அதேவேளை புலிகள் திலீபனின் ஞாபகார்த்தமாக பல நிகழ்ச்சிகளை நடாத்தினர்.

இதனிடையே கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு- மாவடிவேம்பில் வைத்துக் கடத்திச் சென்ற வாழைச்சேனை ப.நோ.கூ.சங்கத்திற்குச் சொந்தமான பஸ்ஸை கொக்கட்டிச்சோலையில் வைத்து கடந்தவாரம் புலிகள் ஒப்படைத்துள்ளனர்.

## அவர் இங்கே சிறையில்!

யாழ்ப்பாணத்தில் பிரபலமான தேநீர் கடை 'லிங்கம் கூல்பார்'. இதன் உரிமையாளர் கொல்லப்பட்டதாக சில மாதங்களுக்கு முன்னர் ஒரு வதந்தி அடிபட்டது. இப்போது உண்மையான தகவல் கிடைத்துள்ளது.

'லிங்கம் கூல்பார்' உரிமையாளரும், அங்கு வேலைசெய்த ஊழியர்கள் சிலரும் யாழ்ப்பாணத்தில் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு மகசீன் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். புலிகள் இயக்கத்தினருக்கு நிதி உதவி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

## "இன்றைய அவலங்களுக்கு புலிகளே காரணம்!"

## கிழக்கில் பாதுகாப்பு படையினர் தெரிவிப்பு!

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினரால் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்து பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அன்பான பெற்றோர்களே! சகோதரர்களே! மாணவர்களே! பிள்ளைகளே! நீங்கள் எந்தவொரு நிலையிலும் இன்னல்களுக்கு உட்படக்கூடாது என்ற விருப்பத்தை எந்த நேரத்திலும் உங்களுக்கு அறிவித்துள்ளோம். நாங்கள் சேவைபுரிவது உங்களின் நலனுக்காகவே என்பதை கண்டிப்பாகக் கூற வேண்டும். நாங்கள் எதிர்ப்பது கொடூர எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தை மாத்திரமே. நாங்கள் இன்று வீழ்ந்திருக்கும் இன்னல்களில் இருந்து மீள்வதே எங்களின் ஒரேயொரு நோக்கமாகும். இது இன்னும் உங்களுக்கு புரியவில்லையா? எதிர்காலத்தில் நிச்சயமாக நீங்கள் அதனை உணர்ந்துகொள்வீர்கள், உங்களுக்கு மிக விரைவில் அமைதியை ஏற்படுத்தித் தருவதாக நாங்கள் வாக்குறுதி அளிக்கின்றோம்.

அன்பான பெற்றோர்களே! நீங்கள் ஒருகணம் சிந்தனை செய்துபாருங்கள். இந்த இன்னலான நிலைமையை ஏற்படுத்தியவர்கள் யார்? நீங்கள் அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ்ந்த வாழ்க்கையை அநாவசிய ஈழத்தினால், இந்த நிலைமையை ஏற்படுத்தியவர்கள் யார்? நீங்கள் சுதந்திரமாக தொழில் புரிவதற்கும், விவசாயம் செய்வதற்கும், முழுமையாகக் கூறின் உங்கள் வாழ்க்கையின் சுதந்திரத்தையே இல்லாமல் செய்தவர்கள் யார்? கொடூரமான எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தினர் இந்நிலைமையை உருவாக்காமல் இருந்திருந்தால்; நீங்கள் எந்தளவு சந்தோஷத்தில் வாழ்வீர்கள் அல்லவா?

அண்மைக் காலத்தில் எல்.ரீ.ரி.ஈ. இயக்க உறுப்பினர்கள் பாடசாலை மாணவர்களின் சீருடை அணிந்து துவிச்சக்கரவண்டிக் குண்டு எடுத்துச்சென்றுள்ளனர். இது பாடசாலை மாணவர்களினால் கூறியதைத் தொடர்ந்துதான் அதன் உண்மை நிலை புலனாகிறது. பாடசாலை மாணவர்களே! இது உங்களின் பாடசாலை சீருடைக்குச் செய்யும் அவமானம் இல்லையா? இப்படியான செயல்களுக்காக பாடசாலை சீருடையைப் பாவிப்பது கீழ்த்தரமான செயல் அல்லவா? இவற்றையெல்லாம் உங்களுக்கு ஏற்படுத்தியவர்கள் கொடூர அதிகார எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தினர் என்பதை நீங்கள் கண்முன்னே ஏற்றுக்கொள்ளவேண்டி வரும்.

இன்று வடக்கின் நிலைமையை நீங்கள் நினைத்துப் பாருங்கள். யாழ்ப்பாணத்தை வெற்றியீட்டியது பாதுகாப்புப் படையினர் அல்ல. யாழ்ப்பாணத் தமிழ் மக்களே. இன்று அவர்கள் எவ்வளவு சந்தோஷத்துடனும், சமாதானத்துடனும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். உங்களுக்கும் மிக விரைவில் அந்த நிலை உருவாகும். அதற்காக உங்களினால் கிடைக்கும் ஒத்தாசைகள் எங்களின் பலமாகும்." இவ்வாறு பாதுகாப்பு படையினர் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பில் படையினரால் விநியோகிக்கப்படும் பிரசுரம் இது.

## மன்னார் மீனவர்களுக்கு நிவாரணம்!

## தமிழகம் செல்வதைத் தடுக்கும் முயற்சி!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு செல்லும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இப்பகுதியில் மீன்பிடித் தொழில் பாதிப்பிற்குள்ளாகி வருமானம் இழந்துள்ள இரண்டாயிரம் மீனவக்குடும்பங்களுக்கு உடனடியாக உலர் உணவு நிவாரணம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்- திரு. எஸ். மரியதாசன் குரூஸ் முரசுக்குத் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு அகதிகளாக வெளியேறுவோர் தொடர்பாக ஆராயவென அவசரக்கூட்டம் ஒன்று கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது. பாதுகாப்பமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இவ்வுயர் மட்டக்கூட்டத்தில் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் கலந்துகொண்டார்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் மீன்பிடித்தொழில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது அதனால் மீனவர்கள் வருமானம் இழந்து நிற்கின்ற நிலை ஆகியவற்றை அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறிய அரச அதிபர், இதனால் மீனவர்களுக்கு உலர் உணவு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திக் கூறினார்.

இதனையடுத்தே 2000 மீனவர் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு இடம்பெயர்வோர் மீன்பிடித்தொழிலால் பாதிக்கப்பட்டுள்ளமையையே பிரதானமான காரணமாகக் கொண்டுள்ளனர். எனினும் இந்நிவாரணத் திட்டம் எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியவிடயம்!



படிப்பகம்

www.padippakam.com

## மீளக் குடியமர்ந்தோர் மீளவெளியேற்றம்!

### பாவிலுப்பட்டான் குடியிருப்பு வெறிச்சோட்டம்!

(மன்னார் நிருபர்)

மன்னார்த்தீவிலுள்ள பேசாலைக் கருகில் இருக்கும் பாவிலுப்பட்டான் கட்டுக்குடியிருப்பு மீள குடியேற்ற மாதிரி கிராமம் தற்போது வெறிச்சோடிய நிலையில் காணப்படுகின்றது.

இக்கிராமம் இவ்வாண்டு மார்ச் மாதம் 14ம் திகதி அகதிகள் மீள குடியேற்ற வாரத்தின் போது, இப்பகுதியில் அகதி களாகயிருந்த பொதுமக்களுக்கு என உருவாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இங்கிருந்த 55 குடும்பங்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் இந்தியா சென்று விட்டனர். எஞ்சியுள்ளோரும் வெளியேறும் நிலைமையில் உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இக்கிராமத்தில் கிராம அதிகாரி அலுவலகம், கூட்டுறவுச் சங்கம், சனசமூக நிலையம் உட்பட சில வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன.

இதேவேளை மன்னார் இ.போ.ச. பொதி களுக்கான கட்டணத்தை திடீரென உயர்த்தி யுள்ளது. இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் 1990ம் ஆண்டு 09 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்படியே இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படுவதாக மன்னார் சாலை முகாமையாளர் என். இராஜரட்ணம் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

இக்கட்டண உயர்வு 18.09.96 முதல் அமுலுக்கு வந்துள்ளதாகக் கூறிய அவர் சாலைக்கு புதிதாக 02 அசோக் லேலண்ட் பஸ் வண்டிகள் விரைவில் கிடைக்கவுள்ள தாகவும் சொன்னார்.

## பிச்சைக்காரன் வேடத்தில் குழந்தைக் கடத்தல்

### பட்டப்பகலில் புத்தளத்தில் கைவரிசை

(புத்தளம் நிருபர்)

பிச்சைக்காரர் போன்று நடித்து குழந்தைகளுக்கு பரிவு காட்டிய ஒரு ஆசாமி அக்குழந்தைகளையே கடத்திச் சென்ற சம்பவ மொன்று அண்மையில் புத்தளத்தில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் கூறப்படு வதாவது:-

புத்தளம் மாரியம்மன் கோவிலடிப் பகுதியில் அடுத்தடுத்த வீட்டிலே வசித்து வருகின்றனர் அப்துல் ஹமீத் என்பவரும் முஹம்மது பாருக் என்பவரும். தொழிலாளி களான இவர்களுக்கு பல குழந்தைகள் உள்ளனர். இவர்களின் வீடுகளுக்கு அடிக்கடி ஒரு பிச்சைக்காரர் வந்து போவது வழக்கம். அடிக்கடி வந்து போவதால் இவர்களின் குழந்தைகளும் இந்த பிச்சைக்காரரின் மேல் பரிவு வைத்திருந்தனராம்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று அப்துல் ஹமீத் என்பவரின் மகளான பாடசாலை மாணவி செல்வி சதானா(6) என்பவரும் முஹம்மது பாருக் என்பவரின் மகளான பாடசாலை மாணவி செல்வி றிஸானா(9) என்பவரும் வீட்டின் முன்புறம் விளையாடிக் கொண்டிருந்தனர்.

மாலை நான்கு மணியிருக்கும். அந்நேரம் அங்கே வந்த பிச்சைக்காரன் இரு மாணவி களையும் அழைத்து வீட்டுக்கு சற்று தூரத் திலுள்ள கடையொன்றுக்கு சிகரட் வாங்கி வரும்படி பணத்தைக் கொடுத்து அனுப்பி னாராம்.

சிகரட் வாங்க பிள்ளைகள் சென்றதும் அவர்களைத் தொடர்ந்து சென்ற பிச்சைக் காரன் மறைவான இடத்தில் ஒழிந்து கொண் டுள்ளான். அக் குழந்தைகள் வந்தபோது முன்னரே ஏற்பாடு செய்திருந்த ஆட்டோ வாகனம் திடீரென வந்ததும் அதனுள் இருந்த மற்றும் இருவரும் சேர்ந்து குழந்தைகளின் வாயை மூடி அலாக்காக தூக்கி ஆட்டோவுக்குள் போட்டுக்கொண்டு நொடிப் பொழுதில் மறைந்தனராம்.

பின்னர் புத்தளம் பஸ் நிலையத்தில் தயாராய் இருந்த வேனில் குழந்தைகள் மாற்றப்பட்டு அவ்வேன் கொழும்பு வீதியில் பறந்ததாம். சுமார் 10 மைல் தொலைவுக்கு வேன் சென்றபோது குழந்தைகள் உரக்க அழ ஆரம்பித்தன ராம். இவர்களின் அழுகை அதிகமான போது வேன் மறிக்கப்பட்டதால் கடத்தல் காரர்கள் குழந்தைகளை வேனில் வைத்து விட்டு ஓடித் தலைமறைவாகி விட்டார் களாம்.

குழந்தைகளை பொறுப்பேற்ற முந்தல் போலீஸார் பின்பு பெற்றோர் களிடம் ஒப்படைப்பு செய்தனராம்.

## இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு நிவாரண மறுப்பு!

### அரச அதிபரின் அடாவடித்தனம்

திருகோணமலை பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டி ருக்கும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் ஓரளவு சுமுக நிலை நிலவும் திருகோணமலை பட்டினத்திற்கு இடம் பெயர்ந்து ஆங்காங்கே செறிந்து வாழ்கின்றார்கள்.

தத்தமது பகுதியில் தொழில் செய்த வர்கள் அதைத் தொடர முடியாமையால் இவ்விடத்தில் கூலி வேலை செய்து வறுமையின் எல்லையிலே வாழ்வது அனைவரும் அறிந்ததே.

இவற்றில் குறிப்பாக பன்குளம், கன்னியா, மூதூர், போன்ற பகுதி மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்ட நிலையில், பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத் தால் வழங்கப்படும் நிவாரணத்தையே நம்பி வாழ்கின்றனர்.

ஆனால், கடந்த மூன்று மாத தாமதங்களின்பின் கொடுப்பனவுகள் வழங்கப்படும்போது, அரசாங்க அதிப ரின் பரிசீலனையால் மேலும் தாமதிக்கப்பட்டு வருகின்றது. இவ்வரசாங்க அதிபரின் நடவடிக்கைகள் தமிழ் பேசும் இனத்திற்கு மட்டும் தானா? என ஐயப்படவேண்டி யுள்ளது. அவரின் நிருவாக பகுதிகளில் மேலும் பல பிரதேச செயலகங்கள் இருந்தும், அவரும் அவரது அலுவலக ஊழியர் களுடன் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் அதிகாரம் செலுத்துவது வியப்பாக உள்ளது.

மேலும் 90ம் ஆண்டு இடம் பெயர்ந்த அகதிகளின் வதிவிடத்தை உறுதிப்படுத்த அவ்விடத்து வாக்காளர் பட்டியலை வேண்டு வது நகைப்புக்கிடமானது.

பரிசீலனை செய்து வழங்கப்பட வேண்டும் என்பது உண்மையானதுதான். ஆனால் இவற்றை நிவாரணம் வழங்கும் முன் நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். அதை விடுத்து தமிழ் பகுதிகளுக்கு நிவாரணம் வழங்கும்போது மட்டும் அகதி களை பரிசீலிப்பது வீண் தாமதத்தையும் நெரிசலினால் ஏற்படும் சச்சரவுகளையும் எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இக் கொடுப்பனவுகள் எமக்கு உரிமை யானவை: சலுகைகைகள் அல்ல! இதை திருகோணமலை அரசாங்க அதிபர் உணரல் அவசியம்.

அதுமட்டுமல்ல, இடம்பெயர்ந்த அகதி களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வரும் அதே வேளை சம்பத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு நிவாரணம் மறுக்கப்பட்டமை ஏன்? தமிழ் மக்கள் என்ற காரணமா?

இப்பகுதி மாகாண உயர் அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் மௌனமாய் இருப்பதேன்?

பாதிக்கப்பட்ட அகதிகள் சார்பாக
க. விஜயராஜன், சி. செல்வரெட்ணம்.

## தேவை சீரான மின்சார சேவை!

### மன்னார் மக்களின் அவலக் குரல்!

(மன்னார் நிருபர்)

மன்னார்த் தீவுப் பகுதியில் சீரான மின்சார விநியோகத்தை மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் மன்னார் பிரதேச சபைக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இப்பகுதியில் பகல் வேளை களில் 3 மணித்தியாலங்களும் இரவு வேளை களில் 4 மணித்தியாலங்களும் மட்டுமே மின்சார விநியோகம் இடம் பெறுகின்றது.

இவ் விநியோகமானது இப்பகுதியிலுள ளோருக்கு எவ்வகையிலும் போதியதல்ல. விநியோக நேரத்தை இரட்டிப்பாக்கினால் இத் தேவையினை ஓரளவு பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

24 மணித்தியாலமும் மின்சார விநி யோகம் மேற்கொள்ள சகல வசதிகள் இருந்தும், எதற்காக அவ்வாறு செய்யப் படுவதில்லை என்றும் அவர்கள் கேட்கின்றனர்.

சில வேளைகளில் முன்னறிவித்த லின்றி திடீர் திடீரென மின்சார வெட்டு நடைபெறுகின்றது.

## செய்திக்கு ஒரு திருத்தம்

171 வது (செப்.22-28,1996) தினமுரசு இதழின் நான்காம் பக்கத்தில் "தலைமைச் செயலாளரின் தவறு" எனத் தலையங்கமிடப் பட்ட செய்தியில் தலைமைச் செயலாளர், "கொழும்பிலிருந்து அரசாங்கமே மனமு வந்து தமிழில் அனுப்பும் சுற்றுநிருபங் களைக்கூட, அதன் பிரதியுடன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து கையொப்பமிட்டு சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கின்ற நடைமுறையைக் கையாளுகிறார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு சம்பவம் தலைமைச் செயலாளரின் அலுவலகத்தினால் மேற் கொள்ளப்படவில்லை. தவிரவும், அரச கருமமொழி நடைமுறைப்படுத்தலில் சிரத்தை கொண்டு , பணியாற்றிவரும் தற்போதய தலைமைச் செயலாளரின் பதவிக் காலத்தில் எச்சந்தர்ப்பத்திலும் இவ்வாறான செயற்பாடு இடம் பெற்றதே கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.வன்னியகுலம், உதவி ஆணையாளர், அரச கருமமொழி நடைமுறைப்படுத்தல் பிரிவு, வ-கி.மா, திருகோணமலை.**

## தமிழ் சேவைக்கு மட்டும்.....?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ்ச்சேவை தவிர ஏனைய சேவைகள் தெளிவாகவுள்ளன. நேயர் கடிதம் மூலம் தமிழ்ச் சேவைப்பணிப்பாள ரிடம் கேட்டபோது, இவ்வருட நடுப்பகுதி யில் வர்த்தக சேவை தெளிவாகக் கேட்கும் எனக் கூறப்பட்டது. ஆனால் நடுப் பகுதி கழிந்து பல மாதங்கள் சென்று விட்டன. இன்னமும் எதுவித நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வில்லை.

தமிழ்ச் சேவைக்கு மட்டும் ஏன் இந்தப் பாரபட்சம்? தமிழுக்கும் தமிழருக்கும் இழைக் கப்படும் துரோகம் போதாதென்று இப்படி யும் ஒரு பாகுபாடா?

மாரிமுத்து யோகராஜன், அக்கரைப்பற்று-08.

## அஞ்சல் அலுவலக இலக்க அவஸ்த்தை!

(அக்குறணை நிருபர்)

இலங்கையின் முழு பாகங்களிலுமுள்ள அஞ்சல் அலுவலகங்களுக்கும் குறியீட்டு எண்கள் வழங்கி கடந்த சில மாதங்களாக அமுலில் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் மொழிச் சிக்கல் உள்ள பிரதேச மக்கள் பயனடைந்து வந்துள்ளனர். தங்கள் தங்கள் அஞ்சல் அலுவலக 'பின் கோட்' இலக்கங்களை விலாசங்களில் இட்டு முகவரிகளும் கொடுத்து தபால் போக்கு வரத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் திடீரென பல இடங்களில் உள்ள அஞ்சல் அலுவலக குறியீட்டு எண்கள் மாற்றப்பட்டுள்ளன.

இவ்விடயம் பெரும் சிக்கலை எதிர் நோக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாக்கியுள்ளது. பழைய பின்கோட்டைப் போட்டு அனுப்பும் கடிதங்கள் மாறி வேறு இடங்களுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள ளது. கொடுக்கப்பட்ட முகவரிகள் அத்தனை யையும் மீண்டும் மாற்றுவதென்பது இலகுவான காரியமல்ல. எனவே தபால் இலாகா இப்படியான அசௌகரியங்களை ஏன் ஏற்படுத்துகின்றது? பின் கோட் இல்லாமலேயே இருந்திருக்கலாம் என மக்கள் விசனப்படுவது சரியே!

## மின்னில்லாக் கம்பிகள்...?

பொத்துவில், இன்ஸ்பெக்டர் ஏத்தம் கிராமத்தில் அண்மையில் மேற்கொள்ளப் பட்ட மாதிரி கிராம செயற்திட்டத்தின் கீழ் இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதும் ஒன்று. இதன்படி மின் இணைப்புக்கள் யாவும் முடிந்து விட்டன. ஆனால், மின்சாரம் வழங்கப்படவில்லை. கம்பங்களில் இணைக்கப்பட்ட கம்பிகளால் இக்கிராமம் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றதே தவிர பலனேதுமில்லை. இந்த மின் வழங்கும் திட்டத்தினை பொறுப்பேற்ற பொறுப் புணர்ச்சியற்றவர்களின் செயலால் இக்கிரா மம் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது.

எனவே, இம் மின்சாரம் வழங்குவது தொடர்பான மேலதிகாரிகள் இனியாவது கரிசனை கொண்டு இத்திட்டத்தினை பூரணப் படுத்தி இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்க வேண்டுகிறோம்.

ஆர்.சாந்தசீலன்,
இன்ஸ்பெக்டர்ஏத்தம்,பொத்துவில்-03.

## விளம்பரப் பகுதி


**Bright ன் புலமைப்பரிசில் பரீட்சை**
மாணவர்கட்கு மலிவு விலையில் புத்தகப் பொதி

| | |
|---|---|
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 1-6 | 250.00 |
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 7-12 | 250.00 |
| புலமைப்பரிசில் மாதிரிவினா விடை | 100.00 |
| பொது விவேகமும் பாடநூல் | 75.00 |
| பொது உளச்சார்பு செயல்நூல் | 60.00 |
| மொத்தம் | 735 |
| Brightன் கழிவு | 235 |
| | 500 |

V.P.P. உண்டு தபாற் செலவு இலவசம்

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 First Floor P.O.Box - 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P:434770





**3 மாதத்தில் தீர்வு**

கணவன்-மனைவி பிணக்கு, பிரிந்தவர் ஒன்று சேர, காதலித்தவர் திருமணம் புரிய, தொழில் உயர்ச்சியை மேம்படுத்த, வீழ்ச்சியுற்ற தொழிலை வீழ்ச்சி அடையா மன்னம் இருந்த நிலைக்கு 3 மாதத்திற்குள் கொண்டு வர, எண்ணிய தொழில் கிடைக்க, திருமணமே ஆகாதென இருக்கும் உற்றோருக்கு தெய்வீக வரத்தால் திருமணம் நடைபெற இன்னும் முனிவர்களால் அருளிய ஜீவிய கால காண்டம்-நாடி ஜோதிடம் எழுதிக் கொள்ள, அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் காது கேளாதவர், கண் தெரியாதவர், வாய்பேச முடியாதவர்கள், பாரிச வாதம், முடக்கு வாதம் இடுப்பு வலி, அஸ்மா, படபடப்பு, வீரியமின்மை, பெண்களுக்கு வெள்ளைபடுதல், மாதவிடாய் கோளாறு, மனநோய் (ஹிஸ்டீரியா) குழந்தை பேறின்மை, பாலியல் குறைபாடுகள், ஞாபக சக்தி இன்மை, நித்திரை இன்மை, பசியின்மை, தலை முடி உதிர்தல், தோல் நோய் இப்படி தீர்க்க முடியாத வியாதிகளுக்கு மனோதத்துவ ரீதியிலும், வைத்திய முறையிலும், மாந்திரிக முறைகளிலும் வெற்றி கண்டவர். எத்தனை எத்தனையோ பேர்-இதைவிட பெரிய சக்தி வந்தாரை வாழவைக்கும் மகாசக்தி ஸ்ரீ துர்கா தேவியின் அருளால் வசதி அற்றோருக்கு எம்மாத கடைசியும் கொழும்பிலும், நுவரெலியாவிலும் இலவச அற்புத ஞான தியான பூஜை நடைபெறுகிறது. தேவைகளுக்கு முன் அறிவித்தலுடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு-

P.K.SAAMI (J.D.G.A.N) & J P, மலையாள மாந்திரீக உச்சாட பீடம்,
162, கொட்டாஞ்சேனை வீதி, லே பீல்ட் ரோட், கொழும்பு -13.
தொலைபேசி - 01.342463/64 344832 விசேட பிரிவு - 344831 EXT FAS



**UNION**
யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)
**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு. கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411



**Brightன் தபால் மூலம் கல்வித்திட்டம்**
மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.
பெயர்.........................
விலாசம்.........................
BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO 11. TEL : 434770


## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 | 10 | 1937



மறைவு 03 | 10 | 1985

### அமரர் கணபதி சுப்பிரமணியம்

*கண்ணீரால் அஞ்சலி*
*செலுத்தினால் காய்ந்துவிடும்!*
*மலரால் அஞ்சலி*
*செலுத்தினால் வாடிவிடும்!*
*எங்கள் இதயங்களால்*
*அஞ்சலி செலுத்துகின்றோம்!*
*தங்கள் ஆத்மா சாந்தியடைய*
*பிரார்த்திக்கின்றோம்!*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்**

மனைவி:- செல்வமணி சுப்பிரமணியம்
மகன்கள்:- கலீந்திரராஜன், கமலராஜன், விமலராஜன்
மகள்கள்:- கமலினி, செந்தினி
மருமகன்:- ரீ.இராஜகுமார் மருமகள்:-கவிதா


**சுங்கத்திணைக்களப் பரீட்சை**
1996 டிசம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படவிருக்கும்
தமிழ் மொழி மூல பரீட்சைக்கான வகுப்புக்கள்
**06.10.1996** அன்று ஆரம்பமாகும்
சுங்கப்பரிசோதகர் (ஆண்) தரம் II பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு
கல்வித்தகைமை: இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது G.C.E O/L or N.C.G.E பரீட்சையில் ஆங்கிலம், தமிழ், கணிதம் அடங்கலாக ஐந்து திறமைச் சித்திகள்.
வயதெல்லை: 18-40 இடைப்பட்டவராக இருத்தல்.
- வகுப்புக்கள் தேர்ச்சியும், அனுபவமுமுடைய விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும்.
- இலவச அச்சடித்த குறிப்புக்களும், மாதிரி வினாப்பத்திரங்களும் வழங்கப்படும்.
- விசேட தயார் நிலைப்படுத்தல் பரீட்சை.
- இலகு தவணைக் கட்டண வசதி.
- வகுப்புக்கள் ஞாயிறு தினங்களில் மட்டும் காலை 9.30-12.30 வரை நடைபெறும்.
- 12 வகுப்புக்களில் பாடத்திட்டம் முடிக்கப்படும்.

வகுப்புக்களும், விபரங்களும் நேரில் (ஞாயிறு தினங்களில் மட்டும்)
FINANCIAL TRAINING BASE (FTB)
C/O Prince College (Deepathuththaramaya)
Behind Kotahena Police Station,
159, Kotahena Street, Colombo-13.
Advt.



**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
**ரிஷி. S.மணி**
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030



**Bright - 1997 ஆண்டு மாணவர் களுக்கான ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைமுன்னோடிப் பயிற்சி**
Brightன் தபால் மூலம் கல்வி
**புதிய வெற்றிக்கனி 1-10**
புதியதோர் அமைப்பு, புதியதோர் உத்வேகம், அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியூடாக புதியதோர் வழிகாட்டல் நூலாக வெளிவரவுள்ளது.
புதிய வெற்றிக்கனியை தொடர்ச்சியாக பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவம் பெற தொடர்பு கொள்க.
Bright Book Centre (Pvt) Ltd
S-27, First Floor, P.O. Box 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P : 434770




படிப்பகம்

www.padippakam.com

# 'சத்ஜய'வும், வன்னிப் போர்முனையும்

கிளிநொச்சி நகரை படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர்.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் முதல் இரு கட்டங்களும் தோல்வியில் முடிந்திருந்தன.

முன்னேறுகிறோம் என்று அறிவித்துக்கொண்டிருந்த படைத்தரப்பினர் சத்தம் இல்லாமல் பின்வாங்கி பரந்தனுக்கு திரும்பினார்கள்.

மீண்டும் இப்போது 'சத்ஜய' மூன்றாம் கட்ட நடவடிக்கை மூலமாக கிளிநொச்சி நகரை படையினர் கைப்பற்றியுள்ளனர்.

'சத்ஜய' கட்டம் ஒன்றின்போதே கிளிநொச்சி நகரில் உள்ள மக்கள் வெளியேறிவிட்டனர். நகரமும் நரகமாகிவிட்டது.

படைத்தரப்பினர் கூறுவதுபோல கிளிநொச்சி புலிகளின் பிரதான தளமாக இருக்கவில்லை.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் போது புலிகளைப் பொறுத்தவரை கிளிநொச்சி ஒரு பரீட்சார்த்த களமாகவே இருந்தது.

வன்னியின் ஒருபகுதியாக கிளிநொச்சி இருந்தாலும், வன்னியில் புலிகளின் பிரதான தளம் அடர்ந்த காடுகள் சார்ந்த முல்லைத்தீவுக்குள்தான் இருக்கிறது.

ஆனையிறவில் இருந்து வவுனியா வரை படையினர் ஒரு தரைப்பாதையை அமைத்தால்கூட புலிகளின் பிரதான தளப்பகுதிக்கு பாதகம் ஏற்படப்போவதில்லை.

கிளிநொச்சியை கைப்பற்றிய படையினர் அடுத்ததாக வவுனியாவரையான தரைப்பாதை ஒன்றை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட முயற்சிக்கக்கூடும்.

புலிகளின் கடும் எதிர்ப்பையும், பெரும் இழப்பையும் எதிர்கொண்டே அவ்வாறான ஒரு நடவடிக்கையை படையினர் மேற்கொள்ள வேண்டி இருக்கும்.

யாழ் குடாநாட்டை கைப்பற்றும் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் படைத்தரப்பினருக்கு ஏற்பட்ட இழப்பை விட, 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள இழப்பு பாரியதாக இருக்கிறது.

சண்டை நடைபெற்ற தரை அமைப்பும், புலிகளின் உக்கிரமான பதிலடியும் யாழ் குடாநாட்டு போர்முனையில் இருந்து மாறுபட்டிருந்தது.

நீண்ட படைத் தொடர்மீது ஊடறுத்துத் தாக்கும் கரும்புலித் தாக்குதல் ஒன்றையும் புலிகள் மேற்கொண்டிருந்தனர். படைத்தரப்பில் நூறுபேர் வரை அத்தாக்குதலில் பலியானார்கள்.

சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே புலிகளால் ஊடறுத்து தாக்க முடிந்திருக்கிறது. இந்நிலையில் படையினர் நிலைகொண்டபின்னர் ஊடறுத்து தாக்குவது புலிகளுக்கு மேலும் சாதகமாக இருக்கும்.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் முதல் இரு கட்டங்களிலும் தமது தரப்பில் 85 புலிகள் பலியானதாக புலிகளின் தலைமைப்பீடம் அறிவித்திருந்தது.

'சத்ஜய' மூன்றாம் கட்ட நடவடிக்கையில் இதுவரை நூறுபேருக்கு உட்பட்ட பெயர் விபரங்களே புலிகள் தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினரால் தமது தரப்பு இழப்பு தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவித்ததின்படி 'சத்ஜய' மூன்று கட்டங்களிலும் குறைந்தது 400 படையினர் பலியாகி உள்ளனர். 'சத்ஜய' மூன்றாம் கட்டத்தில் புலிகள் தரப்பில் 700 பேர் பலியானதாக படைத்தரப்பினர் கணக்குச் சொல்லியுள்ளனர். முல்லைத்தீவில் தமது தரப்புக்கு ஏற்பட்ட இழப்பை கிட்டத்தட்ட ஈடுசெய்வதுபோல இக்கணக்கு காணப்படுகிறது.

புலிகளின் அணிகள் யாழ் குடாநாட்டில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது பின்வாங்கும் முடிவோடு போரிட்டன.

'சத்ஜய' இராணு நடவடிக்கையின் போது படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் உத்வேகத்துடன் புலிகளின் அணிகள் போரிட்டன.

'சத்ஜய' மூன்றாம் கட்டத்தில் படைத்தரப்பினர் தமது முழுப்பலத்தையும் பிரயோகித்தனர்.

புலிகளின் அணிகளை முடியுமானளவுக்கு அழித்தொழிக்கவும் படையினர் திட்டமிட்டனர்.

முல்லைத்தீவில் புலிகள் கைப்பற்றிய ஆட்டிலறிப் பீரங்கிகள் கிளிநொச்சி சண்டையில் பயன்படுத்தப்பட்டால் கண்டறிந்து அழித்துவிடவும் வான் மூலமான தேடுதல் நடத்தப்பட்டது.

வான் படையின் பாதுகாப்புடனும், தாக்குதலுடனும் தரைப்படைகள் பெருந்தொகையாக நகர்ந்தன.


ஏற்கனவே 'சத்ஜய' நடவடிக்கையின் இரண்டு கட்டங்களில் ஏற்பட்ட அனுபவங்களை வைத்து அதற்கேற்ப தமது தாக்குதலை திட்டமிட்டனர் படையினர்.

இந்நிலையில் கள நிலவரம் படையினருக்கு சாதகமானதாக மாறிக்கொண்டிருப்பதைக் கவனித்த புலிகளின் அணிகளுக்கு இரண்டு வழிகள் இருந்தன.

ஒன்று: மேலும் புதிய அணிகளை களத்தில் இறக்கிச் சண்டையைத் தொடருவது.

இரண்டு: கிளிநொச்சிவரை படையினர் முன்னேற அனுமதித்துவிட்டு பின்னர் தாக்குதல்களை தொடுப்பது.

முதல் வழியில் முயன்றால் பாரிய




ஆட்பலத்தை இழப்பதாகிவிடும். எனவே இரண்டாவது வழியை தெரிவு செய்தனர் புலிகள்.

29.09.96 அன்று பிற்பகல்தான் கிளிநொச்சி நகரம் படையினரின் கட்டுப்பாட்டில் சென்றது. 28.09.96 அன்றே புலிகளின் அணிகள் சண்டையில் இருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டன.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'சத்ஜய' இராணுவ நடவடிக்கை கட்டம் மூன்று இரண்டு வழிகளில் உடனடியான பலன்களை அறுவடை செய்து கொடுத் துள்ளது.

முல்லைத்தீவு சமரில் ஏற்பட்ட தோல்வியால் எதிர்க்கட்சியின் கண்டனங்களால் பாதிக்கப்பட்ட தனது 'இமேஜை' காப்பாற்ற ஒரு வாய்ப்பு. இது அரசியல் ரீதியான சாதகம்.

விலைவாசி ஏற்றங்கள் மற்றும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் மக்களுக்கும் கிளிநொச்சியை கைப்பற்றிய செய்தி ஒரு ஆறுதல் பரிசுபோல வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இராணுவரீதியான பலன். முல்லைச்சமரின் பின்னர் இராணுவ தரப்புக்கு உற்சாகம் கொடுத்து தொடர்ந்து போரில் ஈடுபடுத்த 'சத்ஜய' வெற்றி உதவும். அத்தோடு வன்னியில் புலிகளை தற்காப்பு நிலையில் வைத்திருந்து அவர்களது தாக்குதல் யுத்த முயற்சிகளை தடுப்பதும் படையினரின் நோக்கம்.

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றி விட்டதால், படையினர் தொடர்ந்தும் வன்னியில் நகராமல் தடுப்பதுதான் புலிகளின் முதற் கடமையாக இருக்கும். எனவே புலிகளின் பிரதான கவனமும், பிரதான அணிகளும் வன்னித் தள தற்காப்பில் குவிந்திருக்க வேண்டி ஏற்படலாம்.

அதன்மூலமாக யாழ் குடாநாட்டிலும் கிழக்கிலும் புலிகளின் அணிகளது எண்ணிக்கை அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று படைத்தரப்பினர் கணக்குப் போடலாம்.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதற்காக புலிகள் மேற்கொண்ட பதிலடி நடவடிக்கையின் உண்மையான நோக்கம் கிளிநொச்சி நகரைப் பாதுகாப்பதல்ல.

வன்னியில் படையினர் தமது நடவடிக்கைகளை மேலும் தொடர்வதற்கான நம்பிக்கையையும், உற்சாகத்தையும் பெறாமல் தடுப்பது தான் புலிகளின் நோக்கம்.

கிளிநொச்சி நகரை கைப்பற்றவிடாமல் தடுப்பது. அது முடியாவிட்டால் பலத்த இழப்புக்களுடன்தான் கைப்பற்ற முடிந்தது என்ற நிலையை ஏற்படுத்துவது என்பதுதான் புலிகளின் எண்ணம்.

தற்போது படைத்தரப்பினர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றிவிட்டனர்.

இந்நிலையில், நீண்ட நிலப்பரப்பில் கால் பதித்து நிற்பது ஆபத்தானது என்று படையினர் உணரத்தக்கதாக தமது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதே புலிகளின் தந்திரமாக இருக்கும்.

ஆனையிறவில் இருந்து பரந்தன் வரை படையினருக்கு பாதுகாப்பான பிரதேசம். பரந்தனில் இருந்து கிளிநொச்சிவரையான ஆறு கிலோமீட்டர் தூரம்தான் புலிகளின் ஊடறுத்து தாக்கும் நடவடிக்கைகளுக்கு படையினர் முகம் கொடுக்க வேண்டிய பகுதியாகும்.

அதுதவிர கிளிநொச்சி நகரில் மக்கள் இல்லாமல் இருப்பதால் புலிகள் மோட்டார் தாக்குதல்களையும் சரமாரியாக தொடருவார்கள்.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தின் பரப்பளவு கிட்டத்தட்ட 8885 சதுர கிலோமீட்டர். இதில் கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 1279 சதுர கிலோமீட்டர். ஆனால் கிளிநொச்சி மாவட்டத்திலும் ஒரு சிறு பகுதிதான் தற்போது படையினர் வசம் சென்றுள்ளது.


எனவே வன்னிப் போர்முனை நிலவரத்தை 'சத்ஜய' நடவடிக்கையின் வெற்றியை வைத்து மட்டும் கணிப்பிடமுடியாது.

—▫▫▫—

# கம்போடியாவில் கால்ஊன்றும் புலிகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்




புலிகள் இயக்கத்தின் வெளிநாட்டு வியாபாரத் தொடர்புகளுக்கு பொறுப்பாக இருப்பவர் கே.பத்மநாதன். கே.பி என்று சுருக்கமாக அழைக்கப்படுவார்.

பத்மநாதனின் புகைப்படம் உட்பட சகல விபரங்களும் இலங்கை அரசின் உளவுத்துறையிடம் இருக்கின்றன. சர்வதேசப் பொலிசாரான 'இண்டர்போல்' வசமும் பத்மநாதன் பற்றிய தகவல்கள் இருக்கின்றன.

ஆனாலும் பத்மநாதனை இதுவரை பிடிக்க முடியவில்லை. இண்டர்போல்கூட நெருங்கமுடியவில்லை.

பத்மநாதன் எல்லோருக்கும் கடுக்காய் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்.

காரணம் என்ன? பத்மநாதனின் புகைப்படத்தை வைத்துக்கொண்டு அவரைத் தேடினால் ஏமாற்றம்தான் மிஞ்சும்.

இப்போது அவரது தோற்றம் மாறியிருக்கிறது. சமீபத்தில் மிக இரகசியமாக பத்மநாதன் பிளாஸ்ரிக் சேர்ஜரி மூலம் தனது முகத்தை மாற்றிக்கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பத்மநாதன் இப்போது எப்படியான தோற்றத்தில் இருக்கிறார். எங்கே இருக்கிறார் என்ற இரகசியங்கள் பிரபாகரனுக்கு மட்டுமே தெரியும்.

சமீபத்தில் இலங்கை அரசுக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி பத்மநாதன் கம்போடியா நாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கம்போடியாவில் இருந்துதான் புலிகளுக்கு தேவையான ஆயுதங்களை பத்மநாதன் வாங்கிக் குவிக்கிறார். கம்போடியாவில் புலிகளின் தளம் ஒன்று இருக்கிறது. அதன் பொறுப்பாளரும் பத்மநாதன்தான் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தகவல்கள் கிடைத்ததும் இலங்கை அரசு உடனடியாக கம்போடிய பிரதமருடன் தொடர்பு கொண்டுள்ளது. அவரும் உடனடியாக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

உண்மையில் இரகசிய தளம் ஒன்றை வைத்திருக்கவும், ஏனைய நாடுகளைப் போல் இல்லாமல் வெளிநாட்டவர்கள் சுதந்திரமாக நடமாடவும் கம்போடியாவில் வாய்ப்புக்கள் அதிகம்.

உலகின் எந்தவொரு நாட்டில் இருந்தும் விசா இல்லாமலேயே கம்போடியாவுக்கு செல்ல முடியும். கம்போடியாவில் இறங்கிய பின்னர் 'என்றி விசா' எடுத்தால் போதும்.

கம்போடியாவைச் சூழ உள்ள தாய்லாந்து, பர்மா போன்ற நாடுகளுக்கு இலகுவாகச் செல்லக்கூடியதாக இருப்பதும் மற்றொரு வசதி.

கம்போடியாவில் உள்ள நிலமை வேறு நாட்டவர்களைக் காட்டிலும் இலங்கை-இந்தியா நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு சாதகமானது.

கம்போடிய மக்கள் திராவிட இனச் சாயலை உடையவர்கள். 11ம் நுற்றாண்டில் தமிழ் நாட்டில் இருந்து கம்போடியாவுக்கும் பல்லவர் ஆட்சி பரவியிருந்தது.

பல்லவர் ஆட்சிக்காலத்தில் கம்போடியாவில் இந்துக்கோவில்களும் கட்டப்பட்டன. கம்போடியாவில் உள்ள இந்துக்கோவிலான 'அங்கோர் வாட்' என்னும் ஆலயம் மிகவும் பிரமாண்டமானது. 5 கோபுரங்களையும், 5 பிரகாரங்களையும் கொண்டது. பிரகாரச் சுவர்களில் மகாபாரத, இராமாயணக் காட்சிகளைக் கொண்ட சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**இக்கோவிலில் உள்ள ஆச்சரியம் ஒன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். இரண்டாவது பிரகாரத்தின் வடக்கு வாயிலில் மூலஸ்தானத்தை பார்த்தவாறு நின்று நமது மார்பில் ஒரு முறை தட்டியதும் 'ஓம்' என்ற எதிரொலி கிளம்புமாம்.**

இதுதவிர அம்பாள் கோவில்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. பண்டைய தமிழ் இலக்கியங்களில் 'காம்போஜம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டதும் கம்போடியாதான்.

பௌத்த மதம் பரவியதைத் தொடர்ந்து கம்போடியாவில் சிவவழிபாடு அழிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

**கம்போடியாவின் பிரதமராக இருப்பவர் நோர்தம் சிஹநொக். அதன் தமிழ் அர்த்தம் என்ன தெரியுமா? நாரதன்-தர்மராஜா.**

கம்போடிய மக்களும் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது நம்மைப் போலவே கைகூப்பி வணக்கம் சொல்லுகின்றனர். கம்போடியாவில் கவரும் மற்றொரு அம்சம் அழகான பெண்கள். நீண்ட கூந்தலுடன் மிக அழகாகத் தோற்றமளிப்பார்கள். கம்போடியாவில் கவலைக்குரிய விடயம் போதைப் பொருள். போதைக் கடத்தலின் மையங்களில் ஒன்றாக இருக்கிறது கம்போடியா.

வட தாய்லாந்து, கம்போடியா மற்றும் பர்மா ஆகிய நாடுகளில் உள்ள அடர்ந்த காட்டுப் பிரதேசங்கள் 'தங்க முக்கோணம்' என்றழைக்கப்படுகின்றன. அங்குதான் போதைப்பொருள் உற்பத்தி வெகு தீவிரமாக நடக்கிறது.

போதைப் பொருள் கடத்தல்காரர்களையே கண்டுபிடித்து கைது செய்ய முடியாத கம்போடிய அரசு அங்கு புலிகளின் தளம் இருந்தால் அதனைக் கண்டுபிடிக்க முடியுமா என்பது சந்தேகம் தான்.

அதுதவிர கம்போடியாவில் 'கெமர் ரோக்' என்னும் தீவிரவாத இயக்கமும் இருக்கிறது. அவ்வியக்கத்தின் ஒரு பகுதியினர் அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர். மறுபகுதியினர் தலைமறைவாக செயற்படுகின்றனர். விமான எதிர்ப்பு ஆயுதங்களான 'சாம் 7' ரக ஆயுதங்கள் அவர்களிடம் தாரளமாக உள்ளன.

அந்தப் பிரிவினருடனும் புலிகளுக்கு தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அது தவிர கம்போடிய இராணுவத்தில் உள்ள அதிகாரிகள் சிலரும் இரகசியமாக ஆயுத வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்குத் தேவையானது பணம்.

கம்போடியாவை புலிகள் தளமாக வைத்திருக்க பூகோள நிலையும் ஒரு காரணம் என்று கருதப்படுகிறது.

கம்போடியாவில் இருந்து தாய்லாந்திற்கு வந்தால் அங்கு புக்கெற் என்றொரு தீவு இருக்கிறது. முல்லைத்தீவுக்கு கிழக்குப்பக்கமாக அத்தீவு அமைந்துள்ளது. அங்கிருந்துதான் கப்பல் மூலம் முல்லைத்தீவுக்கு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டதாக நம்பப்படுகிறது.

தாய்லாந்திலும் புலிகளின் நடமாட்டம் காணப்பட்டதாக முன்னர் வெளியான செய்திகளும் அந்தச் சந்தேகத்துக்கு வலுவூட்டுகின்றன.

கம்போடிய அரசு ஒரு பேருக்கு விசாரணை நடத்தினாலும்கூட, கம்போடிய நாட்டுச் சூழலும், கம்போடிய இராணுவ அதிகாரிகளுடன் உள்ள தொடர்பும் புலிகளுக்கு சாதகமாகவே இருக்கும்.

ஆனால் தற்போதுள்ள பிரச்சனை முல்லைத்தீவு கடலுக்குள் புலிகளின் கப்பல்கள் வந்துசேருவதுதான். இந்திய கடற்படையின் தீவிர ரோந்தும் புலிகளுக்கு ஒரு தடையாக உள்ளது. ○

# அதிரடி அய்யாத்துரை



கிழக்கில் கூட்டான கட்சியின் சிங்கத்தார் வீட்டுக்குப் போன் செய்தால் பெரும்பான்மையின மொழியில் பதில் சொல்லப்படுகிறதாம். பாதுகாவலர்கள் தான் பதில் சொல்லுகினமாம். போன் எடுப்பவர்கள் மொழி புரியாமல் தடுமாறுகிறார்களாம். தேர்தல்காலத்தில் மட்டும் ஊருக்கு ஒரு தேர்தல் ஏஜன்ட் நியமிக்க ஆளிருந்தது. இப்போது போனுக்கு பதில் சொல்லமட்டும் ஒரு ஆள் கிடைக்காமல் போயிட்டுதாக்கும் எண்டு பாதிக்கப்பட்டவை முணுமுணுக்கினமாம்.

ஆசிரிய நியமன விடயத்தில் கிழக்கில் தமிழ் வெகுஜனப் பிரதிநிதிகள் புகுந்துவிளையாடியிருக்கினமாம். திறமையும், தகுதியும் உள்ளவர்கள் ஓரம்கட்டப்பட்டு சிபாரிசுகளால் பின்கதவு வழியாக நியமனங்கள் நடக்கலாமோ எண்டு பலர் குமுறிக்கொண்டு இருக்கினமாம். நோட்டுகளும் கைமாறியிருப்பதாக நம்பகமான தகவல். விஷயம் ரெண்டு எழுத்தார் காதுக்கும் போயிருக்குதாம்.

யாழில் பாலும், தேனும் பாய்ந்தோடுமோ? சமாதானம் மலருமோ? எண்ட எதிர்பார்ப்புகள் எந்தக் காலத்தில் நிறைவேறும் எண்ட கேள்விகளுக்கு யாருக்கும் விடைதெரியாது. யாழில் இப்போது கள்ளச் சாராயம் மட்டும் தாராளமாக பாய்ந்தோடுகிறதாம். ரெண்டு எழுத்தார் இருந்தபோது பதுங்கியிருந்த கசிப்பு உற்பத்தி நிபுணர்கள் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கினமாம். 'குடிமக்கள்' வாசனையோடு திரிகிறார்கள். அவர்களுக்கென்ன; ஜனநாயக உரிமை கிடைத்துவிட்டதல்லோ.

கரும் பெண் ரெண்டு எழுத்தார் எண்ட சந்தேகத்தில் கர்ப்பிணிகள்தான் கடும்சோதனைகளைச் சந்திக்கினமாம். கர்ப்பிணிகளைக் கண்டாலே பாதுகாப்பினர் கடும் உஷாராகிவிடுகிறார்களாம். உண்மையோ பொய்யோ எண்டு தீவிர ஆராய்ச்சி நடக்குதாம். நல்ல காலம் பாருங்கோ; 'ஸ்கேன்' பண்ணி உள்ளே இருப்பது பசுவோ புலியோ எண்டு பார்க்காமல் இருக்கிறதே பெரிய விஷயம்தானே.

திருவானமலையில் தங்கமான பெயர்கொண்ட பிரதிநிதி பல்வேறு வழிகளில் அட்டகாசமாக சுழியோடி வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கிறாராம். காணிக்கைகள் பரிமாறப் படுகிறது எண்டு அவரது எதிர்த்தரப்பு வட்டாரம் சொல்கிறது. 'பிரிப்பு விடயத்திலும் மறைமுக ஆதரவு கொடுக்கிறார். அவர் விடயத்தில் கவனமாக இருங்கோ' எண்டு ரெண்டு எழுத்தாருக்கு ஒரு பிரமுகர் மூலம் தகவல் அனுப்பியிருக்கிறதாம் எதிர்த்தரப்பு. தங்கமானவருக்கும் விசயம் தெரிந்து தனது தரப்பு நியாயத்தையும் ரெண்டு எழுத்தாரின் கவனத்துக்கு எட்டவைத்திருப்பதாகத் தகவல். தம்பிமாரும் இல்லாட்டி அண்ணர்மாரை கையில் பிடிக்கேலாது.

ஒருங்கிணைப்புக் குழு விவகாரத்திற்கு உள்ளிருந்து யோசனை சொன்னவர் நிலமானவர்தானாம். அதனால்தான் கூட்டான கட்சியினர் உடனடியாக கருத்து எதுவும் வெளியே சொல்லாமல் கழுவுற நீரில் நழுவுறமீனாக நடந்து கொண்டவை. ஒரு முக்கியமான பிரச்சனையில் ஒரு முக்கியமான கட்சி மட்டும் கருத்துச் சொல்லாமல் இருந்தால் என்ன அர்த்தம்? எடுத்ததுக்கு எல்லாம் அறிக்கை விடும் கட்சி ஒருங்கிணைப்பு விடயத்தில் கப்சிப்பாக இருப்பதே எங்கப்பன் குதிருக்குள் இல்லையெண்ட கதைதானே பாருங்கோ.

பரந்தன் சண்டை விடயத்தில் ஸ்கோர் சொல்லிப்போட்டு இரவோடு இரவாக எரிபொருள் விலையை ஏற்றிப்போட்டினம். சண்டையில் ஸ்கோர் உயர்த்திச் சொன்னாலும் விலைவாசி ஏறுது. கிரிக்கெட்டில் இலங்கை அணியின் ஸ்கோர் உயர்ந்தாலும் அந்த ஆரவாரத்திற்குள் விலையேற்ற அறிவிப்புக் கேட்குது. இலங்கை அணி வெல்லுவது சந்தோசமாக இருந்தாலும் அதனோடு சேர்த்து விலைகளும் ஏறிப்போடுமோ எண்டு சனம் பயப்படுகிறமாதிரித் தெரியுது.

பெற்றோல் விலை ஏற்றம் சாதாரணமக்களை பாதிக்கமாட்டாது எண்டு அதிகாரத்தரப்பினர் சொல்லுகினம். பெற்றோல் வாகனம் வைத்திருப்பவையெல்லாம் கோடீஸ்வரர்களோ? ஓட்டோவும் பெற்றோலில்தானே ஓடுது. டீசல் பத்துசதத்தால் விலையேறினால் மரக்கறிவகைகள் ஐம்பது சதத்தால் விலை உயருது. முன்னது அறிவிப்புடன் உயரும். பின்னர் அறிவிப்பேயில்லாமல் உயரும். இன்னொரு விஷயமுங்கோ, பாண்விலை உயர்வு நேரத்திலை தொலைக்காட்சியில் வாட்டசாட்டமான பாண் ஒன்றைக் காட்டினவை. நானும் கடைகடையா தேடிப்பார்த்தேன். ம்ஹூம் வாட்டசாட்டமான பாணைக் கண்ணிலும் காணேல்லை. எங்காவது கண்டால் தயவுசெய்து தெரிவிக்கவும்.

படித்தவுடன் மனதில் இடம்பிடித்துவிடும் புதுக்கவிதைகளில் ஒன்று இது. எழுதியவர் தருமு சிவராமு என்னும் தமிழகக் கவிஞர்.

**விடிவு**

"பூமித் தோலில்
அழகுத் தேமல்.
பரிதி புணர்ந்து
படரும் விந்து.
கதிர்கள் கமழ்ந்து
விரியும் பூ
இருளின் சிறகைத்
தின்னும் கிருமி.
வெளிச்சச் சிறகில்
மிதக்கும் குருவி"



படிப்பகம்

www.padippakam.com

## அரசியல் தொடர்
### அற்புதன் - எழுதுவது

# ராஜீவைக் கொல்லத் தீட்டப்பட்ட திட்டம்?

**காமினியின் பங்கு**

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது என்ற செய்தி தென்னிலங்கையில் காட்டுத் தீயாகப் பரவியது.

அரசாங்கத்துக்கு எதிரான சக்திகள் இந்திய-இலங்கை ஒப்பந்தம் தமிழர்களுக்குச் சார்பான ஒப்பந்தம் என்று பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பாக எதுவும் தெரிந்திருக்கவில்லை.

அமைச்சரவையில் இருந்தவர்களில் சிலருக்கும் ஒப்பந்தம் தொடர்பாகத் தெளிவு இருக்கவில்லை.

பிரதமர் பிரேமதாசாவும் அவரது ஆதரவாளர்களும் ஒப்பந்தம் தொடர்பாக ஜே.ஆர்.மீது கடுமையான அதிருப்தியில் இருந்தனர்.

அமைச்சரவையில் இருந்தவர்களில் காமினி திசநாயக்கா இந்தியாவின் நண்பர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்குவதில் காமினி திசநாயக்கா வகித்த பங்கையும் குறிப்பிட்டாக வேண்டும்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராகவும் இருந்தவர் காமினி திசநாயக்கா. இலங்கை-கிரிக்கெட் விளையாட்டில் சிறப்பான ஒரு இடத்தைப் பெறுவதற்கு காமினி திசநாயக்காவும் ஒரு முக்கியமான காரணம்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவரான காமினிக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத்தலைவராக அப்போதிருந்த என்.கே.பி.சால்வேக்கும் நெருக்கமான நட்பு இருந்தது. சால்வே இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்கும் நெருக்கமானவர்.

சால்வேக்கும் 'இந்து' பத்திரிகை ஆசிரியர் என்.ராமுக்கும் இடையே நட்பு இருந்தது. ராம் இந்திய அரசியல் பிரமுகர்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்.

என்.ராம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு ஆதரவானவராக அப்போது செயற்பட்டார். பிரபாகரன்மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார்.

மார்க்சிய சிந்தனையாளரான ராம் முதலில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆதரவாளராக இருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் முரண்பாடு ஏற்பட்டு பிளவு தோன்றியபின்னர் விடுதலைப் புலிகளை ஆதரித்தார் என்.ராம்.

'ஹிந்து' ஆங்கிலப் பத்திரிகையிலும், 'ஃபுரொன்ட்லைன்' சஞ்சிகையிலும் விடுதலைப் புலிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் செய்திகள் வெளியாகின. பிரபாகரனின் பேட்டிகளும் வெளியாகின.


என்.ராமை காமினி திசநாயக்காவுக்கு அறிமுகப்படுத்திவைத்தார் சால்வே.




ஜூலை 16ம் திகதி தனக்கு நெருக்கமான அமைச்சர்களின் கூட்டமொன்றை கூட்டினார் ஜே.ஆர். அக் கூட்டத்தில் திக்ஷித்தும் கலந்து கொண்டார். ஒப்பந்தம் தொடர்பாக தனது சகாக்களுக்கு விளக்கமளிப்பதற்காகவே திக்ஷித்தை அழைத்திருந்தார் ஜே.ஆர்.

அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியத்தூதர் திக்ஷித் கலந்துகொண்ட செய்தி எப்படியோ வெளியே தெரிந்துவிட்டது.

ஜே.ஆர். இந்தியாவிடம் நாட்டை அடகு வைக்கப்போகிறார். அமைச்சரவை கூட்டத்தில் திக்ஷித்துக்கு என்ன வேலை? என்றெல்லாம் ஜே.ஆரின் விரோதிகளும், அரசுக்கு எதிரானவர்களும் கதைகளைப் பரப்பத் தொடங்கினார்கள்.



1987 ஜூன் பிற்பகல் 4.55க்கு யாழ்ப்பாணத்தில் இந்திய விமானங்களில் இருந்து பாராசூட் மூலம் இறங்கும் நிவாரணப்பொருட்கள்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் அநுரா பண்டாரநாயக்கா.

'இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பில் அநுரா ஒரு புத்தகம் எழுதி அவசர அவசரமாக வெளியிட்டார்.

அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருந்த கருத்துக்கள், இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வில் இங்குள்ள பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் எவ்வாறு எதிரும் புதிருமாகச் செயற்பட்டன என்பதற்கும், தங்கள் அரசியல் நலன்களுக்காக உண்மையிலிருந்து வெகு தூரம் விலகி மக்களுக்கு எவ்வாறு பொய்யான சித்திரத்தை காண்பித்தன என்பதற்கும் ஒரு உதாரணமாகும்.

அநுரா எழுதிய பத்தகத்தில் உள்ள முக்கிய விடயங்கள் இவைதான்:

".....சிறீலங்காவின் மூன்றில் ஒரு பங்கினைத் தமது உடமையாக்கிக் கொள்ள தமிழ் பயங்கரவாதிகள் வருடக்கணக்கில் போரிட்டு வருகிறார்கள். மக்களின் இரத்தத்தை சிந்த வைக்கிறார்கள். அவர்கள் கோரியதற்கு மேலதிகமாகவே ஒப்பந்தத்தின் மூலம் பெற்றுவிட்டார்கள். தமிழ் பயங்கரவாதிகளின் இரத்தவெறிபிடித்த போராட்டத்துக்கு இந்தியா உதவியது.

இந்த உதவியின் நோக்கமே எமது வெளிநாட்டுக் கொள்கையையும், பாதுகாப்புக் கொள்கையையும் இந்தியா தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புவதேயாகும். இந்த ஒப்பந்தம் மூலமாக இந்தியாவின் நோக்கம் தேவைக்கு அதிகமாகவே நிறைவேறிவிட்டது.

ஏறத்தாழ 450 வருடங்கள் அந்நிய நாட்டவர்களான போர்த்துக்கீசர், டச்சுக்காரர் மற்றும் பிரிட்டிஷாரின் அடிமைகளாக இருந்து விடுபட்டு ஆக 40 ஆண்டுகள் மட்டுமே சுதந்திரமாக வாழ்ந்து 1987 ஜூலை 29ம் திகதி இந்தியாவின் காலனி என்ற நிலை உருவாகியிருக்கிறது.

இத்துரோகச் செயலை முலாம்பூசி மறைக்க முடியாது." இதுதான் அநுராவின் நூலில் காணப்பட்ட முக்கிய விடயங்கள்.

1971ல் தென்னிலங்கையில் ஜே.வி.பி கிளர்ச்சி ஏற்பட்டது. அதனை அடக்குவதற்கு இந்தியாவின் உதவியைப் பெற்றவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா. அப்போது சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசாங்கம்தான் பதவியில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**ராஜீவுக்கு கடிதம்**

ராஜீவ் காந்தியின் வருகையை பகிஷ்கரிப்பது தொடர்பாக கடிதம் ஒன்றை எழுதிய அநுரா, அதனை ஜூலை 29ல் இந்தியத் தூதரகத்தில் ஒப்படைத்தார்.

அக்கடிதத்தில் காணப்பட்ட பிரதான வாசகங்கள் இவை:

அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு:

முப்பது வருடங்களுக்கு முன்னர் எனக்கு எட்டுவயதாக இருக்கும்போது பெருமைக்குரிய தங்கள் பாட்டனார் ஜவஹர்லால் நேரு இலங்கைக்கு வந்திருந்தார். அப்போது விமானநிலையத்தில் அன்னாருக்கு மாலை சூட்டி வரவேற்றேன். அதனைத் தொடர்ந்து தங்கள் பாட்டனாரையும், தங்கள் தாயாரையும் எனது தந்தையாரும், தாயாரும் பல தடவைகள் வரவேற்றுள்ளனர்.

ஆனால் இந்தியாவின் பிரதமராக தாங்கள் முதன் முதலாக சிறீலங்காவுக்கு வருகை தரும்போது தங்களை வரவேற்க நான் வரப்போவதில்லை.. அத்துடன் தங்களைக் கௌரவிக்கும் எந்த நிகழ்ச்சியிலும் பங்குபற்றப் போவதில்லை.

தாங்கள் இன்று ஒப்பமிடவுள்ள ஒப்பந்தத்தை சிறீலங்கா மக்கள் வன்மையாக எதிர்க்கிறார்கள். 24 மணிநேரத்திற்கு முன்பு 20 பேர் பொலிசாரால் படுமோசமாகக் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். ஒப்பந்தத்துக்கு எதிராக அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் அவர்கள்.

கொழும்பு நகரம் குழப்பங்களினால் அல்லோலகல்லோலப்படுகிறது. தாங்கள் நாட்டை விட்டுப் புறப்படும்வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்திரா காந்தியின் மகனை எனது நாட்டு மக்கள் வழக்கமாக வரவேற்கும் முறை இதுவல்லவே!

ஜனாதிபதி ஜயவர்த்தனா தனது அமைச்சரவையின் கருத்துக்கு மாறாக ஒப்பந்தத்தில் ஒப்பமிட முன்வந்துள்ளார்.

அண்மைக்கால அநுபவங்களில் இருந்து இத்தகைய ஒப்பந்தங்களின் தலைவிதி எவ்வாறு இருக்கும் என்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். ஆட்சியாளரின் கர்வத்தினால் ஏற்படக்கூடிய நிலமைகளை மீறி மக்களின் கருத்துக்கள் மேலோங்கும் என்பதை வரலாறு நிரூபிக்கும்.

எமது இரு குடும்பங்களும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மிக நெருக்கமான உறவு பூண்டிருந்தமையால் இக்கடிதத்தை தங்களுக்கு எழுத எண்ணினேன்."

**பிரபா கூறியது**

ராஜீவ் காந்தி கொழும்புக்கு வருகிறார். பிரபாகரன் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி பிரபாகரனை அனுப்பி வைக்குமாறு இந்திய அரசை கோருவதற்கு முடிவு செய்தனர் புலிகள்.

ஒப்பந்தம் கைச்சாத்தாகி இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தில் தரை இறங்கிய பின்னரே பிரபாகரனை யாழ்ப்பாணம் செல்ல அனுமதிப்பது என்பது இந்திய அரசின் திட்டம்.

அதற்கு முன்னர் பிரபாவை யாழ்ப்பாணம் செல்ல அனுமதித்தால் அவர் எவ்வாறு நடந்து கொள்வாரோ என்று இந்திய அரசுக்கு சந்தேகம்.

இந்தியாவில் இருந்து பிரபாகரன் புறப்படுவதற்கு முன்னர் இந்திய இராணுவத்தில் தென்பிராந்திய கொமாண்டுக்குப் பொறுப்பான லெப்டினன்ட் ஜெனரல் திபிந்தர்சிங்கைச் சந்தித்தார். இருவருக்கும் இடையே யோகி மொழி பெயர்ப்பாளராக இருந்தார்.

ஒப்பந்தத்தை ஆதரிப்பது நன்மை தரும் என்று திபிந்தர்சிங் பிரபாகரனிடம் கூறினார்.

பிரபாகரன் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியாக விடைபெறும்போது திபிந்தர்சிங்கிடம் பிரபாகரன் கூறியது இது;

"இனிமேல் ஒருபோதும் 'றோ'வையோ, இந்திய வெளியுறவு அமைச்சையோ நான் நம்பப்போவதில்லை. அவர்கள் எங்களை ஏமாற்றிவிட்டார்கள்!"

1987 ஜூலை 29-பகல் 11 மணிக்கு ராஜீவ் காந்தி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கினார். அவருடன் 'றோ' உளவுப்பிரிவின் அதிகாரிகள் மற்றும் பிரதமர் அலுவலக அதிகாரிகள் வந்திறங்கினார்கள்.

இலங்கை விமானப்படை விமானம் மூலமாக கட்டுநாயக்காவில் இருந்து காலிமுகத்திடலுக்கு அழைத்துவரப்பட்டார் ராஜீவ் காந்தி.

கொழும்பில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தது.

**ஒப்பந்தம்**

இந்தியப்பிரதமருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்தியா தன்னிச்சையாக தலையிட்டு உணவுப்பொதிகளை போட்டதையிட்டு பின்வருமாறு கூறினார்:

**"இந்தியா செய்ததை நான் மன்னிக்கிறேன், ஆனால் மறக்கமாட்டேன்!"**

பிற்பகல் 3.37 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஒப்பந்தத்தில் ராஜீவ்காந்தியும், ஜே.ஆரும் கையொப்பமிட்டுக் கொண்டிருக்க,

இந்தியாவில் சென்னையில் இருந்து இந்தியப் படை புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. தாம் எதிர்நோக்கப் போகும் மாபெரும் கெரில்லா போர் பற்றி அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

(தொடர்ந்து வரும்)

இத்தனையும் நடந்துகொண்டிருந்தபோது பிரதமர் பிரேமதாசா நாட்டில் இருக்கவில்லை. இலண்டனுக்கும், ஜப்பானுக்கும் போயிருந்தார்.

பிரேமதாசாவின் வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றி ஜனாதிபதிக்கு முன்கூட்டியே தெரியும். பிரேமதாசா வெளிநாட்டில் இருக்கும் காலகட்டத்தில்தான் ஒப்பந்தத்தை செய்ய வேண்டும் என்று கச்சிதமாக திட்டமிட்டே ஜே.ஆர். காய்களை நகர்த்தினார் என்றும் சொல்லப்பட்டது.

ஜே.ஆர். எட்டடி பாய்ந்தால் பதினாறடி பாயக்கூடியவர் பிரேமதாசா. ஒப்பந்தம் ஒன்றுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதை அவரது சகாக்கள் அறிவித்திருப்பார்கள். பிரேமதாசா நினைத்திருந்தால் உடனே நாட்டுக்குத் திரும்பியிருக்கலாம்.

அப்படித் திருப்பிவந்தாலும் ஒப்பந்தம் செய்யப்படுவதை தடுக்க முடியாது. அதனை விட வெளிநாட்டில் இருந்துவிட்டால் பின்னர் ஒப்பந்தத்துக்கும் தனக்கும் ஒரு தொடர்புமில்லை என்று சொல்லக்கூடியதாக இருக்கும் என்று கருதியிருப்பார்.

அணிவகுப்பு மரியாதை வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**கொலைத்திட்டம்**

படையினர் மத்தியிலும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாகவும், இந்தியத் தலையீடு தொடர்பாகவும் அதிருப்தி ஏற்பட்டிருந்தது.

'ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கை மூலமாக யாழ் குடாநாட்டை கைப்பற்றியிருக்கலாம். இந்தியா தலையிட்டு அதனைக் கெடுத்துவிட்டது என்பது படையினர் மத்தியில் ஏற்பட்ட அதிருப்திக்கு முக்கிய காரணமாக இருந்தது.

டென்சில் கொப்பேக்கடுவ போன்ற படை உயர் அதிகாரிகளும் "இந்தியா மட்டும் தலையிட்டிருக்காவிட்டால் நாம் யாழ் குடாநாட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்போம்" என்றே அபிப்பிராயம் தெரிவித்தனர்.

ராஜீவ் காந்திக்கு கடற்படை அணிவகுப்பு மரியாதை வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டதும், கடற்படைக்குள் இருந்த கீழ்மட்ட வீரர்கள் சிலருக்கு ஒரு யோசனை தோன்றியது.

'அணிவகுப்பு மரியாதையில் வைத்து ராஜீவ் காந்தியைக் கொன்றுவிட்டால் என்ன?' அதுதான் யோசனை.

இந்த சதித்திட்ட யோசனையில் ஈடுபட்ட குழுவினருக்கு தலைவர் விஜிதமுனி.

விஜிதமுனிக்கு அப்போது 19 வயது. முழுப்பெயர் விஜிதமுனி ரோகண டி சில்வா.

அணிவகுப்பு மரியாதை வழங்கும் கடற்படைப்பிரிவில் விஜிதமுனியும் இருந்தான். விஜிதமுனியும், அணிவகுப்பு மரியாதையில் கலந்துகொள்ளும் மற்றும் இரு கடற்படை வீரர்களும் சேர்ந்து ராஜீவைக் கொலை செய்வது என்று முடிவானது.

அணிவகுப்பு மரியாதையில் கலந்து கொள்ளும் வீரர்களிடம் துப்பாக்கி இருக்கும். துப்பாக்கிகளுக்குள் தோட்டாக்கள் இருக்காது.

அணிவகுப்பு மரியாதைக்கு செல்வதற்கு முன்னர் கலந்துகொள்ளும் வீரர்களின் துப்பாக்கிகள் பரிசோதிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவர்.

அதனால் ராஜீவ் காந்தியை சுட்டுக் கொல்ல முடியாது. அப்படியானால் என்ன செய்யலாம்?

விஜிதமுனி ஒரு யோசனை சொன்னான். துப்பாக்கியில் தோட்டா இருக்காது. துப்பாக்கியின் முனையில் 'பேனற்' கத்தி இருக்கும். அதனால் குத்தினால் ஆள் காலி.

"முதலில் நான் துப்பாக்கியால் ராஜீவ் காந்தியின் தலையில் அடித்து வீழ்த்துவேன். அதே நொடியில் அணிவகுப்பில் உள்ள ஏனைய இருவரும் பாய்ந்து ராஜீவ் காந்தியை பேனற் கத்தியால் குத்தவேண்டும்." அதுதான் திட்டம்.

திட்டத்தோடு அணிவகுப்பு நாளை எதிர்நோக்கிக் காத்திருந்தனர் மூவரும்..

ஜூலை 29-1987. அன்றுதான் ராஜீவ் காந்தி இலங்கைக்கு விஜயம் செய்ய ஆயத்தமானார்.

ராஜீவை வரவேற்க இலங்கை அரசாங்கம் தயாராகிக்கொண்டிருந்தது.

**அநுராவின் புத்தகம்**

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ராஜீவின் வருகையை பகிஷ்கரிக்க முடிவெடுத்தது.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# ஒப்பந்தமும்-படை தயார்நிலையும்



சால்வே, என்.ராம் ஆகியோர் மூலமாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடனும், இந்திய அரசியல் தலைவர்களுடனும் நட்பை உருவாக்கிக்கொண்டார் காமினி திசநாயக்கா.

இந்தியாவின் உதவியுடன்தான் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வினைக் காணமுடியும் என்பதை ஜே.ஆர்.ஜயவர்த்தனாவுக்கு கூறிவந்தவர்களில் முக்கியமானவர் காமினி திசநாயக்கா.

**உள்முரண்பாடு**

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் சீடர்கள்போல இருந்தவர்கள் அத்துலத் முதலியும், காமினி திசநாயக்காவும்.

காமினிக்கும், அத்துலத் முதலிக்கும் பிரதமர் பிரேம்தாசாவோடு பனிப்போர் இருந்தது.

இந்திய-இலங்கை ஒப்பந்த விடயத்திலும் காமினி திசநாயக்கா ஜே.ஆர் பக்கம் நின்றார். பிரேமதாசா நேர் எதிராக இருந்தார்.

ஒப்பந்த ஷரத்துக்களை தயாரித்தவர் இந்தியத்தூதர் திக்ஷித். இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தில் திக்ஷித் ஒப்பந்த ஷரத்துக்களை தயாரித்துக் கொண்டிருந்தபோது அவரை அடிக்கடி சந்தித்த ஒரே ஒரு அமைச்சர் காமினி திசநாயக்கா.

ஒப்பந்த நகல் தயாரானதும் திக்ஷித் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவையும், காமினி, அத்துலத் முதலி ஆகியோரையும் சந்தித்தார்.

**ஜே.ஆரின் மிரட்டல்**

அமைச்சரவைக்குள் தனக்கு எதிரானவர்களின் வாய்களை மூடிவைப்பதற்காக ஒரு கட்டத்தில் ஜே.ஆர். பின்வருமாறு கூறினார்:

**"ஒப்பந்தம் தொடர்பாக நாம் ஒருமித்த கருத்தை எட்டியிருக்கிறோம். இதற்கு எதிரானவர்கள் தாராளமாக வெளியேறலாம். கதவு திறந்துதான் இருக்கிறது."**

யாரும் வெளியேறவில்லை. பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் கட்சிக்குள் இருந்தபடியே கூறினார்கள்;

"ஜே.ஆர். நாட்டை விற்றுவிட்டார்"

ஆளும் கட்சிக்குள்ளும், ஆளும் கட்சிக்கு எதிரானவர்களிடமும் ஒப்பந்தம் தொடர்பாக எதிரான கருத்துக்கள் இருந்தமையால் நாட்டின் தென்பகுதியில் கலவரங்கள் ஏற்படலாம் என்று அஞ்சப்பட்டது.

இந்த நிலவரத்தை இந்திய உளவுப் பிரிவுகளும் அறிந்துகொண்டு இந்தியப் பிரதமருக்குத் தெரிவித்தன.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இலங்கைக்கு செல்வது பாதுகாப்பானதல்ல என்று இந்திய உளவுத்துறை அறிவுறுத்தியது.

என்ன நடந்தாலும் சரி இலங்கைக்குச் சென்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது என்ற முடிவில் பிடிவாதமாக இருந்தார் ராஜீவ் காந்தி.

ராஜீவ் காந்தி இலங்கைக்கு வரப்போகிறார் என்ற செய்தி பரவியது. வரவேற்பு வழங்கவும், பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவும் பொலிசாரும் முப்படைகளும் உஷார்படுத்தப்பட்டன.

ராஜீவ் காந்திக்கு கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதை வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது– இராஜதந்திரி

# சத்ஜய–3: தாக்குதல்!

## தற்பாதுகாப்பை மேற்கொள்ளும் தந்திரம்



'சத்ஜய-3' என்ற பெயரில் ஆயுதப்படையினர் பரந்தனிலிருந்து கடந்த 22ந் திகதி இராணுவ நடவடிக்கையொன்றை ஆரம்பித்திருந்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் இழப்பு விபரங்களை கொழும்பிலுள்ள பாதுகாப்புப்படை தலைமையகத்தினால் வெளியிடப்படும் செய்தி அறிக்கைகள் மூலமாகவே அறியமுடிகின்றது.

உண்மை நிலபரங்கள் குறித்து அறிவதற்கு செய்தித் தணிக்கை என்ற விடயம் பெருந்தடையாக இருந்துவருகின்றது.

ஆயினும் இத்தடையையும் மீறி சில செய்திகளை அறிவித்தே தீரவேண்டிய நிர்ப்பந்தத்தில் ஆயுதப்படையினர் இருக்கின்றனர்.

அத்தகைய செய்திகளில் ஒன்றே யாழ்ப்பாணக் குடாநாட்டில் கைதடிப் பகுதியில் டிரக் வண்டியொன்று எல்.ரி.ரி.ஈ.யினர் வைத்த 'கிளேமோர்' கண்ணிவெடியில் சிக்கியதும், அந்த வண்டியிலிருந்த சுமார் 15 படையினர் கொல்லப்பட்ட சம்பவமுமாகும்.

இது தவிர கனரக வாகனங்கள், விமான கடற்படையினரின் துணையுடன் சத்ஜய-3 துருப்பினர் தாக்குதல்களை மேற்கொண்ட போதிலும் எல்.ரி.ரி.ஈ.யினரின் கடும் பதிலடியை எதிர்கொள்ள வேண்டியிருந்ததெனவும் இராணுவத்தலைமையகம் அறிவித்துள்ளது.

சத்ஜய-3 இராணுவ நடவடிக்கையில் படையினர் தரப்பிலும் பெருமளவானோர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அத்துடன் மேலும் அநேகர் காயமடைந்திருக்கலாமெனவும் ஊகிக்கப்படுகின்றது.

அதேசமயம் புலிகள் தரப்பிலும் இழப்புகள் பலமாகவே இருப்பதாக படையினர் வெளியிட்டுவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சத்ஜய-3 இராணுவ நடவடிக்கையை அவதானிக்கும் போது, எல்.ரி.ரி.ஈ.யினரை தேடிச் சென்று அழிப்பது என்பதைவிட ஆனையிறவு, பரந்தன் ஆகிய பிரதேசங்களுக்கப்பால் படையினர் தமது கட்டுப்பாட்டைப் பலப்படுத்துவதாகவே இருக்கின்றது.

'Attacking is the best way of defending' அதாவது தாக்குவதன் மூலமே தற்பாதுகாப்பை மேற்கொள்ள முடியுமென்று இராணுவத் தந்திரோபாய

## சமாதான அறைகூவல் விடுக்கும் பேராயர் கென்னத் பெர்னாண்டோ

ரீதியில் வழக்கில் கூறப்படுவதுண்டு.

தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருப்பதன் மூலமும், நகர்ந்து கொண்டிருப்பதன் மூலமும் எதிரியை தொலைவில் வைத்திருக்க முடியும்; அல்லது பலவீனப்படுத்த முடியும்.

எனவே தாக்குதல்களை மேற்கொண்டு தமது தற்பாதுகாப்பை உறுதி செய்வதாகவே சத்ஜய-3 படையினர் நடந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

தாக்குதல்களை மேற்கொண்டு தற்பாதுகாப்பை மேற்கொள்வதென்பது 'மரபு வழிப்போர்முறையில்' ஓர் உத்தியாகும்.

தாக்குதலை எதிர்கொள்ளம் தரப்பினர் பலவீனமாக இருந்தால், அல்லது தனது தரப்பில் இழப்புகளைத் தவிர்க்க விரும்பினால் இத்தகைய தாக்குதல் குறித்து அவதானமாகவே நடந்து கொள்வர்.

பெரும் எடுப்பிலான நகர்வுகளை படையினர் மேற்கொள்ளும்போது அவர்கள் முற்றிலும் எதிர்பார்த்திராத வகையில் கெரில்லாத்தாக்குதல்களை மேற்கொள்வதே மறுதரப்பின் தந்திரமாகவும் இருக்கும்.

இராணுவத்துக்கு அதன் பலத்தைப் பராமரிக்க எப்போதுமே பெருமளவில் ஆட்பலமும், ஆயுதபலமும் தேவை. ஆனால் கெரில்லாக்களுக்கு அப்படியல்ல; ஒரு சிலராலேயே பெருந்தாக்குதல்களை நிறைவேற்றமுடியும். அத்துடன் பெரும் சைன்யத்தின் கவனத்தைக்கூட திசை திருப்ப முடியும்.

1983ம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் திருநெல்வேலிப் பகுதியில் எல்.ரி.ரி.ஈ. அதன் முதலாவது தாக்குதலை படையினர்க்கு எதிராகத் தொடுத்திருந்தது.

எல்.ரி.ரி.ஈ.தலைவர் வே. பிரபாகரன் நேரிலேயே பங்கேற்ற தாக்குதலாகவும் அது இருந்தது.

13 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த வெற்றிகரமான கெரில்லாத்தாக்குதலை எல்.ரி.ரி.ஈ.. நடத்தியிருந்தது.

இத்தாக்குதல் படையினரை நிச்சயம் திணறடிக்கவே செய்திருக்கும். ஏனெனில் பெருமளவில் 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்த சமயம் ஒரு சில கெரில்லாக்கள் கச்சிதமான முறையில் கைதடித்தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இதனையே எல்.ரி.ரி.ஈ.யினர் யாழ் குடாநாட்டின் கைதடிப்பகுதியில் நிரூபித்துள்ளனர்.

சத்ஜய-3 துருப்புகள் கனரக வாகனங்கள், விமானங்கள், கப்பல்கள் சகிதம் தாக்குதல்களை மேற்கொண்டிருந்திருக்கலாம்.

அச்சமயம் அத்துருப்பினருக்குக் கடும் பதிலடியைக் கொடுத்தவேளை, யாழ் குடாநாட்டினுள் கைதடியில் அத்தாக்குதலிலும் டிரக் வண்டியொன்றில் சென்ற 13 படைவீரர்கள் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தனர்.

இச்சம்பவமே இலங்கையில் இன்றுவரை உள்நாட்டு யுத்தமொன்று இடம்பெற்று வருவதற்கு அடித்தளமிட்டது.

13 வருடங்களுக்கு முன்னரும் படையினர் யாழ்குடா நாட்டின் பல்வேறு பகுதியிலும் நடமாடித் திரிந்தனர். யாழ்குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அப்போது படையினரது முகாம்கள் இருந்தன.

எனவே ஏறத்தாழ 13 வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட ஒரு சூழ்நிலைக்கே யாழ்குடா நாடு வந்துள்ளது.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்; அச்சமயம் எல்.ரி.ரி.ஈ.யினர் பெருமளவு பலமடையவில்லை.

தற்சமயம் அவர்களது பலம் அன்றிருந்ததைவிடப் பன்மடங்காக இருக்கின்றது. அத்துடன் படையினருக்கு இடையறாத நெருக்கடிகளைக் கொடுக்கக்கூடியதாகவும் அவர்களது பலமிருக்கின்றது.

இலங்கையின் ஆயுதப்படையினர் மரபுப் போர் முறைமூலம் தமது பலத்தைப்பேணி வரலாம். ஆனால் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு அதன் கெரில்லாத்தாக்குதல் மூலம் இப்பலத்தை ஆட்டங்காணச் செய்யும் தன்மையையும் கொண்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை ஆயுதப்படையினர் மரபுப் போர்முறையைப் பின்பற்றும் ஒரு சக்தியாகவும், எல்.ரி.ரி.ஈ. கெரில்லாப்போர்முறையை மேற்கொள்ளும் ஒரு சக்தியாகவும் இருக்கின்றன.

ஆயுதப்படையினரால் கெரில்லாத்தாக்குதல்களை எதிர்கொள்ளலாம்; ஆனால் கெரில்லாக்கள்போன்று நடந்து கொள்வது கடினம்.

இதேவேளை எல்.ரி.ரி.ஈ.அமைப்பினால் வெற்றிகரமாக கெரில்லாத்தாக்குதல்களை மேற்கொள்ளலாமே தவிர, மரபுப் போர் முறையை– தற்போதைய சூழ்நிலையில் நடத்துவது சாத்தியப்படாததாகவே இருக்கும்.

எனவே ஆயுதப்படையினரும், எல்.ரி.ரி.ஈ.யினரும் தமது தந்திரங்களையும், போர்முறைகளையும் பின்பற்றி ஒரு நீண்ட யுத்தத்தை நடத்தும் சூழ்நிலைகள் தென்படுகின்றனவே தவிர, எவ்விதத்திலும் யுத்த நடவடிக்கைகள் ஓய்வதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

இத்தருணத்திலேயே கொழும்பு கிறிஸ்தவ பேராயர் கென்னத் பெர்னாண்டோ, போர் தொடர்ந்து நீடித்துச் செல்லலாகாது; பேச்சுவார்த்தைகளுக்கு அரசாங்கமும், எல்.ரி.ரி.ஈ. அமைப்பும் முன்வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வாரம் தமது கிறிஸ்தவ திருச்சபையில் 111வது கூட்டத் தொடரில் உரைநிகழ்த்தியபோதே பேராயர் கென்னத் பெர்னாண்டோ இந்த வேண்டுகோளை விடுத்தார்.

பேராயர் கென்னத் பெர்னாண்டோ பலதடவைகள் யாழ்ப்பாணத்துக்குச் சென்று வந்தவர், அத்துடன் எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே. பிரபாகரனையும் சந்தித்தவர்.

கூடவே சந்திரிகா அரசு எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேசுவதற்கு அனுப்பி வைத்த இறுதித் தூதுக்குழுவிலும் பேராயர் கென்னத் பெர்னாண்டோ அங்கம் பெற்றிருந்தார்.

அரசியலுக்கு அப்பாற்பட்ட விதத்தில் இலங்கையர்களின் சமாதான சகவாழ்வில் பெரிதும் ஆர்வங்கொண்ட ஒருவராகவே பேராயர் கென்னத் பெர்னாண்டோ இருக்கின்றார்.

ஆனால் பேராயர் கென்னத் பெர்னாண்டோவின் பெருவிருப்புக்கு தென்னிலங்கையின் பேரினவாதிகள் எப்போதுமே வேட்டு வைப்பவர்களாகவே இருக்கின்றனர்.

"போரினால் சமாதானத்தைக் கண்டுவிட முடியாது; யுத்தம் எப்போதும் புதிய பிரச்சினைகளையே தோற்றுவிக்கும்!" என்று பேராயர் கென்னத் பெர்னாண்டோ தமது திருச்சபை உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றின் அவசியத்தை உணர்ந்தவராக மதத்தலைவர் கென்னத் பெர்னாண்டோ விளங்குகின்றார்.

ஆனால் அரசியல் ரீதியிலான அணுகுமுறைகளை அமுலாக்கவேண்டிய ஆட்சியாளர்கள் இராணுவ முஸ்தீபுகளையே தொடர்ந்து மேற்கொள்கின்றனர்.

அண்மையில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நியுயோர்க் நகர் பயணமாகியிருந்தார்.

நியுயோர்க்கில் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பொன்றில், புலிகள் இயக்கத்துடன் பேசப்போவதில்லை என்று திரு.கதிர்காமர் தெரிவித்திருந்தார்.

பேராயர் கென்னத் பெர்னாண்டோ புலிகளை பேச்சுக்களுக்கு வரும்படி அழைக்கின்றார். ஆனால் முக்கிய அமைச்சரான திரு. லக்ஷ்மன் கதிர்காமரோ புலிகளுடன் பேசுவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் பேசாதவரை யுத்தத்துக்கு முடிவில்லை என்பதை இலங்கையில் எந்தவொரு நபரும் நன்கறிவர்.

ஆனால் ஒரு 'தேன் நிலவு'ப் பயணமாகவே நியுயோர்க் சென்றிருந்த திரு. லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருப்பவை பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலைகளைக் குழப்பி விடுவதாகவே இருக்கின்றது.

இன்றையக் காலகட்டத்தில் பேச்சுவார்த்தை குறித்த அணுகுமுறைகள் காலந்தாழ்த்தப்படாது மேற்கொள்ளப்படவேண்டும். இல்லையேல் அழிவும், அவலமுமே நியதியாகிவிடும். ●

---

## பேட்டியும் விருப்பமும்

புலிகளோடு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேசத்தயார் என்று ஜனாதிபதி கூறி விட்டதாக சமீபத்தில் ஒரு செய்தி. அதனை மையமாக வைத்து பல்வேறு விமர்சனங்கள்.

இந்திய 'ஃபுரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியொன்றில் கூறப் பட்ட ஒரு கருத்தை வைத்தே விமர்சனங்கள் எழுந்துள்ளன.

'ஃபுரொன்ட்லைன்' சஞ்சிகையில் கிட்டத் தட்ட ஐந்து பக்கங்களில் ஜனாதிபதியின் பேட்டி இடம்பெற்றுள்ளது. பல்வேறு கேள்வி களுக்கு இடையே இனப்பிரச்சனை தொடர்பாக வும் சில கேள்விகள் தொடுக்கப்பட்டுள்ளன.

மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம் பற்றி ஜனாதிபதி தானாக ஒன்றும் கூறவில்லை.

ஃபுரொன்ட்லைன் பத்திரிகை சார்பாகவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிய கேள்வியை எழுப்பப்பட்டது.

அக் கேள்விக்கு ஜனாதிபதி அளித்துள்ள பதிலை உற்றுநோக்கினால், பந்தை புலிகளின் பக்கம் அடித்துவிடும் புத்திசாலித்தனமும், அரசாங்கத்தின் 'இமேஜை' உயர்த்தக்கூடிய சாதுர்யமும்தான் தெரிகின்றன.

அரசின் நிலையில் மாற்றம் ஏற்பட்டு இருப்பதாகவோ, புலிகளுடன் பேசுவதற்கு அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது என்றோ அதற்கு அர்த்தம் கற்பிக்க முடியாது.

குறிப்பிட்ட கேள்வி- பதில்கள் இவைதான்:

**கேள்வி:-** இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தவிர முன்னைய பேச்சுவார்த்தைகள் எல்லா வற்றிலும் காணப்படாத ஒரு அம்சம் மூன்றா மவர் ஒருவரின் பாத்திரமாகும். நிச்சயமாக பக்கச்சார்பற்ற மூன்றாமவரின் பாகம் எப் பொழுதும் இல்லாதிருந்தமைக்கு காரணம் ஒப்பந்தத்துக்கு வருமாறு இருபகுதியினரையும் தள்ளிவிடும் இடைமீட்டாளரின் பாத்திரத்தை இந்தியா வகித்தமையாகும். சமீப எதிர்காலத் தில் இப்பிரச்சனையின் இடைமீட்டாளராக ஒரு பக்கச்சார்பற்ற மூன்றாமவர் பங்குவகிக்கும் சாத்தியக்கூறு பற்றித் திறந்த மனதுடன் செயற்படுவீர்களா?

**சந்திரிக்கா:-** ஆம். நான் எப்பொழுதுமே ஆம் என்றே கூறுவந்திருக்கிறேன். நிபந்தனை கள் சரியானவையாக இருப்பின் மிக உறுதியா கக் கூறலாம். முன்னரே நாம் இதற்கு ஒத்துக் கொள்ளுமாறு எல்.ரி.ரி.ஈயை இணங்கவைக்க முயன்றோம். ஆட்களின் பெயர்களை கூறுமாறு நான் கேட்டேன். அவர்கள் கூறவில்லை. ஒரு மிக நடுநிலையான நாட்டைச் சார்ந்த மிக நடுநிலையான ஒருவரின் பெயரை நாம் கூறினோம் அவர்கள் மறுத்துவிட்டனர்.

**கேள்வி:-** நாளை இருபகுதியினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மூன்றாமவர் மூலம் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவோ, எதாவது பேச்சுவார்த்தையில் ஈடுபடவோ விரும்புவதாக எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரன் பகிரங்கமாக அறிவித்தால் தங்கள் அரசு அதனை எவ்வாறு எடுத்துக்கொள்ளும்?

**சந்திரிக்கா:-** எல்.ரி.ரி.ஈ.யினர் தாம் விரும்புவதாக கூறினால்..

**பத்திரிகையாளர்:-** ஆம்!

**சந்திரிக்கா:-** நல்லது. நாம் அதை ஆராய வேண்டும். கொள்கையளவில் நான் கூறியதைப் போன்று அதனை மகிழ்ச்சியுடன் செய்வோம். ஆனால் யாரென்பது அதில் தங்கியுள்ளது....

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக ஜனாதிபதி கூறிய முக்கிய கருத்துக்கள் அவைதான்.

ஜனாதிபதியின் மேற்கண்ட பதில்களில் இரண்டு விடயங்களை கவனிக்க முடியும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கு புலிகள்தான் தடையாக இருந்தார்கள். அரசாங் கத்தைப் பொறுத்தவரை பிரச்சனையை எப்படியாவது தீர்க்கவேண்டும் என்றே எப்போதும் விரும்பி வந்திருக்கிறது என்று நிருபிக்க முற்பட்டுள்ளார்.

இரண்டாவதாக, புலிகளிடம் இருந்துதான் பேச்சுவார்த்தைக்கான கோரிக்கை எழவேண் டும் என்பதையும் தெரிவித்திருக்கிறார்.

புலிகள் தாமாக முன்வந்து அப்படி ஒரு கோரிக்கையை அரசுக்கு விடுக்கும்போது, புலிகள் பலவீனமானதால்தான் பேச்சுவார்த் தைக்கு வந்துள்ளனர் என்று அரசாங்கம் தென்னிலங்கையில் கூறக்கூடியதாக இருக்கும்.

ஏற்கனவே ஜனாதிபதி ஒருமுறை, 'யுத்தத்தின் நோக்கங்களில் ஒன்று புலிகளை



பேச்சுவார்த்தைக்கு வரச்செய்வதுமாகும்' என்று தெரிவித்திருந்தார்.

'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற கோஷத்தோடு வடக்கு-கிழக்கு போர்முனையில் அரசாங்கம் தனது கால்களை வைத்துவிட்டது.

தோல்விகண்ட நிலையில் தனது கால்களை இழுத்துக்கொண்டதாக கருதப்படும் சமாதான முயற்சிகளுக்கு அரசாங்கம் தானாக முன்வரப் போவதில்லை. அப்படி முன்வந்தால் தென்னி லங்கையில் அரசின் 'இமேஜ்' வீழ்ச்சியடைந்துவிடும்.

மிக முக்கியமான பிரச்சனை என்னவென் றால் பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பமாகு மானால் புலிகள் முன்வைக்கும் அரசியல் கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற முடியுமா என்பதுதான்.

தற்போதைய அரசியல் தீர்வு யோசனை களில் உள்ள விடயங்களைக்கூட தென்னி லங்கை இனவாதிகள் எதிர்ப்பதால் அரசாங்கம் தயங்கவேண்டியிருக்கிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில்கூட ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. இந்நிலை யில் புலிகளைப் பலவீனமாக்காமல் ஒரு பேச்சுவார்த்தைக்கு சென்றால் புலிகளின் கோரிக்கைகள் உறுதியான குரலில் எழும். அரசு தடுமாறும். பேச்சு முறியும்.

எனவே-புலிகளின் தாக்குதல்களால் அரசாங்கம் இறங்கிச் சென்று பேச்சு நடத்த விரும்புகிறது என்ற வாதம் அடிபட்டுப்போகிறது.

புலிகள் பலவீனமான நிலையில் பேச்சு நடத்துவதுதான் அரசுக்கு சாதகம். அது முடியுமா? முடியாவிட்டால் விளைவுகளைப் பாராமல் போரை நடத்திக்கொண்டிருக்கவே அரசு விரும்பும்.

ஒரு வரையறைக்கு மேல் அரசியல் தீர்வு விடயத்தில் அரசாங்கத்தால் செல்ல முடியாத நிலையில், புலிகள் பலமாக இருக்கக்கூடியதாக ஒரு பேச்சை நடத்துவதும் மீண்டும் போருக்கே வழிவகுக்கும். அதனைவிட போரை நடத்திக்கொண்டிருப்பதே அரசுக்கு சாதகம்.

இந்நிலையில், ஜனாதிபதியின் பேட்டி அரசாங்கத்தின் 'இமேஜை' உயர்த்தும் புத்திசாலித்தனமாக கொள்ளப்படலாமே தவிர, அரசாங்கம் இறங்கிவந்துவிட்டது என்று கருதக்கூடியதாக இல்லை.

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்' பற்றிய கேள்விகளுக்கு நேர் எதிராக பதில் சொல்வதை விட பந்தை புலிகளின் கோட்டுக்குள் அடித்து விடுவதுபோல ஜனாதிபதி பதில் சொல்லியி ருப்பது அவரது அரசியல் முதிர்ச்சியைக் காட்டுகிறது; போரின் முடிவைக் குறிக்க வில்லை. ●


படிப்பகம்

www.padippakam.com

தருவது 12 ரசிகன்

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

எங்கள் காணியில் ஒரு வேப்பமரம் நின்றது. அந்த வேப்பமரம் எங்கள் குடும்பத்துக்கு தெய்வம் மாதிரியிருந்தது. நாங்கள் துர்க்காவை வணங்குபவர்கள். அந்த வேப்பமரம் துர்க்காவைப்போலவே எங்கள் கண்களுக்குத் தெரிந்தது.

நோய் நொடி ஏற்பட்டால் அந்த வேப்பமரத்தின் பட்டையில் இருந்தும், இலைகளில் இருந்தும் அம்மா மருந்து செய்வாள். எங்கள் அயல்வீடுகளில் உள்ளவர்களுக்கும் அந்த வேப்பமரம் மருந்தாக உதவியது.

நான் காணியில் வேலைசெய்து களைத்துப்போனால் அந்த வேப்ப மரத்தின் கீழேதான் அமர்ந்திருப்பேன். ஆசையாக மரத்தை தடவிப்பார்ப்பேன்.

என் தம்பி சிவநாராயணனுக்கும் அந்த வேப்பமரத்தின் மீது கொள்ளை ஆசை.

எங்கள் காணிப்பக்கமாக அவன் சென்றபோது அந்த வேப்பமரத்தை மூன்று நான்குபேர் கோடாலியால் வெட்டிக்கொண்டிருந்தார்களாம்.

எங்கள் சித்தப்பாவின் மகன் அந்தக் கழுதை மையாதீன் நின்று மேற்பார்வை செய்து கொண்டிருந்தானாம்.

என் தம்பி சிவநாராயணன் அழுத படியே ஓடிவந்து சொன்னான். அவன் சொன்னதை முழுவதும் கேட்கக்கூட எனக்கு பொறுமையில்லை.

என் நெஞ்சில் கோடாலியால் வெட்டு வது போல இருந்தது. பணிந்து பணிந்து போய்க்கொண்டிருப்பதால் தானே தொடர்ந்து தொடர்ந்து தொல்லை தருகிறார்கள்.

என் உடம்பெங்கும் உஷ்ணமாகப் பரவியது கோபம். கண் மண் தெரியாத கோபம் என்பார்களே அப்படியொரு கோபம்.

'அவனை விடக்கூடாது' என்று சொல்லியபடியே நான் காணியை நோக்கி ஓடினேன்.

"பூலான் நில்லடி.. பூலான் நில்லடி." என்று கத்திக்கொண்டே அம்மா என் பின்னால் ஓடிவந்தாள்.

சட்...சட்..சட்

காணியை நெருங்கும்போதே அந்தச் சத்தம் காதில் விழுந்தது. மரத்தில் கோடாரி பாயும் சத்தம் அது. என் நெஞ்சுக்குள் அது எதிரொலித்தது.

காணியில் கழுதை மையாதீனும் அவனது நான்கு நண்பர்களும் நின்றனர். மூன்றுபேர் கோடாரியால் மரத்தை தறித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காட்சியைக்கண்டதும் என் னால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடிய வில்லை.

"டேய்..." என்று கத்திக்கொண்டே கற்கள் குவியலாக இருந்த பக்கமாக ஓடினேன்.

நான் கத்திய சத்தலில் மரத்தை வெட்டியவர்களும், மையாதீனும் திரும்பிப் பார்த்தார்கள். மையாதீனின் முகம் கோபத் தில் சிவந்தது. என்னை நோக்கி ஓடிவரத் தொடங்கினான்.

நான் கற்குவியலில் இருந்து இரண்டு கைகளிலும் கற்களை எடுத்துக்கொண்டேன்.

"பூலான் வேண்டாம்" என்று கத்திக் கொண்டு அம்மா ஓடிவந்தாள். எனக்குக் கிட்ட அம்மா வந்துவிட்டால் அம்மா என்னைப் பிடித்து தடுத்துவிடுவாள்.

தாமதிக்கக்கூடாது.

கல் ஒன்றை மையாதீனைக் குறி பார்த்து வீசினேன். அவனது தலைக்கு குறிவைத்ததுதான் எனது நோக்கம். அவனது நல்ல நேரம் குறி தவறிவிட்டது.

மையாதீன் நான் நின்ற இடத்தை சமீபித்துவிட்டான்.

இரண்டாவது கல்லை வீசியெறிந் தேன். குறிதவறவில்லை.

மையாதீனின் வலது கண்ணின்மேலே நெற்றியில் பட்டது.

"ஐயோ அம்மா" என்று கத்தியபடியே கீழே விழுந்துவிட்டான் மையாதீன்.

அதேநேரம் அம்மா வந்து என் கைகளை பிடித்துக்கொண்டு, "எறி யாதே! ஓடிப். வீட்டுக்கு ஓடு" என்றாள்.

மையாதீன் விழுந்துவிட்டான். இரத் தம் குபுக்கென்று நெற்றியில் இருந்து பாய்ந்து அவனது சட்டையை நனைத்துக் கொண்டிருந்தது. கைகளால் நெற்றியைப் பொத்திப் பிடித்தபடி "அவளைப் பிடித் துக் கட்டுங்களடா." என்று கத்தினான்.

அவனது ஆட்கள் எஜமானின் கட்ட ளைக்கு பணிந்த நாய்கள் மாதிரி என்னை நோக்கி ஓடி வந்தார்கள்.

நான் அம்மாவின் பிடியில் இருந்து என் கைகளை உதறிவிடுவித்துக் கொண்டு கற்களை பொறுக்கி, ஓடிவந்த நாய்களை நோக்கி வீசினேன்.

ஒரு கல் மட்டும் ஓடிவந்தவர்களில் ஒருவனது நெஞ்சில் பட்டது. அவன் நெஞ்சைப் பிடித்தபடி "எறிகிறாளடா பிடியுங்கள்" என்று கூச்சலிட்டான்.

இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்று நான் தீர்மானித்துவிட்டேன்.

அந்தநேரம் பார்த்து புத்திகெட்ட என் அம்மா என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

நான் கற்களால் எறிந்து அவர்களது மண்டைகளைப் பிளந்துவிட்டால் என்னைச் சும்மாவிடமாட்டார்கள் என்று அம்மா பயந் திருப்பாள் போலும். அதனால்தான் என்னை கட்டிப்பிடித்துக் கொண்டு, "வேண்டாமடி பூலான். சண்டை வேண்டாமடி" என்று கெஞ்சினாள்.

நான் அம்மாவை என்னிடம் இருந்து விலக்குவதற்கு இடையே மையாதீனின் ஆட்கள் வந்து என்னைப் பிடித்துக் கொண் டார்கள்.


பூலான்

சென்றவாரம்

- மீண்டும் தன் கணவன்
- புத்திலால் வீட்டுக்கு சென்ற பூலான்
- புத்திலாலின் இரண்டாவது மனைவியால்
- கொடுமைப்படுத்தப்பட்டாள்.
- அவளுக்கு பாடம் புகட்டிவிட்டு
- மீண்டும் தாய்வீட்டுக்கு திரும்புகிறாள்.
- பூலானின் வீட்டுக் காணியில்
- விளைந்த பயிர்களை அவள்
- சித்தப்பாவின் ஆட்கள் நாசம் செய்கிறார்கள்.
- பூலான் அழுகிறாள். கோபமடைகிறாள்.
- இன்னொருநாள் பூலானின் தம்பி
- வந்து ஒரு செய்தி சொல்லுகிறான்.

இனி...

ஒருவன் அம்மாவை என்னிடமிருந்து இழுத்துக் கீழே தள்ளினான். இன்னும் இரண்டுபேர் எனது இரண்டு கைகளையும் என் முதுகுப் பக்கமாக வளைத்து முறுக்கிப் பிடித்துக் கொண்டனர்.

அம்மாவை கீழே தள்ளியவனைப் பார்த்து "வேசிமகனே!" என்று கத்தினேன். என் கைகளை முறுக்கிப் பிடித்திருந்தவர் களில் ஒருவன் ஓங்கி என் கன்னத்தில் அறைந்தான். அறைபட்ட இடம் விறைத்தது போல் இருந்தது. நான் திமிறினேன்.

மையாதீன் தனது நெற்றிக் காயத்துக்கு தனது வேஷ்டியை கிழித்து கட்டுப்போட்டுக் கொண்டே "அந்த நாயை மரத்தில் கட்டுங்கள்" என்றான்.

"நீதானடா பரதேசி நாய்" என்று நானும் பதிலுக்குக் கத்தினேன்.

என்னை இழுத்துக்கொண்டுபோய் ஒரு மரத்தோடு சேர்த்துக் கயிற்றால் கட்டத் தொடங்கினார்கள்.

என் நெஞ்சுக்கு குறுக்கே கயிற்றை இழுக்கும்போது வேண்டுமென்றே என் மார்பை விரலால் அமுத்தினான்.

"தூ...னாய்களா!" காறி அவன் முகத்தில் துப்பினேன். முகமெல்லாம் எச்சில்.

"அவளைவிடச் சொல்லு மையாதீன். இங்கே என்னவேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என் மகளைமட்டும் விட்டு விடு மையாதீன்!" என்று அம்மா கெஞ்சி னாள்.

"போடி கிழவி!" மையாதீன் என் அம்மாவை தன் காலால் எட்டி நெஞ்சில் உதைத்தான். என் அம்மா அவனுக்கு சின் னம்மா முறையானவள். பணத்திமிரின் முன்பாக உறவுமுறை தூசிக்கு சமனாகிவிட்டது.

அம்மாவுக்கு அவன் உதைத்ததும் என் னால் தாங்கமுடியவில்லை. "...பிறந்தவனே. நீ ஆம்பளை என்றால் என்னை அவிழ்த்து விடச் சொல்லடா பார்ப்போம்." என்று கத்தினேன்.

என் பக்கத்தில நின்ற ஒருவன் என் காதுக்கருகே குனிந்து, "உன்னை அவிழ்த்துப் பார்க்கத்தானடி கட்டி வைத்திருக்கிறோம்." என்றான். சனியன், அவன் வாயில் சாராய நாற்றம்.

"போடா பொறுக்கி!" என்றேன். நான் துப்பிவிட்டாலும் என்று தன் முகத்தை அவன் கைகளால் பொத்திக்கொண்டான்.

"இவள் கட்டுக்களை நான் வரும்வரை அவிழ்க்க வேண்டாம். பொல்லாத சிறுக்கி. இவளை ஜாக்கிரதையாகப் பாருங்கள்" சொல்லி விட்டு மையாதீன் இன்னொருவனை யும் அழைத்துக்கொண்டு எங்கோ சென்று விட்டான்.

மையாதீன் சென்றதும் அவனது ஆட் களுக்கு சந்தோசம் வந்துவிட்டது.

ஒருவன் என் பின்புறத்தில் கிள்ளினான்.

இன்னொரு பொறுக்கி என் நெஞ்சில் கைக ளால் தடவினான்.

என்னால் செய்யக்கூடியது தங்கள் முகத்தில் காறித் துப்புவது மட்டும்தான் என்பதால் அவர்கள் தங்கள் முகங்களை நான் துப்பமுடியாதவாறு ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டார்கள்.

"நீ ஆம்பிளையாடா நாயே!" என்று கத்தினேன்.

"பார்க்கவேண்டுமா?" என்று கேட்டு விட்டு பல்லைக்காட்டி சிரித்தான் அந்தப் பரதேசி.

அதற்குள் அம்மா ஊருக்குள் போய் தகவல் சொல்லிவிட்டு வந்தாள்.

கூட்டம் கூடிவிட்டதால் மையாதீனின் ஆட்கள் மேற்கொண்டு எதுவும் செய்யாமல் இருந்துவிட்டனர். அதுதான் ஓரளவு ஆறுத லாக இருந்தது. மையாதீனும் அவன் ஆட்களும் செய்வது அநியாயத்திலும் அநி யாயம் என்று தெரிந்தும் கூட கிராமத்தவர் கள் யாரும் வாயே திறக்கவில்லை.

கூட்டத்தினரில் பாதிப்பேரின் முகத்தில் அனுதாபம் தெரிந்தது. சிலரின் முகங்கள் எந்த உணர்சியுமற்ற கல்லாகத் தெரிந்தன. வேறுசிலர் வேடிக்கை பார்த்தனர். மையதீ னின் ஆட்கள் என் சேலையை உரிந்து காட்டினாலும் அவர்கள் வேடிக்கை பார்த் துக் கொண்டிருப்பார்கள்.

என்னைப் பொறுத்தவரை அனுதாபப் படுகிறவர்களும் ஒன்றுதான், வேடிக்கை பார்க்கிறவர்களும் ஒன்றுதான். யாராலுமே



எனக்கு நேரும் அநீதிக்கு நீதிபெற்றுத்தர முடியாது.

மையாதீனின் ஆட்களின் முகங்களை என்மனதில் பக்குவமாக வைத்துக் கொண் டாக வேண்டும். அவர்களை நன்றாகப் பார்த்துக் கொண்டேன். 'நான் விடப்போவ தில்லை. உங்கள் ஒவ்வொருவரையும் ஓட ஓட விரட்டிக் கொல்லாமல் விடப்போவ தில்லை' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

முதன்முதலாக என் மனதில்– கொலை வெறி தோன்றியது அப்போதுதான்.

என்றோ ஒருநாள் என்னால் முடியும். என்றோ ஒருநாள் என்னால் முடியும். என்றோ ஒருநாள்... எனக்குள் அந்த நம் பிக்கை, வன்மம் உறுதியாக எழத்தொடங் கியது.

அந்த நம்பிக்கை ஏற்பட்டதும் எனக்கு காவலாய் நின்ற மையாதீனின் ஆட்களை புழுக்களைப்போலப் பார்த்தேன்.

'ஐயோ பாவம்... என்றோ ஒருநாள் இவர்கள் எப்படி துடிக்கப்போகிறார்கள். இன்று செய்தவற்றுக்கு எல்லாம் அன்று எப்படி வருந்தப்போகிறார்கள். விட மாட்டேன். கத்தினால், கெஞ்சினால், காலில் விழுந்து கதறினால், என்ன செய்தீர்களா னாலும் விடமாட்டேன். விடவேமாட்டேன்' எனக்குள் இருந்து யாரோ பேசுவது போலக் கேட்டது. .

அம்மா அழுதுகொண்டிருந்தாள். 'ஏனம்மா அழுகிறாய்? இவர்களெல்லாம் ஒருநாள் எப்படியெல்லாம் அழப்போகிறார் கள் தெரியுமா?' என்று சொல்லவேண்டும் போல் இருந்தது.

பொலிஸாருடன் மையாதீன் வந்து கொண்டிருந்தான். என்னைக் காட்டி ஏதோ சொல்லிக்கொண்டே வந்தான்.

மற்றொரு நரகம் எனக்காக திறந்து கொள்ளப்போவதை நான் அப்போது அறிய வில்லை.

(தொடர்ந்து வரும்)

# மண்டேலாவின் காதலி

## 78+50

தென்னாபிரிக்கா அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கு இப்போது 78 வயது.

78 வருட வாழக்கையில் 27 வருடங்களை சிறையிலேயே கழித்தவர் மண்டேலா. தனது வாழ்வின் மிக முக்கியமான காலகட்டத்தை சிறைச் சுவர்களுக்குள் இழந்து போனார். சிறை மீண்டு வெளியே வரும்போது வாலிப வயது உதிர்ந்துபோயிருந்தது.

வெளியே வந்தவருக்கு மற்றொரு அதிர்ச்சி. அவரது இளம்மனைவி வின்னியின் நடவடிக்கைகள் அதிரடியாக இருந்தன. அரசியல் எதிரிகளை நொறுக்கித் தள்ளுவது, வெள்ளையினத்தவர்களை வெளுத்து வாங்கு வது என்று தன்னைச் சுற்றி ஒரு படையை வைத்திருந்தார் வின்னி.

நெல்சன் மண்டேலா தவிர்க்க முடியாத நிலையில் ஆயுதப்போராட்டத்தை ஆதரித்த வரே தவிர, அதில் விருப்பம் கொண்ட வரல்ல. மென்போக்காளரான மண்டேலா வுக்கு வின்னியின் போக்குப் பிடிக்கவில்லை.

வேகமானவர். தீவிரமானவர். இளமை யானவர் வின்னி. மிதமானவர். மென்போக் காளர். வயதானவர் மண்டேலா. இருவரும் எதிரும் புதிருமாக இருந்த வாழ்க்கை கசந் தது. விவாகரத்தில் முடிந்தது. வின்னிக்கு இரண்டு குழந்தைகள்.

வின்னியை கைப்பிடிக்க முன்னர் 1944ல் இவ்லின் என்ற பெண்ணை மணந்திருந்தார் மண்டேலா. 4 குழந்தைகள் பிறந்தனர். 14 வருட மணவாழ்க்கை. அதன்பின்னர் இவ் லினை விவாகரத்து செய்துவிட்டுத்தான் வின்னியை மணமுடித்தார் நெல்சன் மண்டேலா.

நெல்சன் மண்டேலாவின் தனிப்பட்ட வாழ்க்கை இரண்டு மனைவிகளுடனும் ஒத்துப் போகமுடியாத சோகத்தில் முடிந் தது.

அதனால் வறண்டுகிடந்த மண்டேலா வின் மனதில் சமீபகாலமாக இதமான மழை பெய்ய ஆரம்பித்திருக்கிறது. மழைக்குக் காரணம் புதிதாக மலர்ந்துள்ள காதல்.

78 வயதிலும் காதல் வருமா? வரும். காதல் வயது பார்த்து வருவதில்லையே.

மண்டேலா காதலிப்பது மொசாம்பிக் நாட்டு முன்னாள் ஜனாதிபதி சமோராவின் மனைவி கிரேகாவை. கிரேகாவுக்கு 50 வயது. சமோரா 1986ல் நடைபெற்ற விபத் தொன்றில் பலியானபின்னர் கிரேகா தனி யாகவே இருந்துவருகிறார்.

தென்னாபிரிக்க அதிபரான மண்டேலா மொசாம்பிக் நாட்டுக்கு விஜயம் செய்தபோது தான் கிரேகாவை சந்தித்தார். கிரேகாவின் அமைதியான சுபாவம் மண்டேலாவுக்குப் பிடித்துவிட்டது. கிரேகாவும் மண்டேலாவை நேசிக்க ஆரம்பித்தார்.

இப்போது கிரேகா அடிக்கடி தென்னா பிரிக்காவுக்கு பறந்து போகிறார். மண்டேலா வுடன் அவரது இல்லத்தில் தங்கி இருக் கிறார். இருவரும் பகிரங்கமாகவே கைகோர்த்து நடக்கின்றனர். நெருக்கமாக முத்தங்களையும் பரிமாறிக்கொள்கிறார்கள்.

மண்டேலா–கிரேகா காதல் விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துவிட்டதால், 'திருமணம் எப்போது?' என்னும் எதிர்பார்ப்பு ஏற் பட்டுள்ளது.

மண்டேலா மௌனமாக இருக்கிறார். கிரேகா மட்டும் கருத்துச் சொல்லியிருக்கிறார். கிரேகா சொல்லியிருக்கும் கருத்து ஏமாற்ற மளிப்பதாக இருக்கிறது.

"எனதுநாடு மொசாம்பிக். நான் எப்போதும் மொசாம்பிக் ஜனாதிபதி சமோராவின் மனைவி யாக இருக்கவே விரும்புகிறேன்.

மண்டேலாவின் நிலைமை எனக்குப் புரிகிறது. அவர் ஒரு நாட்டுக்கே தலைவர். அவர் முன்மாதிரியாக இருக்க வேண்டி யுள்ளது. இரண்டு பேருக்குமே ஒரே மாதிரியான பிரச்சனைகள் இருப்பதால் நாம் இருவரும் மனம்விட்டுப் பேசினோம். திருமணம் செய்து கொள்வதில்லை என்னும் முடிவுக்கு வந்துள்ளோம்" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார் கிரேகா.



இதற்கிடையே மண்டேலாவின் முதல் மனைவி இவ்லின் வெகுதாராளமான மனதுடன், 'மண்டேலாவும் கிரேகாவும் திருமணம் செய்து கொள்வதே நல்லது' என்று கூறியிருக்கிறார்.

வின்னிக்கு மட்டும் இந்தக் காதல் விவகாரம் துளியும் பிடிக்கவில்லை. "இந்த வயதில் திருமணம் செய்துகொண்டு என் குழந்தைகளுக்கு கெட்ட பெயரை ஏற் படுத்த வேண்டாம்" என்று கூறியிருக்கிறார்.

தென் ஆபிரிக்காவின் சகல மதத் தலைவர்களும் "நெல்சன் மண்டேலா கிரேகாவை திருமணம் செய்ய வேண்டும். அதில் ஒன்றும் தப்பில்லை." என்று பச்சைக் கொடி காட்டியிருக்கிறார்கள்.

காதலர்கள் இருவரும் திருமணம் செய்துகொள்கிறார்களோ இல்லையோ தங்கள் வயதான காலத்தில் வசந்தம் கண்டுகொண்டிருக்கிறார்கள்.

இச் செய்திக்கு சம்பந்தமில்லாத ஒரு கொசுறு நியூஸ். ஐம்பதிலும் ஆசைவரும் என்ற பாடலை எழுதும்போது கவியரசு கண்ணதாசனுக்கு 50 வயதாகிவிட்டது. அந்த நேரத்தில்தான் தனது மூன்றாவது மனைவியாக வரப்போகிறவரை காதலிக் கத் தொடங்கியிருந்தார் கண்ணதாசன். அனுபவரீதியாக உணர்ந்து கண்ணதாசன் பாடிய பாடல் சாகாவரம் பெற்றுவிட்ட பாடல்தானே!

# டயானாவின் மற்றுமொரு இளவரசர்

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்சும் டயானாவும் விவாக ரத்து செய்துகொண்டது பழைய செய்தியாகிவிட்டது.

டயானா இப்போது சுதந் திரப்பறவை. ஆனாலும் அந் தப் பறவை செல்லுமிடங் களுக்கு அதன் பின்னால் பறந்து கொண்டிருக்கிறார்கள் பத்திரிகையாளர்கள். எல்லாம் சுவாரசியமான செய்திகளுக் காகத்தான்.



டயானா என்றாலே சுவா ரசியமான செய்திகளுக்கு பஞ்சமிருக்காது என்பது பத் திரிகையாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

டயானாவும் ஏமாற்றவில்லை. சமீபத்தில் மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள மெஜோர்கா தீவுக்குச் சென்றார் டயானா. அங்கு டயானாவுக் காக காத்திருந்தார் ஒரு அழகான இளைஞர். அவரது பெயர் ஃபெலிப். அவர் சாதாரண ஆள் அல்ல. ஸ்பெயின் நாட்டு இளவரசர்.

ஃபெலிப்பின் தந்தை மன்னன் ஜீவான் கார்லோசுக்கு இப்போது 60 வயது. மன்னர் மண்டையைப் போட்டுவிட்டால் ஃபெலிப் மன்னாராகிவிடுவார்.

ஃபெலிப்பும் டயானாவும் மேஜோர்கா தீவில் ஜாலியாக சிலநாட்கள் தங்கி இருந்தனர். டயானா வுக்கு 34 வயது. ஃபெலிப்புக்கு 28 வயது.

ஃபெலிப் காதல் விவகாரங்களில் கில்லாடி. அமெரிக்க கல்லூரி ஒன்றில் படித்துவரும் ஃபெலிப் அங்கு ஒரு அமெரிக்க அழகியை தீவிரமாக காதலித்து வருகிறார். இடைக்கிடையே டயானாவை சந்தித்தும் சந்தோசங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

டயானாவை ஃபெலிப் உறுதியாக காதலித்து கல்யாணம்வரை சென்றுவிட்டால் டயானா ஸ்பெயின் நாட்டு இளவரசியாகி விடுவார்.

அதன்மூலம் பிரிட்டனில் இழந்த இள வரசிப் பதவியை ஸ்பெயினில் பிடித்து விடுவார். ஆனால் ஃபெலிப் அதற்கு உடன்படுவாரா என்று தெரியவில்லை.

இதற்கிடையே டயானவை விளம்பரப் படங்களில் நடிக்கவைக்க பல நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு துரத்து கின்றன.

இரண்டு அமெரிக்க விளம்பர நிறுவனங்கள் டயானாவைப் பிடித்து படம் எடுப்பதற்காக கையில் டொலர்களுடன் அலைந்து கொண்டிருக் கின்றன.

'மொபைல் டெலி போன்' ஒன்றுக்கான விளம்பரத்துக்கு டயானா போஸ் கொடுத்தால் 30 இலட்சம் அமெரிக்க டொலர்கள் தருவதாக ஆசை காட்டியுள்ளது அதில் ஒரு நிறுவனம்.

30 இலட்சம் அமெரிக்க டொலர்களை டயானா சம்பாதிக்க வேண்டுமானால் பெரி தாக ஒன்றும் செய்யத் தேவையில்லை.

போனைக் கையில் வைத்துக்கொண்டு ஒயிலாக நின்று, தன் அழகான உதடுகளால் "இது மட்டும் என்னிடம் இருந்திருந்தால் நான் ராணியாக இருந்திருப்பேன்" என்று பேசினால் போதும். டயானா இதுவரை சம்மதிக்கவில்லை. பணம்தான் அவரிடம் போதியளவு இருக்கிறதே.

அதுமட்டுமல்ல குறிப்பிட்ட போன் விளம்பரவாசகத்தில் ஒரு புதிர் இருக்கிறது.

டயானா தனது காதலரான குதிரைப் பயிற்சியாளருடன் போனில் கொஞ்சிப் பேசித்தான் முன்னர் மாட்டிக்கொண்டார். போனை ஒட்டுக்கேட்டு காதல் விவகாரத்தை சந்திக்கு கொண்டுவந்தார்கள். டயானா சாள்ஸ் விவாகரத்துக்கு அதுவும் ஒரு காரணம். மொபைல் போன் என்றால் ஒட்டுக்கேட்க முடியாது. டயானா அன்று மொபைல் போனில் காதலரோடு கொஞ்சி யிருந்தால் மாட்டிக்கொள்ளாமல் இருந் திருப்பார் அல்லவா.

இப்போது புரிகிறதா அந்த விளம்பர வாசகத்தின் அர்த்தம்?



படிப்பகம்



# பணம் காய்க்கும் மனிதர்

பணம் காய்க்கும் மரம் உலகில் கிடையாது. பணம் காய்க்கும் மனிதர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் புருனை நாட்டு மன்னர் சுல்தான் ஹஸனல் போல்கியா. உலகின் மிகப் பெரும் பணக்காரர் அவர்தான். படத்தில் எத்தனை அடக்கமாக அமர்ந்திருக்கிறார் பாருங்கள். புருனே சுல்தானின் 50வது பிறந்தநாளில் எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது. அருகில் இருப்பது புருனே சுல்தானின் இரண்டாவது ராணி.

புருனே சுல்தானின் பிறந்தநாளுக்கு உலகப்புகழ்பெற்ற மைக்கேல் ஜாக்சன் நேரில் சென்று இசை விருந்தளித்தார். உலகின் பிரபல நடிகைகள், அழகுராணிகள் போன்றோரும் தவறாமல் ஆஜராகியிருந்தனர். பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்சும் பிரதம விருந்தினர்களில் ஒருவராக கலந்து கொண்டார். பணக்கார மன்னனுக்கு மரியாதை செலுத்த யார்தான் சுணக்கம் காட்டுவர்?

யானையின் தும்பிக்கையைவிட பலமானது மனிதனின் தன்னம்பிக்கை. அதற்கு ஒரு உதாரணமாக அசத்திக் கொண்டிருக்கிறார் ரிவாப்ரவுன் என்ற பெண்மணி. இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

பிறக்கும்போதே ரிவாவின் இரண்டு கைகளும் செயலிழந்த நிலையில்தான் இருந்தன. இப்போது உலகமே வியக்கும்வகையில் ஓவியத்தில் சாதனை படைத்துவருகிறார் ரிவா.

அது எப்படி சாத்தியமாகியது? ரிவாவே சொல்கிறார்.

"ஒரு நாள் என் கால் விரலில் பென்சிலை வைத்துக்கொண்டு தரையில் உள்ள வெள்ளைத்தாளில் கிறுக்கிக் கொண்டிருந்தேன். வீட்டில் உள்ளவர்கள் அதைப்பார்த்துவிட்டு பாராட்டினார்கள். அதுதான் ஆரம்பம். பின்னர் கால்களால் நான் வரைந்த ஓவியங்களை திரட்டிவைத்து ஒரு கண்காட்சி நடத்தினேன். எல்லோரும் பாராட்டினார்கள். வாயில் பிரஷை வைத்துக் கொண்டு ஓவியம் வரைவதிலும் ஈடுபட்டேன். ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருந்தது. பின்னர் ஓயாத பயிற்சி காரணமாக என் முயற்சி வெற்றியளித்தது." என்கிறார் ரிவா பிரவுன்.

தான் பெற்ற இன்பத்தை பிறருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டாமா. உடல் ஊனமுற்றோருக்கான ஓவியப் பயிற்சி கல்லூரி ஒன்றை ஆரம்பித்து பயிற்சி கொடுத்து வருகிறார் ரிவா பிரவுன்.

# கால்களில் கலை நயம்



# என்னம்மா கண்ணு சௌக்கியமா?



இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே. இந்த நாயாருக்கும் பொருத்தமான விஷயம்தான். தனது கோடீஸ்வர எஜமானைப்போலவே சுங்கான் புகைக்கக் கற்றுக் கொண்டார் இந்த நாயார். இதன்பெயர் பிரைடில். வயது மூன்று அமெரிக்காதான் சொந்த நாடு. நாயாரைப் பார்க்கும்போது பொறாமையாக இருக்கிறதல்லவா.

## தகவல் பெட்டி

# கண்ணே! கண்மணியே!

உலகெங்கும் சகல உயிரினங்களுக்கும் பொதுவான விஷயம் தாய்ப்பாசம். தாயில் பாசம், தாயின் பாசம். இந்த இரண்டில் தாயின் பாசம் உறுதியானது. உன்னதமானது. பிள்ளை மனம் கல்லானால்கூட பெற்றவள் மனம் கனிவாகத்தான் இருக்கும்.

படத்தில் மனிதக் குரங்குத் தாயார் தனது கைகளில் ஏந்தி சீராட்டுவது தனது குட்டியை! இங்கிலாந்து மிருகக் காட்சி சாலையில் தாயும் சேயும் நலமாய் உள்ளனர்.

கண்ணே கண்வளராய்! கண்மணியே யாரடித்து நீயழுதாய் என்று பாட முடியாவிட்டாலும் பாசத்தில் மனிதத்தாய் போலவே இருக்கிறதல்லவா மனிதக் குரங்குத் தாயாரும்!





# ஒரே வண்ணம்

உடன்பிறவா உயிர் நண்பர்கள் மற்றும் நண்பிகள் சிலர் ஒரேவிதமான ஆடைகள் அணிவதைப் பார்த்திருப்பீர்கள். 'எந்தக் கடையில் சுருட்டினீர்கள்?' என்ற கேலி செய்வதும் உண்டல்லவா.

சிறுமிக்கு உடன்பிறவா சகோதரிபோல இருப்பது இந்த நாயார்தான். நாயின் தோல் போலவே தனக்கும் ஒரு ஆடை தயாரித்து அணிந்துள்ளாள் சிறுமி. இது சுயநலமில்லாத நட்பு. 'உடன்பிறவா' என்ற வார்த்தைகளை பாவித்திருப்பதால் பிரபல சுயநல நட்பை இதில் சேர்த்துவிடாதீர்கள்



படிப்பகம்

www.padippakam.com

# தொங்கினாரா? தொங்கவிடப்பட்டாரா?
## சில்க் சுமிதா மரணத்தில் மர்மம்!

'நேத்து ராத்திரி யம்மா, தூக்கம் போச்சுடி யம்மா' என்று ரசிகர்களின் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தவர் சில்க் சுமிதா.

அவர் அறிமுகமான 'வண்டிச் சக்கரம்' படத்தில் 'சில்க்' என்ற பாத்திரத்தில் நடித்தார். பின்னர் அவரது பெயரோடு 'சில்க்' ஒட்டிக்கொண்டது.

சில்க் சுமிதாவுக்குப் பின்னர் எத்தனையோ கவர்ச்சி நடிகைகள் வந்தார்கள். போனார்கள். சில்க் சுமிதா மட்டும் நிலையாய், ரசிகர்கள் மனதில் கனவுச் சிலையாய் நின்றார்

அந்த உதடுகளும், கண்களும்தான் சில்க் சுமிதாவின் தனித்துவ முத்திரை. உதடுகளில் எப்போதுமே ஈரமான போதை தெரியும். கண்களில் கிறங்கடித்து இழுக்கும் தூண்டில் தெரியும்.

பல நடிகைகளின் அந்தரங்கம் சோகமானது. சில்க் சுமிதாவின் அந்தரங்கமும் சோகம்தான். பலரை நம்பி ஏமாந்தார். இறுதியில் ஒரு தாடிக்காரர் சில்க் சுமிதாவோடு சேர்ந்து எங்கும் காணப்பட்டார். சில்க்கின் மெய்ப்பாதுகாவலர் என்றே எல்லோரும் நினைத்தனர். பின்னர்தான் தெரிந்தது சில்க் சுமிதாவின் காதலர் அவர்தான் என்று.

அந்த தாடிக்காரரை சில்க் சுமிதா மலையாக நம்பியிருந்தார். சில்க் சுமிதா வீட்டிலேயே அவரும் தங்கியிருந்தார். ஒருநாள் சில்க் சுமிதாவின் நம்பிக்கையில் மண்ணைப் போட்டுவிட்டுப் பெரும் தொகையான பணத்துடன் கம்பி நீட்டிவிட்டார் அந்தத் தாடிக்காரர்.

மனமுடைந்துபோன சில்க் சுமிதா திரையுலகைவிட்டே ஒதுங்கிவிட நினைத்தார். இதற்கிடையே சொந்தப் படங்கள் தயாரித்து கையைச் சுட்டுக்கொண்டதால் கழுத்தளவுக்கு கடனும் இருந்தது.

கடன் கொடுத்தவர்கள் பணத்தைக் கேட்டார்கள். இல்லையென்றால் படுக்கையில் பங்கு கேட்டார்கள். எப்படியோ சமாளித்தார். மீண்டும் நடித்தார். டான்ஸ் பயிற்சிக்கூடம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக சமீபத்தில்கூடக் கூறிக் கொண்டிருந்தார் சில்க் சுமிதா. அன்னை தெரேசா போல சமூக சேவை செய்ய ஆசையிருப்பதாகவும் பேட்டிகளில் கூறியிருந்தார்.

அப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தவர் திடீரென்று தற்கொலை செய்து கொண்டது ஏன்?

தற்கொலை செய்ய சுலபமான பல வழிகள் இருக்கின்றன. அப்படியிருந்தும் ஃபானில் தொங்கித் துடித்து ஏன் சாகவேண்டும்?

ஹொலிவூட்டின் மர்லின்மன்றோ முதல் இந்தியாவின் திரையுலக நடிகைகள் ஷோபா, திவ்யாபாரதி, படாபட் ஜெயலட்சுமி என்று பல நடிகைகளின் மரணத்தில் ஏற்பட்ட சந்தேகங்கள் இன்றுவரை மறையவில்லை. மர்மம் நீடிக்கிறது.

சில்க் சுமிதா விடயத்தில் அவர் தற்கொலைக்கு முன்னர் எழுதிவைத்த கடிதம் ஒன்றுதான் நடந்தது தற்கொலைதான் என்று பொலிசாரை நினைக்க வைத்துள்ளது. கடிதத்தை ஏன் மிரட்டி எழுத வைத்திருக்க முடியாது? என்ற சந்தேகமும் ஏழாமலில்லை.

ஹொலிவூட் படவுலக மர்லின் மன்றோ தூக்க மாத்திரை விழுங்கி மரணமானார். விழுங்கினாரா, விழுங்க வைக்கப்பட்டாரா? என்பது இன்றுவரை துலங்காத மர்மம். அப்படித்தான் சில்க் விடயத்திலும் தூக்கில் தொங்கினாரா? தொங்கவிடப்பட்டாரா? என்பதும் மர்மம்தான்.

எப்படியோ ஹொலிவூட் திரையுலகுக்கு ஒரே ஒரு மர்லின் மன்றோதான் கவர்ச்சித் தாரகை. தமிழ்ப்பட உலகுக்கு ஒரேயொரு சில்க் சுமிதாதான். இரண்டும் நிரப்பப்பட முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்திச் சென்ற கவர்ச்சி நட்சத்திரங்கள்.

# பெயர் மாறிய மீனாட்சி

மீனாட்சி என்ற பெயரோடு ராமராஜனின் ஜோடியாக 'தெம்மாங்கு பாட்டுக்காரன்' படத்தில் நடித்தவர்தான் ஆம்னி. தெலுங்கில் போய் பெயரைமாற்றிக்கொண்ட மீனாட்சி தெலுங்கில் பிஸியாகிவிட்டார். தமிழிலும் ஆம்னி என்ற பெயருடன் 'ஆனஸ்ட்ராஜ்' படத்தில் விஜயகாந்துடன் நடித்தார்.

தெலுங்கில் பாலகிருஷ்ணாவோடு ஆம்னி நடித்து வெற்றி பெற்ற படம் ஒன்று தமிழில் மொழிமாற்றப்பட்டுள்ளது. 'நான் உங்க வீட்டுப்பிள்ளை' என்ற பெயரில் வெளிவரப்போகிறது.

'ஆனஸ்ட்ராஜ்' படத்தில் தாராளமாக தள தள கவர்ச்சி காட்டி நடித்தும் ஒரு புண்ணியமில்லை. தெலுங்கில் கவர்ச்சி காட்டினால் கைமேல்பலன் கிடைக்கிறது. தொடர்ந்து வாய்ப்புத் தருகிறார்கள். என்று சொல்கிறார் ஆம்னி.

ஆம்னி சொல்லும் மற்றொரு விஷயம், "தமிழில் ஒரு படத்தில் வாய்ப்புக் கிடைக்க வேண்டுமானால் தயாரிப்பாளர், இயக்குநர், கதாநாயகன் என்று பலரையும் அனுசரித்துப் போகவேண்டும். தெலுங்கில் அப்படியில்லை." என்கிறார். பின்னர் அங்கு எப்படி? என்பதை மட்டும் அவர் சொல்லவில்லை.

விரைவில் திரைக்கு வரவுள்ள 'நான் உங்க வீட்டுப் பிள்ளை' படத்தில் ரம்யா கிருஷ்ணனும், ஆம்னியும் போட்டி போட்டுக் கொண்டு கலக்கியிருக்கிறார்களாம்.



ஆம்னி
படம்: நான் உங்கவீட்டுப் பிள்ளை



கமல்-மீனா
படம்: அவ்வை சண்முகி



அர்ஜுன்
படம்: சுபாஷ்

## திரையுலகில் திடீர் கல்யாணம்

தமிழ்த் திரையுலகைத் திடீரென அதிரவைத்த சந்தோசமான செய்தி ரகுவரன்-ரோகிணி திருமணச் செய்தி.

'மகளிர் மட்டும்' படத்தின் மூலம் நல்ல நடிகை என்ற பெயர் எடுத்தவர் ரோகிணி. 'தொட்டாச்சிணுங்கி' வெற்றிப் பட இயக்குநர் அதியமானைக் காதலித்தார் ரோகிணி. இருவரும் நெருங்கிப் பழகினார்கள். திருமணம் நடக்கப்போவதாகவும் செய்தி பரவியது. இடையிலே ஏதோ கச முசா. இருவரும் நண்பர்களாகவே பிரிந்துவிட்டனர்.

நடிகை ரேவதியுடன் இணைந்து 'ஸ்வாபிமான்' என்னும் சமூக சேவை அமைப்பை ஆரம்பித்துள்ளார் ரோகிணி. அந்த அமைப்பின் ஆரம்பவிழாவிற்கு ரகுவரனும் அழைக்கப்பட்டிருந்தார். விழாவின் இடையே இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். ரோகிணியின் சமூக சேவை மனப்பான்மை ரகுவரனுக்கு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது.

போதை மருந்துகளுக்கு அடிமையான ரகுவரன் சமீபத்தில்தான் அதிலிருந்து மீண்டுள்ளார். ரகுவரனுக்கு அவர் வீட்டார் மணப் பெண் தேடிக்கொண்டிருந்தார்கள். அந்த மணப் பெண் ஏன் ரோகிணியாக இருக்கக்கூடாது என்று நினைத்தார் ரகுவரன். விழா வின் பின்னர் மீண்டும் ஒரு சந்திப்பு. இருவரும் மனம்விட்டுப் பேசினார்கள். திருமணம் செய்ய முடிவெடுத்தார்கள். இந்தத் திடீர் கல்யாணம் திரையுலகுக்கு அதிர்ச்சி. எதிர்பாராத முடிவு ஆனால் இனிப் பான முடிவு என்கிறார்கள் புது மணமக்கள். தம்பதிகள் இருவரும் உடனே புறப்பட்டு தேன்நிலவுக்கு சென்றுவிட்டனர்? ஐந்துநாள் புரோக்கிராம்.

## சத்யராஜ் வீட்டில் சோதனை


தமிழ்நாட்டில் முன்னாள் மந்திரிகளைத் துரத்தித் துரத்தித் தொல்லைப்படுத்துகிறது வருமான வரித் துறை.

அரசியல்வாதிகளோடு மட்டும் நின்றுவிடாமல் திரை உலகப் புள்ளிகள் வயிற்றிலும் புளியைக் கரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

செந்தில், கவுண்டமணி, ரம்பா ஆகியோர் வீட்டில் முன்னர் சோதனை நடந்தது. சமீபத்தில் சத்யராஜ் வீட்டிலும் புகுந்து துருவியிருக்கிறார்கள்.

சத்யராஜ் வீட்டில் நடைபெற்ற சோதனைக்கு அரசியல் பின்னணி இருக்கலாமோ என்று சந்தேகம் எழுந்துள்ளது.

கலைஞர் கருணாநிதியின் திரையுலகப் பொன்விழாக் குழுவுக்கு சத்யராஜ்தான் பொருளாளராக இருந்தார். ஆயினும் விழாவில் சத்யராஜ் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருந்தார். அதன் பிரதிபலிப்புதான் சத்யராஜ் வீட்டில் சோதனை. அதுதான் சந்தேகம்.



## ரஜனி சொன்ன 'ச்'

'அருணாச்சலம்' இந்தப் பெயரில் உள்ள 'ச்' என்ற எழுத்தை மறந்துடாதீங்க என்று ரஜினியே கூறியிருக்கிறார். 'அருணாச்சலம்' என்பது ரஜினி நம்பும் கடவுளின் பெயர். 'ச்' இல்லாமல் போனால் 'அருணாசலம்' என்பது யாரோ ஒருவருடைய பெயர் போலத் தெரியுமாம்.

'அருணாச்சலம்' படத்தில் நடிக்க முன்னணி நடிகைகள் பலர் ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். அவர்களில் ரம்பா-சவுந்தர்யா இருவருக்கும் வாய்ப்புக் கொடுக்க ரஜினி முடிவெடுத்துள்ளாராம். முடிவு இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

'அருணாச்சலம்' படப்பிடிப்பு நவம்பர் மாதம் ஆரம்பித்து மார்ச் மாதம் முடிவடையும். தமிழ் புத்தாண்டு தினத்தன்று திரைக்கு வரும். ரஜினி ரசிகர்கள் நீண்டநாள் காத்திருக்க வேண்டும்.

## செல்வன் தோல்வி

விஜயகாந்த் நடிக்க பாரதிராஜா இயக்கிய 'தமிழ்செல்வன்' படம் தோல்விப் படமாகிவிட்டது. பாரதிராஜாவின் முத்திரையும் இல்லை, விஜயகாந்தின் படம் போலவும் இல்லை என்று ரசிகர்கள் குறைசொல்கிறார்கள். ஆனால் விஜயகாந்த் வேறு மாதிரிச் சொல்கிறார். "பாரதிராஜா பெரும் இயக்குநர். அவர் சொன்னபடி நான் நடித்தேன். எனக்கு முழுத் திருப்திதான்" என்கிறார்.

விஜயகாந்த் பெரிதும் நம்பியிருக்கும் படம் 'அலெக்சாண்டர்' பிரமாண்டமாக தயாராகி முடியும் தறுவாயில் இருக்கிறது.



## கற்பூர பொம்மை

ராஜா-அமலா ஜோடியாக நடிக்க 'கற்பூரமுல்லை' என்றொரு படம் முன்னர் வந்தது. தற்போது தயாராகும் படமொன்றுக்கு 'கற்பூர பொம்மை' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

ரமேஷ் அரவிந்த்-சுருதி ஜோடியாக நடிக்கின்றனர். 'கல்கி' படத்தில் பாலசந்தர் அறிமுகம் செய்துள்ள நடிகை சுருதி. 'கல்கி' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போதே மற்றொரு வாய்ப்புக் கிடைத்துவிட்டதில் சுருதி குசியில் இருக்கிறார்.

திரைக்கதை இயக்கம் எஸ்.மகேந்தர். இசை; அம்சலேகா. பாடல்கள்; வைரமுத்து. சண்டைப்பயிற்சி சூரியப்பிரகாசம்.

## நீளமான தலைப்பு

'காதல் கோட்டை' படத்தின் கதை தனது சொந்தச் சரக்கு என்றும், இயக்குநர் அகத்தியன் தன்னை ஏமாற்றிவிட்டார் என்றும் சொல்லித்திரிந்தவர் பாலு.

இப்போது அதே பாலு ஒரு படத்தை இய்க்கப்போகிறார். படத்தின் பெயர்தான் கொஞ்சம் நீளம். 'காலமெல்லாம் காதல் வாழ்க' என்பதுதான் படத்தின் பெயர். 'காதல் கோட்டை' படத்தில் இடம்பெற்ற ஒரு பாடலின் முதல் வரிகள்தான் இது. படத்தை தயாரிப்பது 'காதல் கோட்டை' படத்தை தயாரித்த நிறுவனம்தான். நடிக, நடிகையர் தேர்வு நடைபெற்று வருகிறது.

மற்றொரு செய்தி; விஜய் நடிக்கும் படமொன்றுக்கு 'காலமெல்லாம் காத்திருப்பேன்' என்று பெயர் சூட்டியுள்ளார்கள். ஒரே பெயர் குழப்பம்தான்.

## புதிய பெயர்கள்

தமிழ்நாட்டில் பிலிம் சேம்பரில் பதிவு செய்யப்பட்டுள்ள புதிய படம் பெயர்களின் பட்டியல் இது.

'இழப்பதற்கு ஒன்றுமில்லை', 'கல்யாண சுந்தரம்', 'கருவேலம் பூக்கள்', 'எட்டுத்திக்கும் என் பாட்டு', 'தாதா', 'முன்னேற்றம்', 'மை லவ்வர்', 'ஓ.பேபி', 'பாரிஜாத பூவே', 'பெரியண்ணன்', 'வந்தேன்டா பால்காரன்', 'சந்தோசம்', 'ரவுடி', 'ரோமியோ யூலியட்', 'தியாகியின் மகன்', 'அழகி', 'டியர் மம்மி' 'சிற்றரசன்' பெயர் பஞ்சம் காரணமாக இப்படியெல்லாம் பெயர் சூட்டிவிட்டார்கள்.

## தலை தீபாவளி

விக்னேஷ்-சங்கீதா ஜோடியாக நடிக்கும் புதிய படம் 'தலைதீபாவளி'.

வி.சி. குகநாதன் கதை, வசனம் எழுதி இயக்குகிறார். இசை; சிற்பி. பாடல்கள்; மு. மேத்தா. கிராந்தி குமார் என்னும் புதிய வில்லன் அறிமுகமாகிறார் மணிவண்ணன், வடிவேலு, சஞ்சய், நிழல்கள் ரவி, விவேக் ஆகியோரும் நடிக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

**முகப்பில்** ராமராஜன் — படம்:–நம்ம ஊரு ராசா | நடிகை கஞ்சன் — படம்:–காதல் புத்தகம்



## கமல் மாமி

ஹொலிவுட் 'மேக் அப் மேன்' உதவி இல்லாமலேயே 'அவ்வை சண்முகி' படத்தில் தனக்குத் தானே மேக் அப் போடுகிறார் கமல். நடுத்தரப் பெண்போல மார்பகங்கள், இடுப்பில் மடிப்புக்கள் எல்லாமேகூட எதார்த்தமாக இருக்கும்படியாக 'மேக் அப்' போட்டுள்ளார். (நான்தான் மேக் அப் போட்டேன் என்று யாராவது கிளம்பப்போகிறார்கள்)

இந்தியன் தாத்தா கமலின் தந்தை போல சாயலில் இருந்தார். 'அவ்வை சண்முகி'யில் கமலின் மாமி வேஷம் கமலின் தாயை நினைவு படுத்துமாம்.

## தயாராகிறது 'ராமர் படை'

'கிராமராஜன்' என்று அழைக்கப்படும் ராமராஜன் காட்டில் மீண்டும் மழை பொழிகிறது. 'நம்ம ஊரு ராசா' படம் திரைக்கு வந்திருக்கிறது. ராமராஜனும் சங்கீதாவும் நடித்துள்ளனர். தயாரிப்புச் செலவு குறைவு என்பதால் படம் ஐம்பது நாட்கள் ஓடினால்கூடப் போதும்.

'நம்ம ஊரு ராசா' ராமராஜனின் சொந்தத் தயாரிப்பு. அதனை திரையிட்டுச் சூட்டோடு புதிய படம் ஒன்றுக்கு பூஜைபோட்டுவிட்டார். படத்தின் பெயர் 'ராமர்படை'.

ஒரு கிராமத்தில் வேலை இல்லாத இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார்கள். கிராமத்தைப் பாதுகாக்கப் போராடுகிறார்கள். இளைஞர் குழுவின் தலைவராக ராமராஜன் நடிக்கிறார். அவரது பாத்திரத்தின் பெயர்தான் ராமர். திரைக்கதை, வசனம், இயக்கம் ராமராஜன்.

வடிவேலு, பொன்னம்பலம், காந்திமதி, கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர். கதாநாயகி யார் என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

இசை, சிற்பி, நடனம், மஸ்தான், சண்டைப்பயிற்சி கனல் கண்ணன்.

## மி னி சி னி

★ கமல்-மீனா நடித்து தீபாவளிக்கு வெளியாகவுள்ள 'அவ்வை சண்முகி' படத்தில் சிறிய வேடத்தில் ஹீரா நடித்து வருகிறார். முதலில் இந்த வேடத்தில் சங்கவி நடிப்பதாக இருந்தது.

★ 'அதர்மம்' படத்தைக் தயாரித்த ஜி.கே. ஃபிலிம்ஸ் நிறுவனம் தற்போது 'நேதாஜி' படத்தைத் தயாரித்து வருகிறது. இது முடிவடைந்ததும் பிரபு நடிக்கும் புதிய படமொன்றைத் தயாரிக்கவிருக்கிறது.

★ 'பூவே உனக்காக...' படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் அஞ்சு அரவிந்த். இவர் நடித்த முதல் படமான 'அட்சரம்' என்ற மலையாளப்படம் தமிழில் 'ரிப்போர்ட்டர்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது இதில் சுரேஷ்கோபி ஹீரோவாக நடித்துள்ளார்.

★ ஒளிப்பதிவாளர் அப்துல் ரகுமான் இயக்கும் 'மனசு' படத்தில் வில்லனாக நடிப்பவர் சஞ்சய். இவர் 'மௌன கீதங்கள்' படத்தில் பாக்யராஜ்- சரிதாவுக்கு மகனாக மாஸ்டர் சுரேஷ் என்ற பெயரில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர்.

★ கார்த்திக்-ரம்பா நடித்த 'உள்ளத்தை அள்ளித்தா' மோகன்பாபு- ஷில்பா ஷெட்டி நடிக்க தெலுங்கில் தயாராகி வருகிறது. 'ஹலோ பிரதர்', 'ஆமே' போன்ற படங்களை இயக்கிய இ.வி.வி.சத்யநாராயணா இப்படத்தை இயக்குகிறார்.

★ ராஜ்கிரண் நடிக்கும் 'பொன்னு விளையிற பூமி' படத்தைத் தயாரித்து வரும் ஏ.ஜி.சுப்ரமணியம், அடுத்து நெப்போலியன் நடிக்கும் படம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளார். படத்தின் பெயர்- 'எங்க ரத்னம்'.

★ 'சீதா', 'நீதிக்குத் தண்டனை' ஆகிய படங்களில் நகைச்சுவை வேடத்தில் நடித்துள்ள 'ஜென்டில்மேன்' ஷங்கர், அடுத்து தான் இயக்கும் புதிய படத்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்கவுள்ளார்.

★ 'சுந்தரபுருஷன்' வெற்றிப்படத்தின் மூலம் கதாநாயகனாக உயர்ந்துள்ள லிவிங்ஸ்டன், அடுத்து மூன்று புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். அவற்றில் ஒன்றை அவரே இயக்குகிறார்.

★ கன்னட சுப்பர் ஸ்டார் விஷ்ணுவர்த்தனுடன் குஷ்பு இணைந்து நடிக்கும் 'ஜீவநதி என்ற கன்னடப் படத்தில் ஊர்வசியும் முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை நடிகை சுமித்ராவின் கணவர் டி.ராஜேந்திரபாபு இயக்குகிறார்.

★ கஸ்தூரிராஜா இயக்கத்தில் வெளியான 'நாட்டுப்புறப்பாட்டு' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 'நாட்டுப்புறக்கூத்து' என்ற பெயரில் புதிய படமொன்றைத் தயாரிக்கிறார்கள்.

## அப்பாஸின் 'கிளியோபாட்ரா'

'காதல் தேசம்' படத்தில் இரண்டு கதாநாயகன்கள். ஒருவர் வினீத். மற்றவர் அப்பாஸ். படம் வெளியான பின்னர் வினீத்தை விட அப்பாஸ் பக்கம்தான் அதிஷ்டக்காற்று அடிக்கத் தொடங்கியிருக்கிறது.

ஐந்துக்கு மேற்பட்ட படங்களில் மளமளவென்று ஒப்பந்தமாகியிருக்கிறார். கிளாமரான கதாநாயகனாக வருவார் என்று கருதி அவசர அவசரமாக ஒப்பந்தம் செய்கிறார்கள்.

அப்பாஸ் புதிதாக நடிக்கும் படங்களில் ஒன்றுக்கு 'கிளியோபாட்ரா' என்று பெயர் சூட்டியுள்ளனர். உலகப் பேரழகி கிளியோபாட்ராவின் பெயரில் முன்னர் ஹொலிவூட்டில் ஒரு படம் வந்தது. ரிச்சட் பேட்டன், எலிசபெத் டெய்லர் ஆகியோர் நடித்திருந்தனர்.

இப்போது தமிழில் ஒரு 'கிளியோபாட்ரா'. ஹொலிவூட் படத்துக்கும் இதற்கும் ஒரு தொடர்பும் இருக்காது. இது அந்த அழகியின் கதை அல்ல. வேறு மாதிரியான காதல் கதை. இயக்கப் போகிறவர் எம். செல்வராஜ். இயக்குநர் ஷங்கரிடம் உதவியாளராக இருந்தவர்.

அப்பாஸின் ஜோடியாக நடிக்க ஒரு அசத்தலான அழகியை தேடிக் கொண்டிருக்கிறார்கள்.




சரத்குமார்-நக்மா
படம்: அரவிந்தன்

## குஷ்புவின் பரபரப்பான வாக்குமூலம்

பம்பாயில் இருந்து வெளியாகும் பத்திகை ஸ்டார் டஸ்ட். அதில் குஷ்புவை பேட்டி கண்டிருந்தார்கள். குஷ்பு கூறியுள்ள நாட்டுக்குத் தேவையான அதிமுக்கிய தகவல் இது.

"நான் கர்ப்பமுற்றதாகவும், பிரபுதான் கர்ப்பத்தைக் கலைக்கச் சொன்னதாகவும் கூறுகிறார்கள். அதில் உண்மையில்லை. பிரபுவும் நானும் சேர்ந்திருந்த ஒன்றரை வருட காலத்தில் நாங்கள் கர்ப்பத்தைத் தடுக்க எந்த வித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படியிருந்தும் நான் கர்ப்பமுறவில்லை. அதற்குக் காரணம் என் கர்ப்பப்பையில் இருந்த கோளாறுதான்."

இந்த நடிகைகளுக்கு விவஸ்தையே இல்லையா என்றுதானே நினைக்கிறீர்கள். திறந்த புத்தகமாக இருக்க விரும்புகிறார்கள். அவ்வளவுதான்!

## அண்ணி மீனா

வீரா, எஜமான், முத்து ஆகிய படங்களில் ரஜினிக்கு ஜோடியாக நடித்தவர் மீனா. அதன் பின்னர் ரஜினி ரசிர்கள் மீனாவுக்கு கடிதம் போடுகிறார்களாம். கடிதத்தில் 'அண்ணி' என்று அன்பொழுக அழைக்கிறார்களாம்.

ரஜினியுடன் சேர்ந்து நடித்தது பெரிய பாக்கியம். அவர் ஒரு நல்ல மனிதர். நல்ல நடிகர். என்று புகழ்கிறார் மீனா.



பிரசாந்த்-சங்கவி
படம்: மன்னவா

## பிரசாந்தின் 'ஜீன்ஸ்'

'காதலன்', 'இந்தியன்', 'ஜென்டில்மேன்' படப்புகழ் ஷங்கர் இயக்கும் படத்தில் பிரசாந்த் கதாநாயகன். அதெல்லாம் இருக்கட்டும், படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'ஜீன்ஸ்'. 'ஜீன்ஸ்' படத்தில் பிரசாந்துக்கு இரட்டை வேடம் கொடுக்கலாமா என்று யோசிக்கிறார் ஷங்கர். கதாநாயகி இன்னமும் முடிவாகவில்லை. இசை: ஏ.ஆர்.ரகுமான். வசனம்: கதாசிரியர் பாலகுமாரன். ஒளிப்பதிவு: அசோக்குமார். 'ஜீன்ஸ்' பிரமாண்டம் காட்டும் போலத்தான் தெரிகிறது.

'காதலன்', 'காதல்தேசம்' படங்களைத் தயாரித்த குஞ்சுமோன் தயாரிக்கும் படம் கோடீஸ்வரன். அதில் அப்பாஸ் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டார். அப்பாஸுக்குப் பதிலாக பிரசாந்தை நடிக்க வைக்கலாமா என்று யோசித்து வருகிறார் குஞ்சுமோன். அப்படி நடித்தால் பிரசாந்துக்கு மற்றுமொரு பிரமாண்டமான படம் ஒன்று கிடைக்கும்.

பிரசாந்த்-சங்கவி ஜோடியாக நடிக்கும் 'மன்னவா' விரைவில் திரைக்கு வரப்போகிறது. 'மன்னவா' நன்றாக ஓடினால் பிரசாந்த் படங்கள் சம்பகாலமாக வாங்கிய அடிகளுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும்.

## ★ ரசிகர்கள் கலாட்டா

'சிவசக்தி' படம் தமிழ்நாட்டில் திரையிடப்பட்ட திரையரங்குகளில் சின்னச் சின்னக் கலாட்டா.

படத்தில் சத்யராஜ் கடத்தல்காரன். பிரபு சத்யராஜை மடக்கிப் பிடிக்க வரும் இரகசிய பொலிஸ் அதிகாரி. சத்யராஜ் பிரபுவை அடித்தால் படம் பார்க்கும் பிரபு ரசிகர்கள் இருக்கைகளை உடைக்கிறார்கள். பிரபு சத்யராஜை அடிக்கும்போது சத்யராஜ் ரசிகர்கள் கலாட்டா செய்கிறார்களாம்.

ஏற்கனவே 'பாலைவனரோஜாக்கள்', 'சின்னத்தம்பி, பெரியதம்பி' 'அண்ணாநகர் முதல் தெரு' ஆகிய படங்களில் சத்யராஜ், பிரபு இருவரும் இணைந்து நடித்திருக்கிறார்கள்.

## வைரமுத்து ஒரு இலட்சம்

"ஒரு படத்தில் எத்தனை பாடல்கள் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு படத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் என் ஊதியம்." இதுதான் வைரமுத்துவின் லேட்டஸ்ட் நிபந்தனை. பாலசந்தர் படமான 'கல்கி' படத்திற்கு பாட்டெழுதவும் ஒரு இலட்சம் கேட்டாராம் வைரமுத்து. வெகுண்டெழுந்த பாலசந்தர் 'கல்கி' படத்தில் இளந்தேவன் என்பவரை பாட்டெழுத வைத்துள்ளாராம்.

அது மட்டுமல்ல 'கல்கி' பாடல் கசட்டில் கவியரசு 'இளந்தேவன்' என்றும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கடுப்பில் இருக்கிறார் வைரமுத்து.



படிப்பகம்

www.padippakam.com

# திட்டமிடுங்கள்! செயற்படுங்கள்!

## இல்லத்தரசிகளுக்கு அரிய யோசனை

"இப்போதான் பொழுது விடிஞ்ச மாதிரி இருந்தது. அதுக்குள்ள நேரம் ஓடி விட்டதே! ஏழு மணி ஆயிட்டுது. இனிக் குழந்தைகள் டியூஷன் விட்டு வந்து விடுவார்கள். அவரும் வந்து விடுவார். பிறகு டீ.வி. பார்த்து, சாப்பாட்டுக்கடை பரப்பி, எல்லாம் ஒழித்து ஒழுங்குபடுத்துவதற்குள் அவ்வளவு தான்- இன்றைய நாள் போயிடும்.

'முடியவில்லை', 'நேரம் கிடைக்கவில்லை' என்ற சாட்டுக்கள், தட்டிக்கழித்தல்கள், திருப்தியின்மையோடு நாட்களைக் கழிக்கின்றோம். கொஞ்சம் முன்யோசனையுடன் திட்டமிட்டுக் கொண்டால் இவற்றைத் தவிர்க்கலாம். நமக்கு வேண்டியது கொஞ்சம் ஆர்வமும் முயற்சியும் தான்.

திட்டமிடுதல் என்பது ஏதோ தொழில் நிறுவனங்களுக்கும் தலைவர்களுக்கும் மட்டும் சாத்தியம் என்று நினைக்காதீர்கள். நம் அன்றாட வாழ்வில் சின்னச் சின்னத் திட்டங்கள் போட்டால் வாழ்க்கை சீராக ஓடும். எல்லா விஷயங்களையும் திட்டமிட்டுச் செய்வதால் நம் பொன்னான நேரம், பணம், மன உளைச்சல் ஆகியவற்றை மிச்சப்படுத்தலாம்.

உங்கள் நெருங்கிய தோழியின்



கல்யாணம் நிச்சயமாகி இருக்கும். அவள் உங்கள் திருமணத்தின்போது உங்கள் இரசனைக்கேற்ப நல்ல பரிசளித்திருப்பாள். அவளுக்கும் அதே மாதிரி நல்லதை நிதானமாய்த் தேர்ந்தெடுத்து வியப்பில் ஆழ்த்த வேண்டும், என்று விரும்புவீர்கள். "இன்றைக்கு ஷொப்பிங் போகலாம்; நாளைக்குப் போகலாம்," என்று நாட்களைக் கடத்தி விட்டு, கடைசியில் முதல்நாள் மாலை அவதி அவதியாய் ஓடி, ஏதோ ஒன்றைத் தூக்கிக் கொண்டு வருவீர்கள். உங்கள் பணமும் வீண், கூடவே தேவையில்லாத மன உளைச்சல், "ச்சே கொஞ்சம் முன் கூட்டியே பிளான் பண்ணியிருக்கலாம்," என்று பின்யோசனை வரும்.

**திட்டமிடுதல் என்பது ஏதோ தொழில் நிறுவனங்களுக்கும், தலைவர்களுக்கும் மட்டும் சாத்தியம் என்று நினைக்காதீர்கள்!**

நம் பிரச்சனைகளையும், புலம்பல்களையும் கொஞ்சம் திட்டமிடுவதன் மூலம் சரி செய்து விடலாம்.

* மாதம் ஒரு முறை
* மாதம் இரு முறை
* வாரத்திட்டம்
* நாளையத் திட்டம்

என்று பல்வேறு விதமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

### மாதம் ஒரு முறை

மாதம் ஒரு முறை என்னென்ன செய்ய வேண்டும் என்று ஒவ்வொருமாத ஆரம்பத்திலும் ஒரு அட்டவணை தயார் செய்துகொள்ளுங்கள். உதாரணமாக,

1. உறவினர் வீடுகளுக்கு விஜயம் செய்தல்.
2. கலந்துகொள்ள வேண்டிய திருமணங்கள்.
3. மாதாந்திர ஷொப்பிங்.
4. திரைச்சீலைகள் மாற்றுதல்.
5. பழைய பேப்பர்களை எடைக்குப் போடுதல்.
6. கரண்ட், வாடகை, தண்ணீர் போன்றவற்றிற்குப் பணம் கட்டுதல்.

### மாதம் இரு முறை

எந்தெந்த வேலைகளை அடிக்கடி செய்ய வேண்டும் என்று பட்டியலிடுங்கள்.

1. ஒட்டறை அடித்து வீட்டைச் சுத்தம் செய்தல்.
2. மேசை விரிப்புக்களைத் துவைத்தல்
3. நெருங்கியவர்களுக்குக் கடிதம் போடுதல்
4. சமையலறையைத் துப்புரவு செய்தல்.



5. துணி அலமாரி, புத்தக அலமாரிகளை சுத்தம் செய்து அடுக்குதல்.

இந்தமாதிரி வேலைகளை அவ்வப் போது செய்து வந்தால் பின்னால் மொத்தமாகச் செய்யவேண்டிவராது.

### வாரத்திட்டம்

அடுத்தது, ஒவ்வொரு வார ஆரம்ப நாள் அல்லது கடைசி நாள் அன்று அந்தந்த வாரத்தில் என்னென்ன செய்யலாம் என்று திட்டமிட்டால் வேலை சுலபமாகும்.

1. துணிகளை 'அயர்ன்' பண்ணுதல்.
2. தையல் மெஷின், குளிர்சாதனப்பெட்டி போன்றவற்றைச் சுத்தம் செய்தல்.
3. தரைகளை, குளியலறைகளைச் சுத்தம் செய்தல்.
4. படுக்கை விரிப்பு மற்றும் தலையணை உறைகளை மாற்றுதல்.
5. ஒரு புதுச் சமையல் குறிப்பைத் தயார் செய்து பார்த்தல்.
6. குடும்பமாக வெளியே போக நேரம் ஒதுக்குதல்

### நாளைக்கான திட்டம்

உங்கள் அன்றாட வேலைகள் உங்களுக்குப் பழக்கமாக இருந்தாலும் சில நேரங்களில் சின்ன விஷயங்களை மறந்துவிடுவோம். சட்டைப் பொத்தான் தைக்க, செக் புத்தகம் புதிது வாங்க, மிளகாய் அரைக்க இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

முதல்நாள் இரவே மறுநாள் செய்ய வேண்டியவற்றை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். மறுநாள் ஏதாவது விசேஷம், கல்யாணம் என்றால் முதல்நாளே என்ன சேலை கட்டுவது, எந்த நகைகள் அணிவது என்று யோசித்துத் தயாராய் எடுத்து வையுங்கள். மறுநாள் காலையில் இதைக் கட்டவா, அதைப்போடவா என்று குழம்பிக் கொண்டு 'டென்ஷன்' அடைய வேண்டாம்.

உங்கள் குழந்தைகளுக்கும் சின்ன வயதில் இருந்து திட்டமிடுவதைப் பற்றிச் சொல்லிக்கொடுங்கள். சப்பாத்து, புத்தகப்பை போன்றவற்றை முதல்நாள் இரவே எடுத்து வைத்துக் கொள்ளும்படி பழக்கப்படுத்த வேண்டும். அவர்களின் சின்னச் சின்னத் தேவைகளையும் அவர்களே கவனித்துக் கொள்ளும்படி கற்பியுங்கள்.

வீட்டுவேலைகளை எல்லாவற்றையுமே நீங்கள் ஒருவரே செய்ய வேண்டும் என்றில்லை. குடும்பத்தினர் எல்லோருக்கும் அவர்களின் தகுதிக்கேற்ற வேலைகளைப் பகிர்ந்தளியுங்கள். வேலைகள் எல்லாம் சுலபமாக முடியும்.

திட்டமிட்டுப் பெரிதாய் அட்டவணையெல்லாம் போட்டு, சில பல காரணங்களால் (திடீர் உறவினர் வருகை, உடல் நலமின்மை போன்றபிற...) அவற்றைச் சரியாகச் செய்ய முடியவில்லை என்றால், "நமக்கு இதெல்லாம் சரிப்படாது" என்று சோர்வடையாதீர்கள். தொடர்ந்து கடைப்பிடியுங்கள்! திட்டமிட்டுச் செய்வதன் மகத்துவம் உங்களுக்கே புரிந்து விடும்.


திட்டமிட்டுச் செயற்பட்டு வெற்றி பெறுங்கள்!

# கழுத்திலும் குணம் காணலாம்


ஒருவர் எத்தனை அக்கிரம குணம் கொண்டவர் என்பதை ஒருவரின் கழுத்தைப் பார்த்தே கூறிவிடலாம். கழுத்து எவ்வளவுக்கு எவ்வளவு குட்டையாக இருக்கிறதோ, அவரிடம் அந்தக் குணம் அதிகமாக இருக்கும்.

மிகவும் குட்டையான கழுத்தைக் கொண்டவர் துணிச்சல் மிக்கவராகவும் ஆதிக்கம் செலுத்துபவராகவும் இருப்பார். எல்லாப் பிரச்சனைகளையும் அவரால் சமாளித்து விட முடியும். நிதானமாகத்தான் செயற்படுவார். ஆனால் என்ன செய்கிறோம் என்பது குறித்து அவருக்குத் தெளிவான எண்ணம் இருக்கும். எல்லாவற்றையும் ஒழுங்குமுறைப் படுத்துவதில் வல்லவர்.

நீண்ட கழுத்துடையவர்கள் பயந்த சுபாவம் உள்ளவர்களாக இருப்பார்கள். அத்துடன் ஒல்லியாகவும் அது அமைந்து விட்டால் அச்சம் அதிகமாக இருக்கும்.



குட்டையான கழுத்து — நீண்ட கழுத்து



முன்னே நீண்டுள்ள கழுத்து — பின்னோக்கிய கழுத்து

புதிய கருத்துக்களைச் சட்டென்று ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் கூச்ச சுபாவத்தின் காரணமாக உடனே நடைமுறைப்படுத்த மாட்டார்கள். தனக்காக மற்றவர்கள் சிந்திக்கவும் திட்டமிடவும் வேண்டும் என்று விரும்புகிற இவர்கள் மேலதிகாரிகள் இடும் ஆணையையும் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்வார்கள்.

கழுத்து எந்தக் கோணத்தில் அமைந்து இருக்கிறது என்பதும் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சமாகும். முன்னே நீண்டு காணப்பட்டால் அவர் இந்த உலகைப் புரிந்து கொண்டு செயல்படுபவராக இருப்பார். பின்னோக்கிச் சாய்ந்திருப்பது போல் இருந்தால் அவர் கனவு காணும் இயல்புடையவர். உலகியல் விஷயங்களில் அக்கறை இல்லாதவர்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுகந்தினி

### கறிவேப்பிலைக் குழம்பு

**தேவையானவை:**

கறிவேப்பிலை- 3 கை பிடி அளவு
புளி- எலுமிச்சம் பழ அளவு
மிளகாய்வற்றல்- 8
உளுத்தம் பருப்பு- 4 கரண்டி
உப்பு- 3 தேக்கரண்டி
பெருங்காயம்- சிறிய துண்டு.
கடுகு- சிறிதளவு.

**செய்முறை:**

வாணலியில் எண்ணெய் விட்டு அதில் மிளகாய், பெருங்காயம், உளுத்தம் பருப்பு ஆகியவற்றை வறுத்து எடுத்துக் கொள்ளவும். அத்துடன் உப்பு, புளி, கறிவேப்பிலை ஆகியவற்றை அம்மியில் வைத்து நன்கு அரைத்து விழுதாக்கிக் கொண்டு இரண்டு ஆழாக்கு நீர் விட்டுக் கலந்து அடுப்பில் வைத்துக்கொதிக்க விடவும். தளதளவென்று கொதித்ததும் இறக்கிக் கடுகு தாளிக்கவும்.

# சுமிதா சாவில் ஒரு மர்மம்

## ஸ்பெஷல் ரிப்போர்ட்

சில்க் சுமிதா- தமிழ் திரையுலகின் கவர்ச்சிக் கன்னி. சில்க் சுமிதாவின் பூர்வீகம் ஆந்திர மாநிலம். சொந்தப்பெயர்: விஜயலட்சுமி. பிறந்தது: 1960 டிசம்பர் 2ம் திகதி. வறுமையான குடும்பம்.

'வண்டிச் சக்கரம்' படத்தில் 'வா மச்சன் வா வண்ணாரப்பேட்டை' என்ற பாடலுக்கு கவர்ச்சி நடனம் ஆடியதோடு, 'சில்க்' என்ற பாத்திரத்திலும் நடித்தார். அதுதான் அறிமுகம்.

அதன்பின்னர் சில்க் சுமிதா இருந்தால்தான் படம் வெற்றிபெறும் என்ற நிலையை ஏற்படுத்தினார். 'சில்க்' அலை வீசிய காலம் அது. முன்னணி கதாநாயகிகள்கூட கலங்கிப் போயிருந்தனர்.

பணம் குவிந்தது. பொருள் குவிந்தது. புகழ்திரண்டது. படங்களில் நடிப்பதோடு ஆரம்பகாலங்களில் நட்சத்திர விடுதிகளில் கவர்ச்சி நடனம் ஆடியும் சம்பாதித்தார்.

சில்க் சுமிதாவின் கவர்ச்சியில் மயங்கிய படத்தயாரிப்பாளர்கள் மட்டுமல்ல, வசதியான புள்ளிகளும் சுமிதாவின் வீட்டுக்கதவை தட்டத் தொடங்கினார்கள்.

அந்த நேரத்தில்தான் தனக்கு ஒரு துணை தேவை என்று நினைத்தார் சில்க் சுமிதா. அப்போதுதான் அறிமுகமானார் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

எப்போதுமே தாடியுடன் காணப்படும் டாக்டர் ராதாகிருஷ்ணன் 50 வயதைக் கடந்தவர், திருமணமானவர், ராமு வயது 28, சுதா வயது25, ஆகிய பிள்ளைகளும் இருக்கிறார்கள், மகள் சுதாவுக்கு திருமணமாகி உத்ரா என்ற மகளும் இருக்கிறாள்.

டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கும் சில்க் சுமிதாவுக்கும் இடையே காதல் மலர்ந்தது. சில்க் வீட்டிலேயே தங்க ஆரம்பித்தார் ராதாகிருஷ்ணன்.

ராதாகிருஷ்ணனின் வீட்டில் இந்த விவகாரம் தெரியவந்ததால் பிரச்சனை ஏற்பட்டது. அதனால் எட்டு வருடங்கள் தன் குடும்பத்தைப் பிரிந்து இருந்தார். பின்னர் எப்படியோ குடும்பத்தினர் சமரசமாகினார்கள்.

ராதாகிருஷ்ணனின் பேரக் குழந்தையான உத்ராவும் சில்க் சுமிதாவோடு வந்து தங்குமளவுக்கு இரு குடும்பங்களுக்கு இடையிலும் உறவு மலர்ந்தது.

டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு சில்க் சுமிதாவின் அந்தரங்க வாழ்க்கை இரகசியங்கள் முழுவதும் தெரிந்திருந்தது. அவர் காதலித்தது சில்க் சுமிதாவின் பணத்தையா, மனதையா என்பதுதான் புதிராக இருக்கிறது.

ராதாகிருஷ்ணனின் போக்கில் வெறுப்படைந்த சில்க் சுமிதாவின் மனதில் இன்னொருவர் குடிபுகுந்தார். அவரது பெயர் பாபு.

ராதாகிருஷ்ணன்மீது சில்க் சுமிதா வெறுப்படைந்த நிலையிலும் அவரை வீட்டை விட்டு விரட்ட முடியாமல் இருந்தது ஏன்? ராதாகிருஷ்ணன் தனக்குத் தெரிந்த அந்தரங்க விஷயங்களை வைத்து சில்க் சுமிதாவை மிரட்டி வைத்திருந்தாரா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

பாபுவை சில்க் சுமிதா காதலித்துவந்தது ராதாகிருஷ்ணனுக்கும் தெரியும். ஆனால் அவரோ தனக்குத் தெரியாது என்று கூறியிருக்கிறார். அதனால் ராதாகிருஷ்ணன் மீது மேலும் சந்தேகம் ஏற்படுகிறது.

சில்க் சுமிதா இறந்தபின்னர் டாக்டர் ராதாகிருஷ்ணன் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"நானும் சுமிதாவும் 15 வருடகாலமாக கணவன்-மனைவியாக வாழ்ந்து வருகிறோம். ஆனால் அவருக்கு வேறொருவர்மீது ஆழ்ந்த காதல் இருப்பது எனக்குத் தெரியாது. இதை நினைக்கும்போது எனக்கு வேதனையாக




இருக்கிறது." என்று கூறியிருக்கிறார்.

"சில்க் சுமிதா தூக்கில் தொங்கியபோது கதவை உடைத்து அவரது உடலை கீழே இறக்கி சிகிச்சை செய்தேன்" என்றும் சொல்லியிருக்கிறார்.

சில்க் சுமிதா எழுதிவைத்ததாக கூறப்படும் கடிதத்தில் உள்ள விஷயங்களும் சந்தேகமாக உள்ளன.

அந்தக் கடிதம் இதுதான்.

"கடவுளே! நான் ஒரு துர்பாக்கியமானவள். கடந்த 7 ஆண்டுகளாக மிகவும் கஷ்டப்பட்டுவந்தேன். பாபுவைத்தவிர என்மீது பாசமுள்ளவர்கள் யாரும் இல்லை. நம்பியவர்கள் எல்லாம் என்னை ஏமாற்றிவிட்டனர்.

என்னைச் சுற்றியுள்ளவர்கள் என் பணத்தை சாப்பிட்டுவிட்டு என்னைக் கஷ்டப்படுத்திக்கொண்டே இருந்தனர். ஒரு நாள்கூட நிம்மதியாக வாழவிடவில்லை. கஷ்டங்களை நினைத்து சில நாட்கள் சாப்பிடாமலும் இருந்தேன்.

ஒரு தடவை நான் ஆசையுடன் நகைகள் வாங்கினேன். ஆனால் நிர்ப்பந்தம் காரணமாக அவற்றை அணிந்து பார்த்து அனுபவிக்க முடியவில்லை.

ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒரு வாலிபருடன் தொடர்பு ஏற்பட்டது. அவரை நான் உயிருக்கு உயிராக நினைத்தேன். அப்போது எனக்கு வாழ்க்கை கொடுக்கிறேன் என்றவர் இப்போது மறுக்கிறார். இதனால் நான் வேதனைப்பட்டேன்.

மேலும் ராமுவும் (உதவியாளர்) ராதாகிருஷ்ணனும் எனக்கு மிகவும் அநியாயம் செய்தார்கள். நான் நல்லது செய்யவேண்டும் என்று நினைத்தும் அவர்கள் எனக்கு தீமைகளையே செய்தனர். தினம் தினம் மிரட்டல்கள் இருந்தால் எப்படி நிம்மதியாக வாழமுடியும்?" என்று தொடர்கிறது கடிதம்.

ராதாகிருஷ்ணன் மீது சில்க் கோபமாக இருப்பதாக கடிதம் கூறுகிறது. ஆனால் ராதாகிருஷ்ணன் சில்க் வீட்டிலேயே இருந்திருக்கிறார். அது தவிர குறிப்பிட்ட கடிதத்தையும் பொலிசார் வரமுன்னரே ராதாகிருஷ்ணன் எடுத்து மறைத்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லை.

எனவே-தன்மீது சந்தேகம் வராமல் இருக்கக்கூடியதாக புத்திசாலித்தனமாக அப்படி ஒரு கடிதத்தை ராதாகிருஷ்ணனே தயாரித்தாரா? அல்லது சில்க்கை நிர்ப்பந்தம் செய்து எழுத வைத்தாரா என்றும் சந்தேகம் ஏற்பட்டு உள்ளது.

அதுதவிர தனது சொத்தில் ஒரு பகுதியை காதலர் பாபுவுக்கும், மறுபகுதியை தனது குடும்பத்திற்கும் கொடுக்குமாறும் சில்க் கடிதத்தில் எழுதியுள்ளார்.

இதிலும் ஒரு சந்தேகம் எழுகிறது. சில்க் சுமிதா சம்பாதித்த பெரும் தொகைப் பணத்தை ராதாகிருஷ்ணன் எடுத்திருக்கலாம். அது கணக்கில் வராத பணம் என்பதால் யாருக்கும் தெரியவர வாய்ப்பில்லை. சில்க் உயிரோடு இருந்தால்தான் தெரியும்.

ஆனால் சில்க் சுமிதாவை சொத்துக்காக கொலை செய்தார்களா? என்ற சந்தேகம் எழாமல் இருக்க பகிரங்கமாக தெரிந்த சொத்துக்களை வேறுயார் பெயருக்கோ சுமிதா எழுதி வைத்ததுபோல ராதா கிருஷ்ணனே தந்திரம் செய்திருக்கலாமோ? என்பதுதான் சந்தேகம்.

நடிக நடிகைகள் கறுப்புப் பணமாகத்தான் சம்பளம் வாங்குவார்கள். வருமான வரித்துறையை ஏமாற்றுவதற்காக அப்படி செய்வார்கள். சில்க் சுமிதா கிட்டத்தட்ட 15 வருடமாக சேர்த்துவைத்த கறுப்புப் பணம் கோடிக்கணக்காக இருக்கலாம். அது எங்கே போனது? அக்கேள்விக்கு விடை கண்டு பிடித்தால் பல உண்மைகள் வெளிவரலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AK

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

கையொப்பம்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12-10-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**டபிள்யு. எலிசபெத் மேரி**
புன்னைச் சோலை, மட்டக்களப்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# எங்கெங்கோ தேடித் தேடி......!

எங்கெங்கோ தேடித் தேடி
இதயத்தை
இம்சைப் படுத்த
இரவுகள் வரும்...!
▫ ▫
ராத்திரிகள்
ரணங்களாகும்;
ராகங்களும்
சோகங்களாகும்;
சோகங்களின்
தாகம் தீர்க்க
கண்ணீர் துளிகள்
வரண்டு போகும்.....;
ஒரு
கவிதா யாத்திரைக்காய்
இதயத்துள்
மூச்சுத் திணறல்
முழுதாய் கேட்கும்!
▫ ▫
கனவுகளை
காயப் படுத்திவிட்டு
உணர்வுகள் எங்கோ
உறங்கப் போகும்....
▫ ▫
பிரிவுகளின் நீளத்தில்
பிரார்த்தனைகள் தொடரும்.....!
▫ ▫
இப்படித்தான்
எல்லாப் பொழுதுகளும்
அவள்
விழிகளுக்குள்ளேயே
மொத்தமாய்
விடிந்து முடியும்....!
▫ ▫
ஆனால்,
என்
மன ஆரோக்கியம்
சிதைந்து போனதற்கு
ஆதி மூலம்
அவள் தான் என்பது
யாருக்குத் தெரியும்....?
▫ ▫
மறுபடியும்
மறுபடியும்....
இதயத்தை
இம்சைப் படுத்த,
வழமை போல்
இரவும் வரும்....!

ஆ. சுதா சேகர்–பொத்துவில்–03.

# மனிதனில்லாத உலகம்

கண்களை மூடி நான்
கருத்தரிக்கப் போகிறேன்.!
**
இது ஒரு கோழிக்கூடு.
**
இங்கோ...
தங்களது மன அரிப்புகளை
இறக்கிவைக்கும் மனிதர்கள்;
கூடுகிற இடங்களில் பிறரைப் பற்றியே
பாரம் இறக்கும் சுமைவண்டிகள்!
மற்றவர்களிலேயே
வாழ்க்கையைச் செலவழிக்கும்
மனதுகள்!
**
கைகளைக் குலுக்கும்போதே
வாழ்க்கையின்
கனத்தை அளக்கும் விரல்கள்;
பைகளுக்குள் இருப்பதையே
கணக்குக் கூட்டிப் பார்க்கும்
பார்வைகள்!
**
இதனாற்றான்...
கண்களை மூடி நான்
கனவுகளில் மிதக்கப் போகிறேன்!
**
இல்லாதுவிட்டால்
உடன் பிறப்புகளே
என்னை உருக்கிவிடுவார்கள்!
**
உருக்கி..
வளையல்–மாலையென
வார்த்து விடுவார்கள்.
சந்தர்ப்பம் கிடைத்தால்...
இந்தச் சனங்கள்
எனது உணர்வுகளைக் கூட
கற்பழித்து விடுவார்கள்.
**
அதனாற்றான்.. அதனாற்றான்...
**
கண்களை மூடி நான்
கனவில் சஞ்சரிக்கிறேன்.
மண்ணில் வாழுகிற ஆசையினாற்றான்
உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு
உலவி வருகிறேன்.
**
எவரோடும் இணையாமல்..,
எவளோடும் பிணையாமல்...,
கனவுகளில்
இதுவரை உலகுக்கு வராத
முழுமனிதனை கண்டு ரசிக்கிறேன்!
**
அவன்தான் இன்னும்
உலகுக்கு வரவில்லையே!

நிலா பாலன்.

# சமாதிகள் ஓர் சண்டமாருதம்

அன்றிரவு முழுதும்– என்
கன்னங்களினூடாகக்
கசிந்த இரத்தம்– எனது
தலையெழுத்தின்
அவலத்திற்குச்
சாட்சி சொன்னது!
–o–
உன்னால்
கொடூரமாக்கப்பட்டுக்
கதறித்துடிக்கும்–என்
நிகழ்காலத்திலிருந்து
வேதனைகளை
வெளியேற்றிவிட
வேறெவராலும் முடியாது!
–o–
கனவுகளை மட்டும்
அலங்கரித்துவிட்டு– எனது
ஆன்மாவை
அடைவைத்து போய்விட்டாய்!
–o–
நினைவுப் புதையல்களை
மார்பிற்குள்–என்
நெஞ்சுக்குள் வைத்துவிட்டு
இதயத்தை
இருட்டாக்கிப் போய்விட்டாய்!
–o–
இருவருக்குமிடையே
இப்போதுள்ள
இடைவெளியை–எனது
கண்ணீர் ஓடை
அரித்து அரித்து
அதிகப் படுத்துகிறது!
–o–
உனக்கும்
எனக்குமிடையில்
நிலவி வரும்
நீண்ட பிரிவை
நீளமான எனது
பெருமூச்சுக் காற்று
அளந்து பார்க்கிறது!
–o–
எனது
சொப்பனங்களெல்லாம்
சூனியங்களாகின;
நான்
நினைத்திருந்தவற்றுக்கு
அப்பாற் பட்டவையெல்லாம்
வாழ்வின்
நிதர்சனங்களாயின!
–o–
உனை நான்
மன்றாடி அழைத்து
இதயத் துடிப்புக்களால்
பொங்கி வழிந்த வேளை
உன் வரவு நிகழ்ந்திருந்தால்...
ஒரு கணமேனும்
புத்துயிர் பெற்றிருப்பேன்!
–o–
ஏதோ ஒரு வெறிபோல
என்னுள்ளே
பொங்கிப் பரவும்
வேதனைத் தீப்பிழம்புகளை
எனது கண்ணீரால்
பொத்தி அணைத்திடப்
பெரும்பாடு படுகிறேன்!
–o–
இப்போது–
நானுறங்கும்
கல்லறைக்கு வந்து
யாரும் எனைத்
தட்டி எழுப்பாதீர்கள்!
ஏனெனில், இங்கு
புதையுண்டு கிடப்பது
பூ வல்ல, புயல்!

செல்வி பஹீமா ஜஹான்–
தெமடகொல்ல,மெல்சிரிபுர.

# கை கொட்டி மகிழ்ந்திருப்போம்

விலைவாசிக் கச்சுகள்
எட்டாமல் உயரப்பறக்கும்:
சிக்கனம் எல்லைகளைத்தாண்டி!
வருமானம் இவர்கள் மட்டும்
மட்டுப்படுத்தப் பட்டிருக்கும்!
ஆனாலும் நாங்கள்
கைகொட்டி மகிழ்ந்திருப்போம்,
மதுவுண்ட மந்திகளாய்!
**
காதுக்குள் புகுந்திருந்து
வானொலி புழுகுரைக்கும்,
வீதித் தொலைக் காட்சிகள்
தலைகளை வாங்கி நிற்கும்,
ஆயுதக் களஞ்சியம் போல்
பட்டாசுக் கடைகள் திறந்திருக்கும்!
அதனால் நாங்கள்
கைகொட்டி மகிழ்ந்திருப்போம்,
மதுவுண்ட மந்திகளாய்!
**
கிரிக்கட் யுத்தங்கள்
களம் போட்டு தொடரும்;
குறியற்ற தேவையுடன்
செஞ்சரிகள் விழும்;
விருதுகளுக்காக வீரர்கள்..!
விமோசனம் கிட்டாமல்
விசிறிகள்..!
ஆனாலும் நாங்கள்
கைகொட்டி மகிழ்ந்திருப்போம்,
மதுவுண்ட மந்திகளாய்!
**
விக்கட்டுகள் திக்கெட்டிலும்
காணாமற் போகும்,
ஸ்கோர் போட்டிருந்தும் தெரியாமல்,
வாவியோரமும் மிதக்கும்!
அடுத்த வசந்தம் வருமட்டும்
அமைதி காக்க வேண்டும்:
அதுவரை நாங்கள்
கைகொட்டி மகிழ்ந்திருப்போம்,
மதுவுண்ட மந்திகளாய்!!

மாலை வரோதயன்–கொழும்பு–6.

# மரணம்

மனிதனின்
இனிய....
வாழ்வின்
முற்றுப் புள்ளி!
**
'உருவ'
உலகத்திலிருந்து...
'அருவ'
அவனிக்குச் செல்ல....
வழங்கப்படும்
கடவுச் சீட்டு!
**
சுடுகாட்டின்
சுகந்தேடவும்
இடுகாட்டில்
இடந்தேடவும்
யமலோகத்துக்கு
யாத்திரை செய்யவும்
காத்திருப்போருக்கு....
எதிர்பாராது கிடைக்கும்
'அழைப்பிதழ்'!
**
கூற்றவனுடன்
தோற்றவன்
செய்து கொண்ட...
உடன் படிக்கை!
**
போர்க்களம்
இதன் சந்தை!
இங்கேயிது
மலிவு!
**
ஆயுதமும்
அணுகுண்டும்
இதன்
விசுவாசிகள்!
**
ஒவ்வொரு....
மனிதனின்
மனதிலுமிது
விழித்துக் கொண்டிருக்கும்!
**
குழந்தைகள்
இதனோடு....
புரியாது இணைவர்;
கிழடுகள்
இதனோடு....
புரிந்து இணைவர்!
**
நித்திரை
இதன்
ஒத்திகை!
**
வர்க்க வேறுபாடின்றி
வரவேற்கும்
யதார்த்தவாதி!
**
காலநேரமின்றி...
இதனோடு....
நாமிணைந்தால்
நாமும்
அமரர்களே!

சோ. ஸ்ரீதரன்– பொகவந்தலாவ.

# அந்த நாள் ஞாபகம்





→ 'கூண்டுக்கிளி' படத்தில் எம்.ஜி.ஆர்., சிவாஜி.



← பிரபு–சிவாஜி–ராம்குமார். அரைக்கால் சட்டையுடன் இருப்பவர்தான் பிரபு.

↓ முதற்படம் 'பராசக்தி'யில்



அக்டோபர் 1. நடிப்புலக இமயம் செவாலியே சிவாஜியின் 68வது பிறந்தநாள். 1952 இல் தனது 22வது வயதில் பராசக்தி மூலம் திரையுலகுக்கு அறிமுகமானவர் சிவாஜி. அன்று முதல் இன்றுவரை சிவாஜிகணேசனின் சாதனைகள்தான் நடிப்புலகுக்கு கிடைத்துள்ள அகராதி.



துணைவி கமலாவுடன்

## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

ஞாயிறு- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. பி.ப. 1 மணி
திங்கள்- தொழில் நன்மை, பண வரவு. பகல் 12 மணி
செவ்வாய்- உயர்ந்த நிலை, இனசன நன்மை. மு.ப. 10 மணி
புதன்- வீண் முயற்சி, பயனுள்ள பிரயாணம். பி.ப. 2 மணி
வியாழன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். பகல் 11 மணி
வெள்ளி- மனக்குறை நீங்கும், அந்நியர் சகவாசம். பி.ப. 2 மணி
சனி- காரிய சித்தி, பொருள் வரவு. பகல் 11 மணி

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

ஞாயிறு- மனக் குழப்பம், செலவு மிகுதி. பி.ப. 1 மணி
திங்கள்- தொழில் கஷ்டம், கடன் படல். மு.ப. 9 மணி
செவ்வாய்- வீண் முயற்சி, பிரயாண மிகுதி. பகல் 12 மணி
புதன்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். பகல் 11 மணி
வியாழன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. பி.ப. 2 மணி
வெள்ளி- கடன்தொல்லை நீங்கும், உயர்ந்த நிலை. மு.ப. 10 மணி
சனி- மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி. பி.ப. 2 மணி

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

ஞாயிறு- இனசன நன்மை, அந்நியர் உதவி. பகல் 12 மணி
திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. பகல் 11 மணி
செவ்வாய்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. பகல் 11 மணி
புதன்- வெளியிட வாசம், கௌரவம். மு.ப. 10 மணி
வியாழன்- வீண் முயற்சி, தொழில் மந்தம். பி.ப. 2 மணி
வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. பகல் 11 மணி
சனி- அந்நியர் உதவி, பண வரவு. பி.ப. 3 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

ஞாயிறு- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. பகல் 12 மணி
திங்கள்- வீண் முயற்சி, உறவினர் பழி. மு.ப. 10 மணி
செவ்வாய்- தொழில் சிறப்பு, கௌரவம். பி.ப. 2 மணி
புதன்- மனக்குறை நீங்கும், தேகசுக நன்மை. பகல் 11 மணி
வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. பி.ப. 2 மணி
வெள்ளி- மன மகிழ்ச்சி, வீண் பிரயாணம். பகல் 11 மணி
சனி- தொழில் கேடு, பணச் செலவு. பகல் 12 மணி

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

ஞாயிறு- உறவினர் உதவி, காரியானுகூலம் பி.ப. 2 மணி
திங்கள்- தொழில் நிலை நன்மை, வீண் பயம். பகல் 12 மணி
செவ்வாய்- இனசன உதவி, மன மகிழ்ச்சி. பி.ப. 1 மணி
புதன்- தொழில் பேறு, கடன் சுமை. பகல் 12 மணி
வியாழன்- பிரயாண மிகுதி, செலவு மிகுதி. பகல் 11 மணி
வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். பி.ப. 2 மணி
சனி- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. பகல் 11 மணி

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

## ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

(06.10.96 தொடக்கம் 12.10.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

கன்னி - சூரியன், இராகு, புதன்.
தனு - வியாழன்.
கும்பம் - சனி, (வக்கரம்)
மீனம் - கேது.
கர்க்கடகம் - வெள்ளி, செவ்வாய்.

சுபநேரம் புதிய நேரப்படி கணிக்கப்படுகிறது

★ சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

ஞாயிறு- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. பி.ப. 2 மணி
திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. பகல் 11 மணி
செவ்வாய்- பிரயாண மிகுதி, அந்நியர் உதவி. பி.ப. 2 மணி
புதன்- தொழில்நிலை மந்தம், மனக் கலக்கம். மு.ப. 9 மணி
வியாழன்- உறவினர் உதவி, செலவு மிகுதி. பி.ப. 2 மணி
வெள்ளி- தொழில் விருத்தி, பண வரவு. காலை 8 மணி
சனி- அந்நியர் பகை, வீண் மனஸ்தாபம். பி.ப. 2 மணி

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-4

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

ஞாயிறு- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. பி.ப. 1 மணி
திங்கள்- உயர்ந்த நிலை, கௌரவம். மு.ப. 9 மணி
செவ்வாய்- பிரயாணக் கஷ்டம், மனப் பயம். பி.ப. 2 மணி
புதன் - தொழில் சிறப்பு, இனசன நன்மை. பகல் 11 மணி
வியாழன்- வீண் பிரயாணம் , செலவு மிகுதி. பகல் 12 மணி
வெள்ளி- தொழில் மந்தம், காரியத்தடை. பி.ப. 2 மணி
சனி- எதிர்பார்த்த நன்மை, அந்நியர் உதவி. பி.ப. 3 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

ஞாயிறு- செய்தொழில் நன்மை, பண வரவு. பி.ப. 3 மணி
திங்கள்- உயர்ந்த நிலை, காரியானுகூலம். பகல் 12 மணி
செவ்வாய்- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. பி.ப. 2 மணி
புதன்- வீண் முயற்சி, செலவு அதிகம். பகல் 11 மணி
வியாழன்- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். பகல் 12 மணி
வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். பி.ப. 1 மணி
சனி- பொருள் விரயம், செலவு மிகுதி. மு.ப. 9 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

ஞாயிறு- சுபகாரிய மகிழ்ச்சி, வீண் கலக்கம். பி.ப. 2 மணி
திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. பகல் 11 மணி
செவ்வாய்- பிரயாண மிகுதி, வெளியிட வாழ்க்கை. மு.ப. 10 மணி
புதன்- மனக் கலக்கம், பொருள் நஷ்டம். பகல் 12 மணி
வியாழன்- முயற்சி பலிதம், வீண் பிரயாணம். பகல் 11 மணி
வெள்ளி- தொழில் நிலை மந்தம், கடன் படல். பி.ப. 1 மணி
சனி- காரிய சித்தி, பொருள் வரவு. பகல் 12 மணி

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

ஞாயிறு- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. பி.ப. 2 மணி
திங்கள்- தொழில் விருத்தி, இனசன நன்மை. மு.ப. 9 மணி
செவ்வாய்- அந்நியர் உதவி, பிரயாணக் கஷ்டம். பகல் 12 மணி
புதன்- மறைமுக எதிர்ப்பு, காரியத்தடை. பி.ப. 2 மணி
வியாழன்- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். பகல் 11 மணி
வெள்ளி- தொழில் இலாபம், பண வரவு. பி.ப. 2 மணி
சனி- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. பகல் 12 மணி

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. பி.ப. 3 மணி
திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. காலை 11 மணி
செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. பி.ப. 1 மணி
புதன்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். பி.ப. 3 மணி
வியாழன்- கடன் தொல்லை நீங்கும், பண வரவு. பகல் 12 மணி
வெள்ளி- பயனுள்ள செயல், கௌரவம். மு.ப. 10 மணி
சனி- முயற்சி பலிதம், பணக் கஷ்டம். பி.ப. 2 மணி

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


ஞாயிறு- பணக் கஷ்டம், மனக் கவலை. பி.ப. 2 மணி
திங்கள்- இனசன நன்மை, தொழில் விருத்தி. பி.ப. 1 மணி
செவ்வாய்- கடன் சுமை, காரியானுகூலம். பகல் 12 மணி
புதன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. பி.ப. 2 மணி
வியாழன்- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. காலை 7 மணி
வெள்ளி- தொழில் கஷ்டம், கடன் படல். பி.ப. 2 மணி
சனி- வீண் முயற்சி, இனசனப் பகை. மு.ப. 10 மணி

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4


படிப்பகம்

www.padippakam.com





## என்றும் உனக்கு நன்றி சொல்வோம்....

பச்சைநிறத் தேயிலையே
பசுமை நிறைந்த தேயிலையே
காலையில் எழுந்து கண் விழித்தால்
கவருது உந்தன் நறுமணமே!

கூடை கொண்டு தாய்மாரும்
கொழுந்து பறிக்கும் வதனம் கண்டு
களிப்பில் ஆழ்த்தும் காட்சி தனில்
உவகை கொள்ளுது எம் மனமே!

வெள்ளைக்காரர் முதற்கொண்டு
விரும்பிக் குடிக்கும் தேனீரை
விருப்பமுடனே எமக்களிக்கும்
விந்தை நிறைந்த தேயிலையே!

மலை நாட்டின் மக்களது
மண்ணில் வந்து பிறந்துவிட்டாய்!
இதனால் நாமும் பெருமை கொண்டு
என்றும் உனக்கு நன்றி சொல்வோம்!

திருமதி முத்துலட்சுமி ராமநாதன்-நிக்கவோயா தோட்டம், இறத்தோட்டை.

ஏவல்கள் செய்பவர் மக்கள்- இவர்
யாவரும் ஓர் குலம் அன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய்-நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்!
-சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறுகதை

# திருடனைப் பிடித்த தீரன்

**வி**ஷ்ணுவர்மன் ஆட்சிபுரியும் விஸ்வ புரியில் தீரன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். தந்தையில்லாத தீரனுக்கு தாய் மட்டுமே ஆதரவாக இருந்தாள்.

திடீரென்று அவன் தாய்க்கு உடல் நலமின்றிப்போனது. அவன் பல வைத்தியர்களைக் கூட்டி வந்து காண்பித்தும் நோய் குணமாகவில்லை. இதனால் மிகுந்த கவலையடைந்தான் தீரன்.

அதே சமயம் நாட்டில் பல கொள்ளைகள் சாமர்த்தியமாக நடந்து வந்தன. இந்தக் கொள்ளைகளை மூவரே செய்து வந்தார்கள். அரசாங்க வீரர்கள் பலமுறை முயன்றும் திருடர்களைப் பிடிக்க முடியவில்லை.

உடனே விஷ்ணுவர்மன், 'கொள்ளையர்களைப் பிடித்துக்கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் சன்மானமாக வழங்கப்படும்' என்று அறிவித்தான்.

ஒருநாள் இரவு மழை அதிகமாகப் பெய்து கொண்டிருந்தது. தீரன் நோயுற்றிருக்கும் தாயாருடன் வீட்டில் இருந்தான். அப்போது கதவு தட்டப்பட்டது. தீரன் கதவைத் திறந்தான்.



வெளியே மூன்று திருடர்கள் நின்று கொண்டிருந்தனர். கதவைத் திறந்ததும் திடீரென்று மூவரும் உள்ளே வந்து கதவை மூடிக்கொண்டனர்.

வந்தவர்களில் ஒருவன் தீரனைப் பார்த்து,

"டேய் சிறுவனே! இன்று அதிகம் மழை பெய்வதால் இன்று இரவு இங்கேயே தங்கப்போகிறோம். எங்களை நீங்கள் யாருக்காவது காட்டிக்கொடுக்க முயன்றால் உங்களைக் கொன்று விடுவோம்" என்று பயமுறுத்தினான்.

திருடர்கள் மூவரும் ஓர் அறைக்குள் சென்று தாம் திருடிய பொருட்களை வைத்தனர். அவர்கள் அந்த அறைக்குள் ஓய்வெடுக்கத் தீர்மானித்தனர்.

சிறிது நேரம் கழித்து ஒரு திருடன், "எங்களுக்குப் பசிக்கிறது. சாப்பாடு இருந்தால் கொண்டு வா" என்று சொல்லி விட்டு அவன் உள்ளே சென்றான்.

தீரனுக்கு பயத்திலும் மூளை வேலை செய்தது. அவனது தாயாருக்குத் தூக்கம் வருவதற்காக வைத்தியர் கொடுத்திருந்த மருந்தை எடுத்துக் கொண்டு போய் சாப்பாட்டில் கலந்து திருடர்களுக்குக் கொடுத்தான்.

இந்த விஷயம் தெரியாத திருடர்கள் மூவரும் அந்தச் சாப்பாட்டை சாப்பிட்டனர்.

சிறிது நேரத்தில் மருந்து வேலை செய்ய ஆரம்பித்தது. மூன்று திருடர்களும் தூங்கி விழ ஆரம்பித்தனர்.

இதை எதிர்பார்த்திருந்த தீரன் திருடர்கள் உள்ள அறையைப் பூட்டினான். வெளியே வந்து பார்த்தான். மழை 'சோ' வெனப் பெய்து கொண்டிருந்தது.

அந்த இரவில், மழையையும் பொருட்படுத்தாது, அரண்மனையை நோக்கி ஓடினான் தீரன்.

அரண்மனையில் காவல் புரிந்து கொண்டிருந்த வீரர்கள் தீரன் ஓடிவருவதைக் கண்டனர். தீரன் அவர்களிடம் நடந்தவைகளைச் சொன்னான். உடனே செய்தி சேனாதிபதிக்குப் போனது.

சேனாதிபதியுடன் நாலைந்து வீரர்கள் தீரனைக் கூட்டிக்கொண்டு அவனது வீட்டிற்குச் சென்றனர்.

வீட்டிற்குச் சென்ற தீரன் திருடர்கள் இருந்த அறையைத் திறந்து விட்டான்.

அங்கே அவர்கள் மயக்கம் போட்டுக் கிடந்தார்கள். அவர்களை வீரர்கள் பிடித்துச் சென்றனர்.

சேனாதிபதி மூலம் விஷயத்தை அறிந்து கொண்ட மன்னன் விஷ்ணுவர்மன், தீரனின் புத்திசாலித்தனத்தைப் பெரிதும் பாராட்டி, அறிவிக்கப்பட்ட ஆயிரம் பொற்காசுகளையும் அவனுக்குக் கொடுத்தான்.

ஆனால் தீரனோ,


"வேண்டாம் அரசே! நானும் இந்நாட்டின் ஒரு குடிமகன்; இது என் கடமை. இதற்குப் பதிலாக என் நோயுற்ற தாயைக் குணப்படுத்தினால் தங்களுக்கு நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்" என்றான்.

அதைக் கேட்டு வியப்புற்ற விஷ்ணுவர்மன் தீரனின் நாட்டுப் பற்றையும், தாய் மேல் இருக்கும் பாசத்தையும் கண்டு மெய்சிலிர்த்தான்.

அந்தப் பொற்காசுகளை அவனுக்கு வலுக்கட்டாயமாகக் கொடுத்து அவனது தாயாரைக் குணப்படுத்த அரண்மனை வைத்தியரையும் அனுப்பி வைத்தான்.

## வாரம் ஒரு நாடு

### போலந்து



தலைநகர் - வோர்சோ
பரப்பு - 3,12,677 சதுரக்கிலோமீட்டர்
மக்கள் தொகை- 3.84 கோடி
மொழி - போலிஷ்
எழுத்தறிவு-98%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - ஸ்லோட்டி
தனிநபர் வருமானம்- 1,960 டொலர்

அமைவிடம்:-

வடமத்திய ஐரோப்பாவில் போலந்து அமைந்துள்ளது.

வரலாறு:-

1939ல் ஜெர்மனி போலந்தை ஆக்கிரமித்தது. 1945ல் ரஷ்யா ஜெர்மனியை வென்றது. 1980 முதல் நிலையற்ற அரசியல் நிலை. ஒரே கட்சி (கம்யூனிஸ்ட்) ஆட்சி. 1989ல் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்தை விட வேண்டிய சூழல் உருவானது. லெக்வலேசா தலைமையிலான தொழிற்சங்கம் ஜனநாயக ஆட்சிக்கு வழிகோலியது.

பொருளாதாரம்:-

நிலக்கரி, கப்பல் கட்டுதல், வேதிப் பொருட்கள், இயந்திரங்கள், உணவு பதப்படுத்தல் போன்ற தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளன. சுமார் 32% மக்கள் விவசாயம் சார்ந்துள்ளனர்.

* போப்பாண்டவர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.10.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 161
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 159

பரிசுக்குரியவர்:
பி. விஸ்வநாதன்,
அல்-அக்ஸா மத்திய கல்லூரி, கல்பிட்டி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| அ.அ. முஹம்மது அஸாம்,<br>சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | நந்தகுமாரக்குருக்கள் கிருத்திகா,<br>பாக்கிய மகாவித்தியாலயம், மாத்தளை. |
| சிவநேசராசா- வியூரகன்,<br>சிவானந்த வித்தியாலய, கல்லடி, மட்டக்களப்பு. | வி. கௌரிசங்கர்,<br>குருமன்காடு, வவுனியா. |
| ஜுலினா ஜோக்கிம்,<br>மாளிகாவத்தை வீதி, கொழும்பு-10. | ந. நவதர்சினி,<br>கிரிஸ்லஸ் பாம் த.வி., கொட்டக்கலை. |
| சி. வீணாதேவி,<br>நு/அ/ சென் மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவ. | பாக்கியராச விகர்ணன்,<br>மகாவித்தியாலய வீதி, கோட்டைக்கல்லாறு-02. |
| ஐ. அஸ்மி அஹமட்,<br>யோனகபுர, திக்குவல்லை. | ச. பிரான்சினா லியோனி,<br>ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகாவித்தியாலயம், கம்பளை. |

## பிரபல விளையாட்டு

**உ**லகின் மிகப் பிரபலமான விளையாட்டு கால்பந்துதான். பெருமை மிக்க கால்பந்து விளையாட்டுக்கு, வேறு எந்த விளையாட்டுக்கும் கூடாத கூட்டம் கூடுகிறது. 140ற்கும் மேற்பட்ட நாடுகளில் ஒரே விதிமுறைகளில் இந்த கால்பந்து விளையாட்டு மட்டும்தான் விளையாடப்படுகிறது.




1937ம் ஆண்டில் இங்கிலாந்தில் ஒன்றரை இலட்சம் பேர் இந்த விளையாட்டைக் காணக் கூடினார்கள். 1950ம் ஆண்டில் பிரேஸில் நாட்டின் தலைநகரான ரியோ டி ஜெனிரோவில் நடந்த போட்டியைக் காண இரண்டரை இலட்சம் பார்வையாளர்கள் கலந்துகொண்டனர். இன்று இன்னும் அதிகம் இருக்கும்.

இந்த விளையாட்டு மற்ற விளையாட்டுக்களைவிட அதிகம் விரும்பப்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. கால்பந்து விளையாட்டு குறைந்த நேரம் விளையாடப்படுவதும் காரணங்களில் முக்கியமானதொன்றாகும். அத்துடன் இலகுவாக கற்றுக்கொள்ளக் கூடியது. அதிகளவான உபகரணங்கள் இதற்குத் தேவையில்லை, எத்தகைய மைதானத்திலும் விளையாடக்கூடியது போன்றவையும் காரணங்கள் ஆகும்.

1930ம் ஆண்டு முதல் கால்பந்து உலகக் கிண்ணப்போட்டிகள், நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெற்றுவருகின்றன. கால்பந்து விளையாட்டைத் தேசிய விளையாட்டாகக்கொண்ட பிரேஸில் நாடு உலகக் கிண்ணத்தை நான்கு முறை வென்றிருக்கிறது.

## கிவி



நியூஸிலாந்து நாட்டின் தேசியப் பறவை கிவி. நியூஸிலாந்து தீவுகளில் மட்டுமே இது வாழ்கிறது.

கிவி ஒரு விந்தையான பறவை. இது ஒரு கோழி அளவு பெரிதாக இருக்கும். இதற்கு இறக்கைகள் நன்றாக வளர்வதில்லை. எனவே இதனால் பறக்க முடியாது. ஆனால் இது மனிதனை விட வேகமாக ஓடக்கூடியது.

அடிமரப் பொந்துகளிலும் குழிகளிலும் இப்பறவை வாழ்கிறது. இதன் நிறம் கறுப்பு கலந்த சாம்பல் நிறம். இரை தேடச் செல்வதற்கு இப்பறவைக்கு இந்த நிறம் உதவியாக உள்ளது. பகலில் மறைந்திருந்து இரவில் தான் இது இரை தேடச் செல்லும். இதன் அலகு நீண்டிருக்கும். மற்றப்பறவைகளுக்கு இருப்பது போல மூக்குத் துளை இதன் அடிப்பாகத்தில் இல்லை. அலகின் நுனியிலேயே இருக்கிறது. இதனால் இதற்கு மோப்ப சக்தி அதிகம்.

நீண்ட அலகை மண்ணுக்குள் விட்டு, பூச்சிகளையும் புழுக்களையும், கொக்கி போலக் கவ்வி இழுத்து உண்ணும். இதன் முட்டை மிகப்பெரியது. ஆண் பறவை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்.

இந்தப் பறவைகளின் எண்ணிக்கை இப்போது குறைந்து வருகிறது. ஆகவே இதை வேட்டையாடக்கூடாது என்று நியூஸிலாந்து அரசு தடை விதித்துள்ளது.

## தப்பிக்க ஒரு தந்திரம்

**வ**யிறு நிறையத் தண்ணீர் குடித்தால் எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம். இது ஒரு மீன் செய்யும் தந்திரம். கடலில் வாழும் 'க்லோப் ஃபிஷ்' என்ற மீன் தான் இந்த வித்தையைக் கையாண்டு வருகிறது. எதிரியைக் கண்டவுடன் இந்த மீன் 'லபக் லபக்' கென்று தண்ணீரைக் குடித்து பெரிய பந்தைப் போன்று தன் உருவத்தைப் பெரிதாக்கிக்கொள்ளும். அந்த நேரத்தில் இதை விழுங்க முடியாமல் எதிரிமீன் திரும்பிச் சென்று விடும்.



## விடுகதைகளும் விடைகளும்

1. பருவத்தில் பச்சைப் பிள்ளை; பழுத்ததும் சிவலைப் பிள்ளை; பல்பட்டால் போதும் கல்லும் கதறி அழும். அது என்ன?
2. காற்று நுழையாத காட்டிலும் பார்த்து நுழைஞ்சிடுவான். அவன் யார்?
3. வெள்ளைக் கண்ணாடிக்குடம் விழுந்தால் நொருங்கி விடும். அது என்ன?
4. இரட்டை மதகுப் பாலத்தில் யாராலும் போக முடியவில்லை. அது என்ன?
5. தண்ணீரில் பிறந்து, தண்ணீரிலே அழிந்து பலன் பல தருவான். அவன் யார்?
6. ஓட்டை வாய்ச் சுப்பனுக்கு உடைந்த பல்லு முளைக்கவில்லை. அது என்ன?
7. பச்சை வாத்து முட்டை படக்கென்று வெடித்ததும் பறந்து போனது வெள்ளைக் கொக்கு. அது என்ன?
8. தெள்ளிய நீர் ஓடையிலே வெள்ளிக் கும்பா மிதக்குது. அது என்ன?

விடைகள்:
1. மிளகாய் 2. புகை 3. முட்டை
4. மூக்கு 5. உப்பு 6. சிப்பி
7. பஞ்சு 8. நிலா

தொகுப்பு: எம். ஊர்மிளா, கொழும்பு-04.



படிப்பகம்

www.padippakam.com

“கை கொடுங்க சார். பிராசிகியூஷன் நிறுத்தின ஒவ்வொரு சாட்சியையும் நொறுக்கித் தள்ளிட்டீங்க.”

“ரவி, நம்ம வாதத்தோட அடிப்படையே அந்த சட்டை மாற்றம் தான். கண்டிப்பா உன் ரூமுக்கு வந்ததையோ, அது உன் சட்டைங்கிறதையோ சொல்லக் கூடாதுன்னு நீ உறுதியா சொல்லிட்டியா, பாவம் மதன் கிடந்து தவிக்கிறான்.”

“சுத்த இடியட் சார். இந்தக் கொலையை நான் செய்யலைன்னு ஒரே ஒரு வார்த்தை அவன் சொல்லிட்டால் போதும்.”

“வேணாம். அவன் உண்மையே சொல்லட்டும். ஜவுளிக்கடைக்காரனும், கத்தி வித்தவனும் க்ளீனா சொல்லிட்டாங்க. போன் செஞ்சது உண்மை, கத்தி வாங்கினது உண்மை. ஆனா கறுப்பு கட்டம் போட்டசட்டை தான் போட்டிருந்தான்- இந்த சட்டை இல்லைன்னுட்டாங்க.”

“அது போதாதா உங்களுக்கு? பிடிச்சிக்கிட்டீங்க. நூறு சதவீதம் உறுதியா சொல்ல முடியாத இந்த இரண்டு சாட்சிகளையும் கோர்ட் ஏத்துக்கக் கூடாதுன்னு பொரிஞ்சி தள்ளிட்டீங்க.”

“பிராசிகியூஷன் ஆடிப்போய் நிக்கிது ரவி. காலயிலே டிஃபன்ஸ் தரப்பிலே உன்னையும், உங்க லாட்ஜ் மேனேஜரையும் நிறுத்தினாலே போதும். அந்த காபி கொடுத்த பையன் கூட தேவையில்லைன்னு நினைக்கிறேன்.”


“ஆக....நிச்சயமா மதனை வெளியே கொண்டாந்துடுவீங்க.”

“அதிலே டவுட்டே வேணாம்.”

“பாருங்க சார். என்ன அநியாயம் இது? நல்லா தெரியும்- மதன் தான் கொலை செஞ்சான். அதை அவனே ஒப்புக்கவும் செய்றான். ஆனாலும் அவனைக் காப்பாத்த முடியுதுன்னா.... நம்ம சட்டங்கள் எவ்வளவு பலவீனமா இருக்கு!”

“சட்டத்திலேயும் நிறைய சல்லடைக் கண்கள் இருக்கு. ஆனா இந்தக் கேசைப் பொறுத்தவரைக்கும் நமக்கு சாதகமா இருக்கிறது மூணு விஷயங்கள். ஒண்ணு, மதன் கீதாவைக் காதலிச்சதுக்கு மெட்டீரியலா எந்த எவிடென்சும் இல்லை. ரெண்டு, கொலையைப் பார்த்த நேரடி சாட்சி இல்லை. மூணு, உன் பெயரை குறிப்பிடலைன்னு மதன் உனக்குத் தந்த வாக்கு. இதிலே ஒண்ணு அடிபட்டிருந்தாலும், நாம தொலைஞ்சோம்.”

“ஏன் சார் இந்த ரோட்ல திரும்பறிங்க?”



“இங்கே தான் நான் பெட்ரோல் போடுவேன்.”

ரைட். அப்போ என்னை ரோடு முனையிலேயே இறக்கி விட்டுடுங்க. நான் ஆட்டோ பிடிச்சிப்போயிடறேன்.”

“ரைட். காலைல எட்டு மணிக்கெல்லாம் ஆபீசுக்கு வந்துடு. அந்த மானேஜரையும் அழைச்சுட்டு வந்துடு. ரெண்டு பேரையும்- எப்படி கேட்டா, எப்படி சொல்லணும்னு தயார் படுத்தணும். அங்கேர்ந்து அப்படியே கோர்ட்டுக்குப் போய்டலாம்.”

“சரி சார்.”

“யுவர் ஆனர், டிஃபன்ஸ் தரப்பிலே முதல் சாட்சியா மதனோட நண்பன் ரவியை விசாரிக்க விரும்பறேன்.”

“செய்ங்க....”

“ரவி! ரவி! ரவி!”

**இதுவரை** மதன்-கீதா காதலர்கள். கடற்கரையில் சந்திக்கின்றனர். அதே நாளில் கடற்கரையில் மரிய கீதா என்னும் பெண் கொலை செய்யப்பட்டு பிணமாகக்கிடக்கிறாள். கொலைப் பழி மதன் மீது விழகிறது.

காதலி கீதா சாட்சி சொன்னால் மதன் விடுதலையாகிவிடலாம். கீதாவோ தந்தைக்குப் பயந்து காதலை மறைக்கிறாள்.

சட்டத்தரணியின் திறமையால் மதன் விடுதலையாகிறான். அதே கடற் கரையில் காதலி கீதாவை அழைத்து கொலை செய்கிறான். பொலிஸில் சரணடைகிறான்.

நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. சட்டத்தரணியின் புத்திசாலித்தனமான வாதங்கள் மதனை மீட்குமா....? **இனி**

## அசத்தல் 4

“அதான் எனக்கும் புரியலை. அவன் மனநிலை பேதலிச்சிருக்கு. யாரோ அவனை செய்யாத குற்றத்தை செஞ்சதா ஒப்புக்கச் சொல்லி கடுமையா மிரட்டிருக்கணும்னு நான் நினைக்கிறேன்.”

“அப்ஜெக்ஷன் யுவர் ஆனர். சாட்சிகளிடமிருந்து பெற வேண்டியது பதில்களைத் தானேயொழிய.... அபிப்பிராயங்களை அல்ல.”

“ஆமாம். கோபாலகிருஷ்ணன், அந்த மாதிரி கேள்வி எல்லாம் வேணாம்.”

“ஓக்கே யுவர் ஆனர். சம்பவம் நடந்ததா சொல்லப்படற தினத்திலே, அதாவது மதன் ஜெயில்லேர்ந்து விடுதலையான அன்னிக்கு உங்களை சந்திச்சாரா?”

“ஆமாம். அன்னிக்கு முழுக்க என் கூடத்தான் இருந்தான்.”

“விபரமா சொல்லுங்க. எத்தனை மணிக்கு ரூமுக்கு வந்தான்?”

“காலைல பத்தரை மணிக்கு.”

“அப்போ என்ன சட்டை போட்டிருந்தான்?”

“ஒரு நிமிஷம் யுவர் ஆனர். அந்த சட்டையை கோர்ட்ல சமர்ப்பிக்க நான் ரவிகிட்டேர்ந்து வாங்கினேன். இதோ.... இதுதான் அந்த கறுப்பு கட்டம் போட்ட சட்டை இதுதானா ரவி?”



# மறுபடி தா!

## தமிழக கிரைம் கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

“உங்க முழுப் பேரே ரவிதானா?”

“ஆமாம் சார்.”

“இந்த கீதா கொலை வழக்கில குற்றம் சுமந்திருக்கிற மதனை உங்களுக்குத் தெரியுமா?”

“நல்லாத் தெரியும்.”

“எப்படித் தெரியும்?”

“என்னோட நெருக்கமான நண்பன். என்னோட தான், என் ரூம்லதான் தங்கி இருந்தான்.”

“எத்தனை வருஷமா பழக்கம்?”

“நாலஞ்சு வருஷமா....”

“ரொம்ப நெருக்கமான நண்பர்களா நீங்க?”

“ஆமாம்.”

“அந்தரங்கமான விஷயமெல்லாம் பேசுவிங்களா?”

“ஆமாம். யாரும், எதையும் மறைச்சதில்லை.”

“மதன் யாரையாச்சும் காதலிக்கிறதா எப்பவாவது சொல்லியிருக்காரா?”

“இல்லை. சொன்னதில்லை.”

“சரி, அவர் சொல்லாம, நீங்களா அவரோட நடவடிக்கைகளிலேர்ந்து அவர் யாரையாச்சும் காதலிக்கிறதா உணர்ந்திங்களா?”

“இல்லை. மதன் வேலைதான் தேடிக்கிட்டிருந்தான்.”

“ஏன் மிஸ்டர் ரவி, யாரையுமே காதலிக்காத மதன் இந்த கேசிலே, கீதாவை தான் காதலிச்சதாவும், கொலை செஞ்சதாவும் எதுக்காக சொல்லணும்.”

“ஆமாம் சார்.”

“மதன், ஜெயில்லேர்ந்து விடுதலையானதும் இந்த சட்டைதான் போட்டிருந்திங்களா?”

“ஆமாம்.”

“ரைட். மேஜை மேல ரத்தக்கறையோட இருக்கிற சட்டை யாரோடது?”

“தெரியலை சார். அந்த சட்டையை நான் பார்த்ததில்லை- இதுக்கு முன்னாடி.”

“சரி. பத்தரை மணிக்கு ரூமுக்கு வந்த மதன் கத்தி எதுவும் வச்சிருந்தாரா?”

“இல்லை.”

“அவர் ரூமுக்கு வந்ததை வேறு யாராச்சும் பார்த்தாங்களா?”

“எங்க லாட்ஜ் மேனேஜர் சிவராமன் பார்த்தார். மதன் கூட பேசினார்.”

“யுவர் ஆனர், மேனேஜர் சிவராமனை நான் அடுத்த சாட்சியாக சேர்த்திருக்கேன். ரவி, உங்க ரூமுக்கு வந்த மதன் அப்புறம் வெளில எங்கேயும் போனாரா?”

“எங்கேயும் போகலை. ரூமிலேயேதான் இருந்தான்.”

“எத்தனை மணி வரைக்கும்?”

“எட்டு மணி வரைக்கும்.”

“நோட் திஸ் ப்ளீஸ். போஸ்ட் மார்ட்டம். ரிப்போர்ட்படி கீதா இறந்த நேரம் ஏழிலேர்ந்து ஏழரை. சப்- இன்ஸ்பெக்டரோட சாட்சியப்படி கண்ட்ரோல் ரூம்லேர்ந்து செய்தி வந்தது ஏழே முக்காலுக்கு அந்த நேரத்தில் மதன் தன் நண்பரோட ரூம்ல இருந்திருக்கார். அப்புறம் ரவி, மதன் எப்படி போலீஸ் ஸ்டேஷன் போனான்?”

“அதான் புரியலை சார். அவனா போயிருக்க முடியாது. எட்டே காலுக்கு நான் சாப்பிடப் புறப்பட்டேன். அவனையும் கூப்புட்டேன். என்னை சாப்பிட்டுட்டு அவனுக்கு நாலு இட்லி மட்டும் பார்சல் வாங்கிட்டு வரச் சொன்னான். நான் போய் சாப்பிட்டுட்டு பார்சல் வாங்கிட்டு ஒன்பது மணிக்கு திரும்பி வந்து பார்த்தா ரூம்ல மதன் இல்லை. அடையாறு ஸ்டேஷனுக்குப் போய் என்மேல பொய் கேஸ் போட்டிங்களே, இது நியாயமான்னு அந்த இன்ஸ்பெக்டரைக் கேக்கணும்னு காலைல வந்ததிலேர்ந்து சொல்லிக்கிட்டிருந்தான். ஒரு வேளை ஸ்டேஷனுக்கு கோபமா புறப்பட்டுப் போய் இருக்கானோன்னு நினைச்சி நான் அடையாறு ஸ்டேஷனுக்கு வந்து வெளிலேர்ந்து பார்த்தேன். லாக்கப்புக்குள்ளே மதன் இருந்தான். எனக்கு பகீர்ன்னு ஆய்டுச்சி. உடனே வக்கீல் அய்யா! உங்ககிட்டே வந்தேன்.”

“யுவர் ஆனர், ரவியின் சாட்சியப்படிப் பார்க்கும் போது, எனது கட்சிக்காரர் மதன் ஒரு ஆத்திரத்தில் நியாயம் கேட்கப் புறப்பட்டு ஸ்டேஷன் வந்திருக்கிறார். போன வழக்கில் அவர் தப்பித்துவிட்ட கோபத்தில் இருந்தவர்கள் கீதா கொலை வழக்கில் மதனை சம்மந்தப்படுத்தி, மிரட்டி உதைத்து தங்கள் இஷ்டப்படி வாக்குமூலம் சொல்ல வைத்திருக்கிறார்கள். அதற்குத் தகுந்தாற்போல் சாட்சியங்களையும் அமைத்திருக்கிறார்கள்.”

“அப்ஜெக்ட் செஞ்சுதான் ஆகணும் யுவர் ஆனர். தன் கட்சிக்காரரை தண்டனையிலேர்ந்து காப்பாத்தறதுக்காக ஒட்டு மொத்தமா போலீஸ் டிபார்ட்மெண்ட்டையே அவதூறு பேசறது கண்ணியக்குறைவான செயல். கொலை ஆயுதம் கத்தியிலே மதனோட கைரேகை இருக்கிறதை ஃபாரன்சிக் லாப் டெக்னீஷியன் சாட்சியத்திலே நிரூபணம் செய்திருக்கோம். அதுகூட போலீஸ் செய்த செட்டப்ன்னு அபிப்பிராயப் படறாரா நண்பர்?”


“வேற வழியில்லை யுவர் ஆனர். அப்படித்தான் அபிப்பிராயப்பட வேண்டியிருக்கு. போலீஸ் டிபார்ட்மெண்ட்டை நான் தரக்குறைவா பேசலை. அவங்களோட சாதிக்கிற திறமைகளும், சாதனைகளும் எனக்குத் தெரியும். அதே சமயம் சாமர்த்தியமா பொய் வழக்குகளை ஜோடனை செய்றதிலேயும் சாமர்த்தியசாலிகள்ன்னும் தெரியும். இந்த வழக்கைப் பொறுத்தவரைக்கும், மதனோட வாக்கு மூலத்தைத் தவிர-வேறு எந்த வகையிலேயும் குற்றத்தை நிரூபிக்க பிராசிகியூட்டர் முயற்சி எடுத்துக்கலை. சாட்சியங்களை, விசாரணைகளைப் பார்க்கிறப்போ.....இது முழுக்க முழுக்க ஜோடிக்கப்பட்ட வழக்குன்னு நான் சந்தேகப்படறதிலே தப்பே இல்லை. கொலை ஆயுதம் கத்தியை ஸ்டேஷன் லேர்ந்து அனுப்பினதாதான் லேப் டெக்னீஷியன் தன் சாட்சியத்திலே சொன்னார். கொலை நடந்த இடத்திலேர்ந்து கத்தி எப்படி ஸ்டேஷனுக்கு வந்தது? தடயங்களை சேகரித்து எடுத்துட்டு வந்திருக்காங்க. லேபுக்கு அனுப்புறதுக்கு முன்னாடி, வாக்கு மூலத்தை மிரட்டி எழுதி வாங்கின மாதிரி, மிரட்டி கத்தி மேல மதனோட கைரேகையை பதிவு செய்றது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லை யுவர் ஆனர்.”

“கோபாலகிருஷ்ணன், ஏன் உணர்ச்சி வசப்படறிங்க? நிதானமா சொல்லுங்க..... மேல விசாரிங்க.”


“அவ்வளவுதான் யுவர் ஆனர். மதன் ஒப்புக்கொள்றதா சொல்ற வாக்கு மூலத்தையும் கத்தியிலே இருக்கிற கைரேகையையும் தவிர... வேறு எந்த நேரடி சாட்சியும் பிராசிகியூஷன் ப்ரட்யூஸ் செய்யவில்லை. கொலைக்கான மோடிவ் கூட சரியாக எஸ்டாபிளிஷ் செய்யப்படவில்லை. மதனும், கீதாவும் காதலித்தார்கள் என்பதும் சாட்சிப்பூர்வமாக நிரூபணமாகவில்லை. மதன் குற்றமற்றவர். மிரட்டலுக்கு பயந்து இங்கே குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்கிற அப்பாவியான அவரின் வாக்கு மூலத்தின் முரண்பாடுகளையும் எடுத்துக் காட்டினேன். கொலை நடந்தபோது தன் நண்பர் அறையில் இருந்தார் என்பதையும் எஸ்டாபிளிஷ் செய்துள்ளேன். அதையே அடுத்த சாட்சி மூலமாகவும் மறுபடியும் நிரூபிக்க இருக்கிறேன். அதன் பிறகு முடிவெடுக்க வேண்டிய உங்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள். சரியான ஆதாரங்கள் இல்லாமல் வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு நேரத்தை வீணாக்காதீர்கள்.”

**(தொடர்ந்து வரும்)**


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எஸ்.ராஜா.
வயது: 24
முகவரி: 56/7 டி.எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு-8.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.




பெயர்: எம்.அஷ்ரப்கான்.
வயது: 23
முகவரி: 225/25, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.




பெயர்: ரி.மனோகரன்.
வயது: 26
முகவரி: P.O.BOX-75069, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: வானொலி, ரீ.வி.



பெயர்: எம்.சித்ரா.
வயது: 18
முகவரி: 62/6 புனித அந்தோனியார் கோயில் வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.
பொழுது போக்கு: சித்திரம் வரைதல், பத்திரிகை.



பெயர்: எம்.மீதார்.
வயது: 25
முகவரி: 155, பிரதான வீதி, பாலமுனை-3.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.



பெயர்: எம்.பாறூக்.
வயது: 25
முகவரி: P.O.BOX-2767, CODE NO.01029, JAHRA CENTRAL, KUWAIT.
பொழுதுபோக்கு: ரீ.வி, கதைப்புத்தகம்.

பெயர்: எம்.றில்பாஸ்.
வயது: 17
முகவரி: பறங்கித் தெரு, சின்னக் குடியிருப்பு, கல்பிட்டி.
பொழுது போக்கு: பேனாநட்பு, ரீ.வி.

பெயர்: எம்.பௌமி.
வயது: 17
முகவரி: 30,ரககல்ல வீதி, தும்பகொட, பலாங்கொடை.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்கள்.

பெயர்: ஆர்.ராஜன்.
வயது: 22
முகவரி: BUMPLIZSTRASSE 21, 3027 BERN, SWITZERLAND.
பொழுது போக்கு: சினிமா, பேனாநட்பு.

பெயர்: கே.விஜயகுமார்.
வயது: 19
முகவரி: 95,செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ரி.ஜெகதலகுமார்.
வயது: 20
முகவரி: பாடசாலை வீதி, மன்னம்பிட்டி.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: ஆலீம் எம்.யாசின்.
வயது: 30
முகவரி: P.O.BOX-6495, JEDDAH 21442, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.



படிப்பகம்

www.padippakam.com

லூத்மீலா தன் தலையைப் பின்னால் சாய்த்துத் தாயை அன்பு ததும்பப் பார்த்துக் கொண்டே சொன்னாள்:

"நீங்கள் சொல்வது உங்களைப் பற்றியில்லையே!"

தாய் படுக்கையைவிட்டு எழுந்து உடை உடுத்திக் கொள்ளத் தொடங்கினாள்.

"தன்னை எப்படிப் பிறரிடமிருந்து பிரித்துப் பார்க்க முடியும்? ஒருவனை நேசிக்கிறாய். அவனோ விலை மதிப்பற்றவன், அனைவரின் நலத்திற்காகவும் பயப்படுகிறான், ஒவ்வொருவருக்காகவும் அனுதாபப்படுகிறான். இவையெல்லாம் உன் இதயத்தில் மோதுகின்றன... ஒரு புறமாய் எப்படி ஒதுங்கி நிற்க முடியும்?"

அவளது மனக்கண்ணில் ஒரு வாலிப முகம் பளிச்சிட்டுத் தோன்றியது. அந்த முகம் அவளை நோக்கித் தெள்ளத் தெளிவான குரலில், "இவன்தான் பாவெல் விலாசவின் தாய்!" என்று கூறியது. அவள் கண்முன்னால் மகிழ்ச்சியும் அன்பும் துள்ளாடும் சாஷாவின் நயனங்கள்; ரீபினின் கரியதோற்றம், உறுதி வாய்ந்த உலோகமொத்த தன் மகனின் முகம் நிகலாயின் கூச்சத்துடன் கண்சிமிட்டும் பார்வை முதலியன எல்லாம் தோன்றின. இந்த மனத்தோற்றங்கள் எல்லாம் திடீரென ஓர் ஆழ்ந்த பெருமூச்சாக ஒன்று கலந்து உருவெடுத்து, வானவில்லின் வர்ணம் தோய்ந்த மேகப்படலத்தைப் போன்ற ஒளி சிதறி அவளது எண்ணங்களைக் கவிழ்த்து சூழ்ந்து அவள் மனத்தில் ஒருசாந்தியுணர்ச்சியை உருவாக்கின.

**தன் மகனது சொற்களை உலகமெங்கணும் பரப்ப, தாய் பேராவல் கொண்டு தவித்தாள். அந்தச் சமயத்தில் யாரோ வெளியிலிருந்து கதவை அவசர அவசரமாகத் தட்டினார்கள்.**




# தாய்

## மக்சீம் கார்க்கி

அவள் அந்த அறையின் மத்தியிலே ஒரு கணம் நின்றாள். பாதி உடுத்தியவறே சிந்தனையில் ஆழ்ந்து நின்று போய் விட்டாள். ஒரு காலத்தில் தன் மகனது உடம்பை எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்ற சிந்தனையிலேயே முழுகிப் போய் என்றென்றும் தன் மகனைப் பற்றிய கவலையிலும் பயத்திலும் அலைக்கழிந்த அந்தப் பழைய பெண் பிறவியாக, அவள் இப்போது இல்லை என்பது அவளுக்கு தோன்றியது. அவள் எங்கோ தூரந் தொலைவில் போய்விட்டாள்; அல்லது அவளது உணர்ச்சி நெருப்பில் அவள் சாம்பலாகிப் போயிருப்பாள். இந்த மாதிரி எண்ணிய தாயின் மனத்திலே ஒரு புதிய ஆவேசமும் பலமும் தோன்றின. அவள் தன் இதயத்தைத் துருவிப் பார்த்தாள்: அதன் துடிப்பைக் கேட்டாள்; பழைய பயவுணர்ச்சிகள் மீண்டும் வந்து விடக் கூடாதே என்று பயந்தாள்.

"என்ன யோசனை செய்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே லூத்மீலா அவள் பக்கம் வந்தாள்.

"தெரியாது" என்றாள் தாய்.

இருவரும் மௌனமாக ஒருவரையொருவர் பார்த்தார்கள்; புன்னகை புரிந்தார்கள். பிறகு லூத்மீலா அந்த அறையை விட்டு வெளிச் சென்றவாறே சொன்னாள்:

"அங்கே என் தேநீர்ப் பாத்திரம் என்ன கதியில் இருக்கிறதோ?"

தாய் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். வெளியில் வெய்யிலும் குளிரும் பரவியிருந்தது. அவளது இதயமோ வெதுவெதுப்போடும் பிரகாசத்தோடும் இருந்தது. அவள் சகலவற்றைப் பற்றியும் சாங்கோபாங்கமாக மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருக்க விரும்பினாள். சந்தியா கால சூரிய ஜோதியைப் போல் இனிமையாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் எண்ணங்களைத் தன் இதயத்திலே புகுத்திவிட்ட, யாரோ ஓர் இனம் தெரியாத நபருக்கு நன்றி காட்டிப் பேச வேண்டும் என்ற மங்கிய உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. இத்தனை நாட்களாக பிரார்த்தனை செய்வதையே கை விட்டுவிட்ட அவளுக்கு அன்று பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று ஆசையெழுந்தது.

"நிகலாய் சொன்னது சரிதான்" என்று சொல்லிக் கொண்டே அந்த அறைக்குள் லூத்மீலா மீண்டும் வந்தாள்; "அவர்கள் அவனைக் கைது செய்து விட்டார்கள். நீங்கள் சொன்ன மாதிரி நான் அந்தப் பையனை அனுப்பித் தெரிந்து வரச் சொன்னேன். வீட்டுக்கு வெளியே பொலிஸ்காரர்கள் இருந்ததாகவும், வெளிக் கதவுக்குப் பின்னால் ஒரு பொலிஸ்காரன் ஒளிந்து கொண்டிருந்ததாகவும் அவன் சொன்னான். சுற்றிச் சூழ உளவாளிகள் இருக்கிறார்களாம், அந்தப் பையனுக்கு அவர்களையெல்லாம் தெரியும்."

"ஆ!" என்று தலையை அசைத்துக் கொண்டே சொன்னாள் தாய்; "பாவம், அப்பாவி...."

அவள் பெருமூச்சுவிட்டாள். அதில் துக்க உணர்ச்சியில்லை. இதைக் கண்ட அவள் தன்னைத் தானே வியந்துகொண்டாள்.

"சமீபகாலமாக அவன் இந்த நகரத்திலுள்ள தொழிலாளர்களுக்கு எவ்வளவோ வகுப்புக்கள் நடத்தி வந்தான். பொதுவாக, இது அவன் அகப்பட்டுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம்தான்" என்று அமைதியாக, ஆனால் முகத்தைச் சுழித்துக் கொண்டே சொன்னாள் லூத்மீலா. "அவனது தோழர்கள் அவனைத் தலைமறைவாகப் போகச் சொன்னார்கள். ஆனால் அவன் கேட்கவில்லை. இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் இவனைப் போன்ற ஆசாமிகளைப் 'போ, போ' என்று போதித்துக் கொண்டிருக்கக் கூடாது; நிர்ப்பந்த வசமாகத்தான் போகச் செய்ய வேண்டும்."

இந்தச் சமயத்தில் சிவந்த கன்னங்களும் கரிய தலைமயிரும், முன்வளைந்த மூக்கும், அழகிய நீலக்கண்களும் கொண்ட ஒரு சிறுவன் வாசல் நடையில் வந்து நின்றான்.

"நான் தேநீர் கொண்டு வரட்டுமா?" என்று கேட்டான் அவன்.

"கொண்டுவா, செர்கேய்" என்று கூறிவிட்டுத் தாயின் பக்கமாகத் திரும்பினாள் லூத்மீலா. "இவன் என் வளர்ப்புப் பையன்" என்றாள்.

அன்றைய தினத்தில் லூத்மீலா வழக்கத்துக்கு மாறாக சுமுகபாவத்தோடும் எளிமையோடும் பழகுவதாகவும் தாய்க்குத் தோன்றியது. அவளது உடலின் லாகவம் நிறைந்த அசைவுகளிலே ஒரு தனி அழகும் உறுதியும் நிறைந்திருந்தன. இத்தன்மை அவளது வெளுத்த முகத்தின் நிர்த்தாட்சண்ய பாவத்தை ஓரளவு சமனப்படுத்தியது. இரவில் கண் விழித்ததால் அவளது கண்களைச் சுற்றிக் கருவளையங்கள் விழுந்திருந்தன. என்றாலும் அவளது இதய வீணையில் ஏதோ ஒரு தந்தி முறுக்கேறி விறைத்து நிற்பது போன்ற தன்மையை எவரும் கண்டு கொள்ள முடியும்.

அந்தப் பையன் தேநீர்ப் பாத்திரத்தைக் கொண்டு வந்தான்.

"செர்கேய், உனக்கு இவளை நான் அறிமுகப்படுத்தி வைக்கிறேன். இவள்தான் பெலகேயா நீலவ்னா. நேற்று விசாரணை நடந்ததே, அந்தத் தொழிலாளியின் தாய்."

செர்கேய் ஒன்றும் பேசாமல் தலை வணங்கினான்; தாயின் கையைப் பிடித்துக் குலுக்கினான். அறையை விட்டு வெளியே போனான். ஒரு ரொட்டியை எடுத்துக் கொண்டு வந்து, மீண்டும் தன் இடத்தில் அமர்ந்து கொண்டான். லூத்மீலா தேநீரைக் கோப்பையில் ஊற்றியவாறே, தாயை வீட்டுக்குப் போக வேண்டாம் என்றும், அந்தப் பொலிசார் யாருக்காகக் காத்துக் கிடக்கிறார்கள் என்பது தெளிவாகிற வரையில், அவள் அந்தப் பக்கமே செல்லாமலிருப்பதே நல்லதென்றும் எடுத்துக் கூறினாள்.

"ஒருவேளை அவர்கள் உங்களையே எதிர்பார்த்துக் கிடக்கலாம். பிடித்துக் கொண்டு போய் ஏதாவது கேள்விகளைக் கேட்டுத் தொலைப்பார்கள்."

"இருக்கட்டுமே" என்று பதில் சொன்னாள் தாய். "அவர்கள் விரும்பினால் என்னையும் தான் கைது செய்து கொண்டு போகட்டுமே. அதனால் என்ன பெரிய குடி முழுகி விடப்போகிறது? ஆனால் பாவெலின் பேச்சை மட்டும் நாம் முதலில் விநியோகித்து விட்டோமானால்.....!"

"நான் அச்சுக் கோத்து முடித்து விட்டேன். நாளைக்கு நகரிலும் தொழிலாளர் குடியிருப்பிலும் விநியோகிப்பதற்குத் தேவையான பிரதிகள் தயாராகிவிடும். உங்களுக்கு நதாஷாவைத் தெரியுமா?"

"நன்றாய்த் தெரியும்."

"அவற்றை அவளிடம் கொண்டு சேருங்கள்."

அந்தப் பையன் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான்; அவர்கள் பேசியது எதையுமே அவன் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. ஆனால் இடையிடையே பத்திரிகைக்கு மேலாக நிமிர்ந்து தாயின் முகத்தைப் பார்த்தான். அவனது உணர்ச்சி நிறைந்த பார்வையைக் காணும் போதெல்லாம், தாய்க்கு மகிழ்ச்சி பொங்கும்; புன்னகை புரிந்து கொள்வாள். கொஞ்சம் கூட வருத்தமின்றி மீண்டும் நிகலாயைப் பற்றிப் பேசத் தொடங்கினாள் லூத்மீலா. அவள் அப்படிப் பேசுவது இயற்கை தான் என்பதைத் தாய் கண்டு கொண்டாள். நேரம் வழக்கத்தை மீறி வெகு வேகமாகச் செல்வது போலிருந்தது. அவர்கள் காலைச் சாப்பாட்டை முடிப்பதற்குள்ளே மத்தியானப் பொழுது வந்து விட்டது.

"எவ்வளவு நேரமாகிவிட்டது!" என்று அதிசயித்தாள் லூத்மீலா.

அந்தச் சமயத்தில் யாரோ வெளியிலிருந்து கதவை அவசர அவசரமாகத் தட்டினார்கள். அந்தப் பையன் எழுந்திருந்து கண்களைச் சுருக்கி விழித்தவாறே லூத்மீலாவைப் பார்த்தான்.

"கதவைத் திற, செர்கேய். யாராயிருக்கலாம்?"

அவள் தனது உடுப்பின் பைக்குள்ளே அமைதியாகக் கையை விட்டவாறே தாயைப் பார்த்துச் சொன்னாள்:

"அவர்கள் பொலிஸ்காரராயிருந்தால், பெலகேயா நீலவ்னா, அந்த மூலையிலே நின்று கொள்ளுங்கள். செர்கேய், நீ...."

"எனக்கு தெரியும்" என்று சொல்லிக் கொண்டு அந்தப் பையன் வெளியே சென்றான்.

தாய் புன்னகை புரிந்தாள். இந்த மாதிரியான ஏற்பாடுகள் அவளைக் கலவரப்படுத்தவே இல்லை; ஏதோ ஒரு விபரீதம் நிகழப் போகிறது என்ற பயபீதி உணர்ச்சியும் அவளுக்கு இல்லை.

ஆனால் உள்ளே அந்தக் குட்டி டாக்டர்தான் வந்து சேர்ந்தான்.

வந்ததுமே அவன் அவசரமாகப் பேசத் தொடங்கினான்: "முதலாவது-நிகலாய் கைதாகி விட்டான். ஆஹா! நீலவ்னா, இங்கேயா வந்திருக்கிறீர்கள்? கைது நடந்தபோது நீங்கள் வீட்டில் இல்லையா?"

"அவன் தான் இங்கு அனுப்பினான்."

"ஹூம், இதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. சரி. இரண்டாவது-நேற்று இரவு சில இளைஞர்கள் பாவெலின் பேச்சை சைக்குளோஸ்டைலில் ஐநூறு பிரதிகள் தயார் பண்ணிவிட்டார்கள். நான் அவற்றைப் பார்த்தேன், மோசமாக இல்லை. எழுத்துத் தெளிவாகவும் சுத்தமாகவும் இருந்தது. அவர்கள் அவற்றை இன்றிரவு நகர் முழுவதிலும் விநியோகித்து விடுவதை விரும்பினார்கள். நான் அதை எதிர்த்தேன். அச்சடித்த பிரதிகளை வேண்டுமானால் நகரில் விநியோகிக்கலாம், இவற்றை வேறு இடங்களுக்கு அனுப்புவோம் என்றேன்."

"அவற்றை என்னிடம் கொடுங்கள். நான் இப்போதே நதாஷாவிடம் கொண்டு சேர்க்கிறேன்" என்று ஆர்வத்தோடு சொன்னாள் தாய்.

பாவெலது பேச்சை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விநியோகிக்க, தன் மகனது சொற்களை உலகமெங்கணும் பரப்ப, அவள் பேராவல் கொண்டு தவித்தாள்; எனவே கெஞ்சுவது போல அந்த டாக்டரின் முகத்தைப் பார்த்தாள்: அவனது பதிலுக்காகக் காத்து நின்றாள்.

"நீங்கள் இந்த வேலையை இப்போது மேற்கொள்ளத்தான் வேண்டுமா என்பது சைத்தானுக்குத் தான் தெரியும்" என்று தயங்கிக் கொண்டே கூறிவிட்டு, அவன் தன் கடிகாரத்தை எடுத்தான். "இப்போது மணி பதினொன்று நாற்பத்தி மூன்று. இரண்டு மணி ஐந்து நிமிஷத்துக்குப் புறப்பட்டு ஐந்தே கால் மணிக்குப் போய் சேருவதற்கு ஒரு ரயில் இருக்கிறது. மாலை வேளைதான். இருந்தாலும் அப்படியொன்றும் காலதாமதமில்லை. ஆனால் இப்போது அது பிரச்சினையல்ல..."

(தொடர்ந்து வரும்)

# அடையாள அட்டை

கடையைப் பூட்டிவிட்டு நான் வெளியேறும்போது நேரம் மாலை ஆறு மணி, பக்கத்துவீட்டு வானொலியில் மாலைச் செய்தி அறிக்கைக்கான ஆரம்ப இசை ஒலிப்பரப்பாகிக் கொண்டிருந்தது. கண்களைச் சுழற்றி வெளி உலகத்தைப் பார்க்கிறேன்.

வெயிலின் தாக்கம் மிக மிகக் கடுமையாக இருந்தது. 'இப்பொழுது நேரம் ஆறு மணியா? இல்லை ஐந்து மணியா?' என்னை நானே கேட்டுக்கொள்கிறேன். நேரம் மாறியது; ஆனால் பொழுது மாறவில்லை. மீண்டும் அதிகாலை ஆறு மணிக்குச் செய்தி அறிக்கை. ஆனால் பறவைகள் கீச்சிடும் ஓசை கூடக் கேட்கவில்லை. எதனை மாற்றினாலும் இயற்கையை, அதன் செயல்பாட்டை மாற்ற முடியுமா? பெருமூச்சுடன் கடையில் தொங்கும் ஆமப்பூட்டை இழுத்துப் பார்த்துவிட்டு வீதியில் இறங்குகிறேன்.

எனது கால்கள் நடக்கத் தொடங்குகின்றன. தூரத்தே சனக்கூட்டமாக இருந்தது. இதைக் கண்டு என் மனம் பயப்படவில்லை. இதனைப் போல எவ்வளவோ சம்பவங்களைக் கண்டு கண்டு மனம் மரத்துப்போயிருந்தது. வருகின்ற போகின்றவர்களை 'செக்' பண்ணிக் கொண்டிருந்தார்கள் பொலிசார்.

பையில் கையைவிட்டு எனது அடையாள அட்டை இருக்கிறதா? என்று பார்த்துக் கொள்கிறேன். அடையாள அட்டை இல்லை என்றால் ஒருவர் படும் அவஸ்தையை, தொலைக்காட்சியில் காட்டும் விளம்பரம் ஒன்றின் மூலமாக, நினைவுக்குக் கொண்டு வருகின்றேன். எனக்குச் சிரிப்பு வருகின்றது. 'என்னடா இது- இவன் என்ன பைத்தியமா?' என்று பார்ப்பவர்கள் நினைக்காமல் இருக்க வேண்டும் என்று சிரிப்பை வலிந்து அடக்கிக் கொள்கிறேன்.

அடையாள அட்டை சம்பந்தமாக நண்பர் ஒருவர் கூறிய சம்பவம் ஞாபகத்துக்கு வருகின்றது. இந்திய அமைதிகாக்கும் படை இருந்த வேளையில், ஆங்கிலம் தெரியாத படைவீரர் ஒருவர் இவ்வாறு கூறினாராம்:


IDENTITY CARD, NO PROBLEM
IDENTITY CARD NO, PROBLEM.

பொங்கி வந்த சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு நடக்கின்றேன். செக் பொயின்ரை அண்மித்ததும் எனது நடை 'ஸ்லோ' ஆகியது.

என்னைக் கண்டதும் "ஒயா யன்ன அங்கிள்" (நீங்கள் போங்க மாமா) என்றார் ஒரு பொலிஸ்காரர்.

பையில் இருந்து வெளியில் எடுத்த அடையாள அட்டையை மீண்டும் பைக்குள் போட்டுக் கொண்டு புறப்பட ஆயத்தமான போது, வீதி ஓரமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் ஒருத்தியின் மீது என் கண் விழுந்தது. கூர்ந்து கவனித்தேன். என்னிடம் முன்னர் ரியூஷன் படிக்க வந்த மாணவிதான் அவள். "சேர் சேர்" என்னைக் கூப்பிட்டாள் அவள்.

ஏதோ பிரச்சனை காரணமாக அவள்



தடுத்து வைக்கப்பட்டிருக்கிறாள் என்று புரிந்து கொண்டேன் நான். கண்டும் காணாதவன் போல சென்றுவிட எனது மனம் விரும்பவில்லை. அவளிடம் விசாரித்து விபரத்தை அறிந்து கொண்டேன். அவள் தனது பிரச்சனையை ஆங்கிலத்தில் பொலிஸ்காரருக்கு கூறினாள். அவள் கூறியது பொலிஸ்காரருக்கு விளங்கவில்லை. பொலிஸ்காரர் கூறிய பாஷை அவளுக்கு விளங்கவில்லை.

**க. மலர்ராஜன் - திருமலை**

அவர்களுக்கு இடையில் அகப்பட்ட நான் பொலிஸ்காரரிடம், இவளை எனக்குத் தெரியும் என்றும், அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருக்கிறாள் என்றும், பற்றுச்சீட்டை தன்னுடன் எடுத்துவர மறந்து விட்டாளாம் என்றும் சிங்களத்தில் விளங்கப் படுத்தினேன்.

வேடிக்கையாக இருவரையும் பார்த்துச் சிரித்தார் பொலிஸ்காரர். பின்னர் அவள் செல்ல அனுமதிக்கப் பட்டாள். எனக்கு நன்றி கூறிவிட்டு புறப்பட்டுச் சென்றாள் அவள்.

"ஒயா நிசா மே லமயாவ மா நித ஹரஸ் கறே. நெத்தம் யன்ன தென்னனே" (நீங்கள் சொல்லுவதால்தான் இந்தப் பிள்ளையை விடுகிறோம். இல்லாவிட்டால் விட மாட்டம்) என்று என்னிடம் கூறினார் பொலிஸ்காரர். அடையாள அட்டை தொடர்பாக எம்மவர்கள் எத்தனை பிரச்சனைகளை எதிர் நோக்குகிறார்கள் என்று மனதுக்குள் எண்ணியவாறு வீட்டை சென்று அடைந்தேன், நான்.

"ஏன் லேட்?" என்று கேள்வி கேட்டு என்னைத் துளைத்தெடுத்தாள் என் மனைவி. விபரம் கூறினேன். "உங்களுக்கு ஏன் தேவை இல்லாத வேலை?" என்று சத்தம் போட்டாள் அவள். "மனிதனாகப் பிறந்தால் எம்மால் இயன்ற உதவியை பிறருக்குச் செய்ய வேணும். இல்லாவிட்டால் பிறருக்கு உபத்திரவமாவது கொடுக்காமல் இருக்க வேண்டும். இதை நீ தெரிந்து கொள்!" என்று கூறியபடி ஷேட்டைக் கழற்றி ஸ்ரேண்டில் தொங்க விட்டுவிட்டு முகம் கழுவப்போக ஆயத்தமானேன்.

சேட் பையில் கைவிட்ட எனது மனைவி கேட்டாள். "மணிபர்ஸ் இருக்குது; எங்கேயப்பா உங்கட ஐடின்ரிகாட்?"

'திக்' என்று இருந்தது எனக்கு. பையில் கைவிட்டு நானும் தேடிப் பார்த்தேன். மணிபர்ஸ் மட்டும்தான் இருந்தது. அப்படி என்றால் எனது ஐடின்ரிகாட்.....?



படிப்பகம்

www.padippakam.com

# கறிவேப்பிலை



மரம் பல வருடங்களுக்கு முன் பட்டுப் போனதால் மண்ணில் வேர்கள் கூட இற்றுப் போயிருந்தன. நேற்றெல்லாம் பெய்த மழையில் மண்ணும் நன்கு இளகி இருந்தது. உசுப்பினால் பிடுங்கிவிடலாம் போலிருந்தது. விறகுக்காவது பயன்படும் என்று நினைத்தாளோ என்னவோ; ராசாத்தி தன் முழுப் பலத்தையும், பட்டுப்போய் பாதிமரமாய் நின்ற அந்த கறிவேப்பிலை மரத்தில் செலுத்திக் கொண்டிருந்தாள்.

முன்பெல்லாம் அம்மா கறி கொதிக்கும் போது 'பத்திரமாய் இரண்டு இணுங்கு கறிவேப்பிலை இணுங்கிட்டு வா' என்பா. ஏன் மிளகாய்த் தூள் இடிக்கும்போது.... நாங்க காசுக்கு விற்கிறதில்லை. என்றாலும் பக்கத்துவீட்டாக்கள் ஒரே கறிவேப்பிலை கேட்டு வருவாங்க. அம்மா மரம்பட்டிடும் என்று புறுபுறுத்திட்டு ஒரு சிறுகந்து ஒடிச்சி கொடுப்பா. முடி அழகா வளரும் என்று நானும் மீனாவும் கரிசலாங்கண்ணியும், கறிவேப்பிலையும் துவைச்சு சாறெடுத்து தேங்காய் எண்ணெய்யோட காய்ச்சி தலைக்கு வைக்கிற.' பழைசையெல்லாம் நினைக்கும் போது ராசாத்திக்கு வேதனையாக இருந்தது.

தொண்ணூறாம் ஆண்டு. அகதிகளாக கம்பஸ்ஸிலயும் பின் வயற்காடெல்லாம் ஓடித்திரிஞ்சிட்டு வந்தபோது இந்தக் கறிவேப்பிலை மரம் பட்டுப்போகத் தொடங்கியிருந்தது. மொத்தத்தில் தன் வாழ்க்கைக்கும் இந்தப்பட்டுப்போன கறிவேப்பிலை மரத்திற்குமிடையே ஒரு தொடர்பிருப்பதாகவே அவளுக்குப்பட்டது.

சுகந்தன் இரட்டை இதயம்வெட்டி அதில் S.R என்று எழுதி இவளை முகம் சிவக்க வைத்த அந்தத் தடயங்களைத் தேடிப்பார்த்தாள். பட்டைகள் சிதைந்திருந்ததால். கண்டுபிடிக்க முடியவில்லை. இனி மேல் கண்டு பிடித்துத்தான் என்ன ஆகப் போகிறது? நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு பெருமூச்சொன்று வெளியேறியது. நிச்சயமாக அது சுகந்தனின் நினைவுதான் என்பது அவளுக்குத் தெரியும். இந்தக் கறிவேப்பிலை பட்டுப்போகாமல் இருந்திருந்தால் அது சுகந்தனின் நினைவுக்கு ஒரு சுவடியாக இருந்திருக்கும். மீண்டும் ஒரு பெருமூச்சு வெளியேறியது.

"என்ன ராசாத்தி! பட்ட மரத்தை தளைக்க வைக்கலாமோ என்று பார்க்கிறியா?". ஒழுங்கையால் மீனாவின் தாய் லெட்சுமி. சில காலமாய்த் தனக்குள் இருந்த கேள்வியை இரட்டை அர்த்தத்தில் கேட்டு விட்ட திருப்தியில் போய்க்கொண்டிருந்தாள். லெட்சுமியின் வார்த்தைகள் ராசாத்தியை சுள்ளிட்டிருக்க வேண்டும். பதில் கூறாமல் லெட்சுமியை வெறிக்கப் பார்த்தாள். ஏதோ ஒன்று தொண்டையை அடைத்தது.

"பட்ட மரத்தை தளைக்க வைக்கலாமோ என்று பார்க்கிறயா?" இந்த வார்த்தைகள் அவளுக்கு ஜீரணமாவதாயில்லை. 'ரமேஸ் என்னிடம் விருப்பம் கேட்டது லெட்சுமி அன்ரிக்கு தெரிந்திருக்க வேண்டும். அதுதான் இந்தக் குத்தல்.' இந்த ஐந்து வருடங்களில் எத்தனைபேரின் குத்தல்களைத் தாங்கி விட்டாள். ஆனாலும் லெட்சுமி அன்ரி கதைத்ததை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஏன்?

ரமேஸுக்கு தன் மீது ஏற்பட்டிருப்பது அனுதாபமா? அல்லது காதலா? என்பதை அவள் நினைத்துப் பார்க்கவில்லை. இப்போது அதை ஆராய்ந்து பார்த்தது மனம்.

ரமேஸ் தன்மீது கரிசனைப் பட்டவனாக நடந்து கொண்டபோது அந்த அன்பு அவளுக்கு ஏதோ வகையில் தேவைபோலவே இருந்தது. காமத்தைக் கட்டிப்போட முடியும் என்று மன உறுதி இருந்தது போல் எந்த

**நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு பெருமூச்சு வெளியேறியது. நிச்சயமாக அது சுகந்தனின் நினைவுதான்.**

அன்பும் தேவையில்லை என்றிருக்க அவளால் முடியவில்லை.

அவளிடம் சம்மதம் கேட்டு ரமேஸ் எழுதிய கடித வரிகள் நினைவில் நிலை குத்தின.

"அன்புடன் ராசாத்திக்கு! நீங்கள் சுகந்தன் என்பவரை காதல் திருமணம் செய்து ஒரு வருடத்திற்குள் கம்பஸ் அகதி முகாமில் நடந்த சுற்றிவளைப்பில் சுகந்தன் பிடித்துச் செல்லப்பட்டதும், இதுவரை எந்தத் தகவலோ, தடயமோ இன்றிப் போனதும் அறிந்தேன். தமிழராகப் பிறந்ததுதான் நாம் செய்த பாவமா? ஆனாலும் உங்களால் தனிமரமாக எவ்வளவு காலம் வாழமுடியும்? நீங்கள் சம்மதம் என்றால் உங்களை மறுமணம் செய்ய நான் விரும்புகிறேன். உங்கள் பதிலை நன்கு யோசித்து சொல்லவும்"– இப்படிக்கு ரமேஸ்.

எப்படியோ தரையிலிருந்து பிடுங்கி எடுத்துவிட வேண்டும், என்ற எண்ணத்தில் அந்தப் பட்டமரத்தினை சாய்ப்பதும் இழுப்பதுமாக முயன்றாள். மண்ணுடன் பெரிதாக எந்தவொரு பிணைப்பும் இல்லை என்பது தெரிகிறது. ஆனாலும் இவ்வளவு காலம் மண்ணுடன் ஒன்றி வாழ்ந்த பிடிப்போ தெரியவில்லை; ஏதோ ஒன்று அதை மண்ணிலிருந்து அகன்று விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது.

"சிறு வேர்த்துண்டில் பச்சை இருந்தாலும் கறிவேப்பிலை தளைத்துவிடும்," என்று அம்மா சொல்வது ஞாபகம் வந்தது. அப்படியாயின் இதுவும் துளிர்க்குமா? இத்தனை வருடங்களில் எத்தனை மழை பெய்து விட்டது. அப்போதெல்லாம் தளைக்காத மரம் இந்த மழைக்கா தளைக்கப்போகிறது!

அப்போது, படலையின் கிரீச் சத்தம் கேட்டு நிமிர்ந்தாள். ரமேஸ்! படலையைத் திறந்தபடி சிரித்தான். 'ஓ! இன்று ரமேஸ் முடிவு கேட்டு வருவதென்றவர்' ராசாத்திக்கு அப்போது தான் நினைவு வந்தது.

"வாங்க ரமேஸ், எப்படி சுகமா?"

"ம்ங்!"–ஒற்றையாகவே பதில் வந்தது.

"உள்ளுக்கு வாங்க" என்றபடி முன்னே நடந்தாள்.

## சஞ்சீவி சிவகுமார்

இருவரும் வீட்டு வராந்தாவில் கிடந்த கதிரைகளில் இடம்பிடித்துக் கொண்டார்கள். அம்மா உள்ளே தூங்கிக் கொண்டிருக்க வேண்டும். ராசாத்தியின் அம்மாவுக்கும் விருப்பம் தான். "அப்பாவின் பென்சனில் சாப்பிடுறம்; என்றாலும் என்ர சீவனுக்குப் பிறகு உனக்கு ஒரு துணை அவசியந்தானே பிள்ள. தெய்வம் போல வலிய வந்திருக்கு. இப்படிக் கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்க வேண்டும்." அம்மா சொன்னது ராசாத்திக்கு நினைவில் வந்து போனது.

சில நிமிடங்கள் இருவருக்குமிடையே நிலவிய நிசப்தம். தூரத்தில் யாரோ சிறுவர்கள் விளையாடும் கூச்சலை தெளிவாக்கிக் கொடுத்தது.

ரமேஸ் நிசப்தத்தைக் கலைத்தான். "என்ர, கடிதத்தை யோசித்திருப்பீர் என்று நினைக்கிறன்."

அவள் காதுகள் இதை உள்வாங்கிக் கொண்டாலும் கால்கள் திண்ணையில் ஏதோ கீறிக் கொண்டிருந்தன. கண்ணில் நீர்க்கோளம் ஒன்று இமைகளால் கட்டுப்படுத்த முடியாமல் விழத்துடித்தது. இது சுகந்தனின் நினைவிலா? அல்லது ரமேஸுக்காகவா விழப்போகிறது?


"என்னை மன்னிச்சிடுங்க ரமேஸ்; எனக்கு மறுமணம் செய்ய விருப்பமில்லை. பிளீஸ் என்னை மறந்திடுங்க. நான் இப்படியே இருப்பதுதான் எனக்கு சரி என்று படுகிறது. இது என்ர தீர்க்கமான முடிவு." பதில் கூறிமுடித்தவள் தலைநிமிர திராணியற்றிருந்தாள்.

ரமேஸ் அந்த கறிவேப்பிலை மரத்தைத் தாண்டிப்போய்க் கொண்டிருந்தான். அந்தக் கறிவேப்பிலை இனித் துளிர்க்கப்போவதில்லைத்தான். அதற்காக அதில் உயிர்ப்பில்லை என்று கூறிவிடமுடியாது. ■

---

**விடுதலைப் புலிகளின் ஒலிபெருக்கிகள் அலறின– "இரண்டு மணி நேரத்தில் யாழ்நகரை விட்டு அனைவரும் வெளியேற வேண்டும்!"**

# கருணைக்கொலை



## ஜெயமணி

வெட்ட வெளியில் மந்தைக் கூட்டமாக முடியுமட்டும் நடந்தவர்கள், முடியாமல் சரிந்தவர்கள், தாண்டிக்கொண்டும், மிதிச்சுக் கொண்டும், வரலாறு அழிக்க முடியாத துயரச்சுவடுகளைப் பதித்துக்கொண்டிருக்கிறார்கள். தலைக்கு முட்டாகக் கிடந்த துணிப்பையை தோளில் மாட்டிய நான் தொலைந்து போன உறவுகளைத் தேட முனைந்து தோற்றுப்போகிறேன். ஈரத்தரையில் தாறுமாறாகக் கிடந்த மனிதக் கட்டைகளில் இடறி கால் தடுக்கிறது.

விறைத்துப்போன விரல்களை நீவிக் கொள்ளுகிறேன். குளிர் குதறி எடுக்கிறது. கீழ்வான விளிம்புகளில் கறையாகப் படிந்து கிடந்த கறுப்பு கரைந்து விடுவேன் என பயமுறுத்துகிறது.

நினைவில் மோதுகிறது அந்தத் திடீர் அறிவிப்பு. "இரண்டு மணித்தியாலங்களில் யாழ் நகரை விட்டு, அனைவரும் வெளியேறி விடவேண்டும்!" விடுதலைப் புலிகளது ஒலி பெருக்கிகள் அலறின. கிழக்கு மேற்காகப் பிரிந்தபோது ஜெர்மன்நாடு இப்படித்தான் இருந்திருக்குமோ?

கிட்டத்தட்ட ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள். ஆடிப்போனார்கள். எதை எடுப்பது? எதை விடுவது? தவிப்பிலும், தடுமாற்றத்திலும் எதையுமே எடுக்க முடியாதவர்களாகி, ஒருத்தரை ஒருத்தர் தேட முடியாமல், காத்திருக்கவும் பொழுதின்றி ஓடவேண்டியிருந்தது.

ஏற்கனவே குண்டுத்தாக்குதல்களினால் குலைந்து கிடந்த யாழ்ப்பாணம் பொறி கலங்கி மிரண்டது. இதற்குமேல் என்ன என்கின்றதென்ற சலிப்பு எல்லோர் மனங்களிலும் பய உணர்ச்சியையும் மீறி எழுவதை உணர முடிந்தது என்னால். வெறுமை சூழ பையை மட்டும் எடுத்தவனாக வெளியேறுகிறேன்.

வாகனங்கள், சயிக்கில் சக்கரங்களிடையே அகப்பட்டவர்களது அலறல். உந்தித் தள்ளப்பட்டவர்கள், எழும்ப முடியாது நசிபவர்கள், தவறுண்ட குழந்தைகளின் கதறல், மிதிபட்ட சிறுவர்களது, முதியவர்களது தீனக் குரல்கள்– இவற்றிக்கு மத்தியில் படையினரது ஷெல் வீச்சுக்களின் உறுமல்களும், சிதறல்களும் மரண ஓலத்தை ஏற்படுத்தி வானை முட்டி எதிரொலிக்கிறது. மனித தலைகள் சமுத்திர அலைகளில் மிதப்பதைப்போல அசைந்து கொண்டிருந்தன.

கால் இடறியது. குனிந்து பார்க்காமலே புரிந்தது. நிச்சயமாக அது மனித உடல்தான் என்று. வெடித்துவிடும் வேதனை இறக்கி நொறுக்க நானும் ஒரு துளியாக கலந்து முட்டும் மூச்சை இழுத்துவிட்டுக் கொள்ளுகிறேன்.

மாறுபட்ட பிரிவின் வேதனைகள் பிராண்டுவது விம்மல்களிலும், அரற்றல்களிலும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. கரையும் மனசின் தவிப்பை தாங்க சக்தியற்றவனாக வேலியோரம் சாய்ந்து கொள்ளுகிறேன்.

நெடுங்காலமாக எனக்குள் ஒரு கேள்வி! "மனிதன் இறைவன் படைப்பா? இல்லை அவன் மனிதன் படைப்பா?' இப்படியொரு அவலம் சாட்சியின் நிருபணமாக நின்றது மனிதன் பக்கம்.

சற்றுத் தொலைவு தந்த சலசலப்பு சிந்தனையைக் கலைக்க, அவ்விடத்தை நெருங்குகிறேன். கோணி விரிப்பில் கர்ப்பிணிப்பெண்; வலி துடிக்கவைத்துக் கொண்டிருக்கிறது. மருத்துவபீட மாணவனாகிய எனக்கு நிலமையின் தீவிரம் புரிந்தது. வெளிறிப்போய்க் கிடக்கும் முகத்தில் அப்படி ஒரு களைப்பு விரவிக்கிடந்தது. நான் துரிதமாகச் செயற்படுகிறேன்.

எப்பவும் முதலுதவிக்கென சேர்த்த பொருட்கள் என் பைக்குள் அடக்கம். அத்துடன், திணித்திருந்த அம்மாவின் புடைவைகள் தடுப்பாக மாற, தாகம் என்று சாடை காட்டுகிறாள். மழை தேங்கி நின்ற குட்டையில் துணியை நனைத்து பிழிந்து விடுகின்றேன். கண்களில் தண்ணீர்– வடிகின்றது.

தலையை அசைக்கின்றாள் உடலைப் புரட்டவும் சக்தியின்றி 'ஆ' வென அலறிய போது வெறும் காற்றுமட்டும் வெளிவருகின்றன.

"அம்மா, இன்னும் இன்னும் கொஞ்சம். ப்பிளீஸ்.... இதோ.... இன்னும் ஒரு மூச்சு மட்டும்..."

"ஆ...... ஐயோ......"

உலுப்பிக் கொண்ட ஷெல் ஒன்று வெடித்து அடங்குகிறது. அத்தனை பேரும் மண்ணை முத்தமிட நான் அப்படியே இருக்கிறேன்.

சட்டென்று புத்தம் புதிய மொட்டாக என் கைகளுள் விழுந்து இதழ் வெடித்து வீரிட்டழுகிறது குழந்தை. தொப்புள் கொடியை அறுத்து முடிச்சு போடுகிறேன் நான். மறுபடி குழந்தை அழவில்லை. அடங்கிப்போகிறது. திரும்பி அவளைப் பார்க்கிறேன். கண்மூடிக்கிடக்கிறாள்.

அவளுக்கு நிம்மதியாகக்கூட இருக்கலாம், எனது செயல். ஆனால், நானோ நாளை பல வக்கிரங்களுள் தள்ளப்பட்டு, கொலைகாரனாக திசைமாறி, எங்களில் ஒருவனாகி, யுத்த முனையில் மரணக்கைதியாக வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு உயிரை மட்டும் சுமக்கும் உடற்கூட்டுச் சிறையிலிருந்து விடுதலைகொடுத்த என் கரங்களை இரத்தக் கண்ணீரால் கழுவிக்கொண்டிருக்கிறேன். ●

---

*–சிறைச்சாலை பூஞ்சோலை*
*–தூக்கு மேடை பஞ்சுமெத்தை–*
*–கம்பி எண்ண அஞ்சமாட்டோம்–*
*–அறப் போர் தொடுப்போம்–*

# கைதி



## கனகசபை தேவகடாட்சம்

அந்த தலைநகர் பொலிஸ் நிலைய சிறைச் சுவரில் சற்று உயர்த்தியவாறு தலையை சாற்றி தன் இடக்கரத்தை, தலைக்கும் சுவருக்குமிடையில், ஒரு தலையணையின் ஸ்பரிசத்தை உண்டாக்க முயன்றவாறு அக்காலத்தில் அவன் தந்தை–உணர்வு மிகு சத்தியாக்கிரக கோஷங்களை, தனக்கும் தன் தாய்க்கும் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டதை, மனத்திற்குள் எண்ணி சுவாரசித்தான்–ரகு!

அறப்போரின் பரிணாம வளர்ச்சியா அல்லது திசை திரும்பிய வடிவமா, இச் சிறை வாசம்? அவன் மனம் ஏதுக்களை ஆராய்ந்தன. காண இயலவில்லை! அவன் என்றோ ஒருநாள் மு.வ.வின் 'அறமும் அரசியலும்' படித்த நினைவுகளின் வெளிப்பாடுகளே இவைகள் அனைத்தும்!

சிறை– புதுமையில் புரட்சிகாணும் சிந்தனைகளின் தோற்றுவாய் என்பார்கள்–

ரகு, சார்ந்தமட்டில் முரண்! காரணமோ, தொடர்போ இல்லாசிறை வாசம்–

வெளியாக்கம் செய்யப்படாத வடிகால்கள்! ஆனால் பொருத்தமான தீர்வை அவனால் கொள்ளக்கூடியதாய் இருந்தது.

'எலிவளை அது தனி வளை'–

இது அவனுக்காக மட்டுமல்ல– அனைவருக்காகவும்– அனர்த்தங்களுக்காகவும்...!

–▫▫–

ரகுவிற்கு,

அப்போது வயது இருபத்திரண்டு இருக்கும்!

திருக்கோணமலை பகுதி கொட்டியாபுரப் பற்றில் (மூதூர்) மறப்போராட்டம் உக்கிரம் அடைந்த காலப்பகுதி!

மறப்போராளி என ஐயத்தில் கைது செய்யும் தாக்கத்தை கணிசமான அளவு தவிர்த்துக் கொள்ளும் நோக்குடன், மணம் செய்து கொண்டவன்–

இப்போது சுமக்க முடியாதளவு குடும்ப சுமை பாரித்தது அவனுக்கு!

★★★

**1985ம்** ஆண்டு ஆடி 14ம் திகதி.

இரணமான வடுக்களாக அழியாது இதயத்தில் பதிந்த அந்தநாள்! வளைகுடா நாட்டின் வேலைவாய்ப்பிற்காக ரகு நேர்முக தெரிவிற்காய்– கொழும்பிற்கு பயணித்த நாள்.

திருகோணமலையில் இருந்து புறப்பட்ட புகைவண்டியின் மூன்றாம் வகுப்பு ஆசனத்தில்– கைக் குழந்தையுடன் அமர்ந்திருந்த சுமணாவதிக்கு அருகில் அமர்ந்தான் ரகு!

மொழி, இனத்திற்காக இட்ட வேலித் தடைகளைத் தாண்டி, தன்பரிபாஷையால் பேசிக்கொண்டு சுமணாவின் குழந்தை ரகுவைத் தாவியது.

ரகுவிற்கு தன் குழந்தையின் நினைவு நிழல்.

குழந்தைக்கு தன் தந்தையின் நினைவு நிழல்.

'குழந்தையாய் மனிதன் இருந்திருந்தால் குழப்பமே இருந்திருக்காது.' எண்ணியவாறு இலேசாக குழந்தையை அரவணைத்து, சுமணாவதியுடன் பேச்சுக்கொடுத்தான்.

'அவள் சொந்த ஊர் திருக்கோணமலை, அபயபுரம்! திருமணம் செய்தது கொழும்பு– தெகிவளை! தாய் தந்தையரை காண இவ்விடம் வந்தமை!'

இவைகளில் ஆரம்பித்த உரையாடல், 'அரசியல், நாட்டு நடப்பு, இன ஒற்றுமை, சுய இலாபத்திற்கான யுத்தம்,' ஆகியவைகள் உள் அடக்கமாக இருந்தன. இரு காரியாலய மொழிகளும் கலந்த சம்பாஷணை.

இவை எதையுமே கவனத்தில் கொள்ளாத புகையிரதம் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. புகையிரதம், 'அனவை' புகையிரத நிலையம் தாண்டி சிறிது தூரம் சென்று நின்றிருக்கும்!

மெதுவாக யன்னல் வழியால் சுமணாவும், ரகுவும், தலையை வெளியால் இட்டுப் பார்த்தார்கள்.

அடர்ந்த காடுகளில் இருந்து காடையர் கூட்டம், கூரான இரும்பு ஆயுதங்கள் சகிதம், பேரிரைச்சலாக கத்திக் கொண்டு புகை வண்டியினுள் ஏறியது.

கணப் பொழுதில் இருவருமே புரிந்து கொண்டனர்.

எங்கோ நடந்த தாக்குதலுக்கு, இங்கே பயணிக்கும் தமிழர்கள் பலியாகப் போகிறார்கள்.

'ஐயோ.....அம்மா' மரண ஓலங்கள்.

அடையாளம் காணப்பட்டு, சூறையாடல்களும், கொலைகளும் வெற்றிகரமாக நடந்தன.

சுமணாவதிக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை. 'ரகுவின் உயிராவது தன்னால் காப்பாற்றப்படட்டும்' என எண்ணிக்கொண்டவள், தன் கைக்குழந்தையை ரகுவின் மடியில் வைத்தாள். அந்தக் காடையர்களை ரகுவுடன் கதைக்க விடவில்லை. தன் மொழியிலே தன்னை அடையாளம் காட்டி, ரகுவையும், குழந்தையையும் தன் கணவன், குழந்தையெனக் காட்டினாள்.

**அடர்ந்த காடுகளுக்குள்ளிருந்து காடையர் கூட்டம் கூரான ஆயுதங்களுடன் புகைவண்டியில் ஏறியது.**

'அனைத்தும் எனக்குப் புரிந்து விட்டது' என கூறிச்சிரிப்பது போல் இருந்தது, உயிர் தப்பிய ரகுவின் மடியில் இருந்த குழந்தை.

அன்றிலிருந்து– அதாவது அவள் தந்த உயிரிலிருந்து– தொடங்கிய உறவு– இரு குடும்பங்களிடையே இன்றுவரை துல்லியமாக தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

–●●–

**1996ம்** ஆண்டு ஆடித் திங்கள் 24ம் நாள்– ஆண்டுக்கு ஆண்டு இந்நாட்டின் அனர்த்தங்களை வரலாற்று ஏடுகளில் ஆவணமாக்கப்பட்டு வரும்மாதம்– காரிருள் மாதம்!

கீழ்மூச்சு, மேல்மூச்சு வாங்க ஓடி வந்த ரகு பயணச் சாமான்களோடு மூன்றாம் வகுப்பு பயணச் சீட்டை மீண்டும் ஒரு முறை பார்த்து விட்டு புகையிரதத்தில் ஏறி அமர்ந்து கொண்டான்.

அவனின் இதயச் சுமை, கனப்பதால் புகையிரதமும் அதை தன் இழுவையால் வெளிப்படுத்தியது– மெதுவாக நகர்ந்தது கொழும்பை நோக்கி!

சட்டைப் பையினுள் கையை விட்டு எடுத்த அந்த தந்தியை மீண்டும் மனதிற்குள் படித்தான் ரகு! அது ஆங்கிலத்தில் இருந்தது.

'கணவர் குண்டுவெடிப்பில் இறந்து விட்டார்'–சுமணாவதி–

பேரிடியை தலையில் தாங்கிக் கொள்வது போல் இருந்தது! இப்போது ரகு எதையும் யதார்த்தமாய் சிந்திக்கப் பக்குவப்படுத்தி விட்டது அவனின் காதோர நரை!

எப்படித்தான் தன்னை நிதானப்படுத்தியிருந்தாலும், சுமணாவதி அவனைக் கண்டு பாய்ந்து வந்து கதறிக் கட்டியழுததை அவனால் சுவீகரித்துக்கொள்ள முடியவில்லை. உண்மை உறவுகள் நிதர்சனமானவை.

ரகுவும் 'கோ'வென கதறியழுதான். இரு மொழிகளும் இணைந்த கதறல்கள்! தன் கணவன் தெகிவளை ரயில் குண்டு வெடிப்பில் மரணமானது, துயரங்களுக்கும் துன்பங்களுக்கும் இன, மொழி பேதமில்லை; இணைந்து ஓடுகின்ற ரயிலில்தான் எத்தனை உறவுகள் இணைகின்றன– துண்டிக்கப்படுகின்றன!

சோகங்களை சுமணாவதியோடும், சுற்றத்தோடும் பகிர்ந்து கொண்ட ரகு, மௌனமாக இருந்த– தன் உயிர்காக்க உடந்தையான குழந்தை–இப்போ பத்துவயதைத் தாண்டியபாலகனை– இழுத்து அணைத்துக் கொண்டான். அவன் இதயம் கசிந்தது.

இப்படி எத்தனை பேரின் எதிர்காலங்கள் பாதியிலே முடிகின்றது?

மறுநாள் விடிகிறது!

சுமணாவதியின் வதிவிடத்தை சூழ்ந்திருந்தது– பாதுகாப்புப்படை, கொழும்பு– தெகிவளை குண்டு வெடிப்பின் எதிரொலியின் பிரதிபலிப்பு– ரகு கைது செய்யப் பட்டான். ●


படிப்பகம்

www.padippakam.com

தருவது
ரசிகன்

# இது கொடிதல்!

## இலக்கிய நயம்



மன்னன் பேச்சுக்கு மறு பேச்சில்லை!
அண்ணனோ, தம்பியோ யாரெவர் என்றாலும்
மன்னன் முன்னால் மௌனம் காக்கவும்.
கண்ணன் உரைத்தது கீதை- இந்த
மன்னன் உரைப்பதெல்லாம் வேதம்.

சோழனை எதிர்க்க பாண்டியனுக்கு
வேழம் நிகர் வீரர்கள் தேவை.
கோழைகளா நீங்கள்? குன்றென நிமிர்ந்தால்
வாழைமரமாய் வெட்டிச் சாய்க்கலாம் வருக!
சோழர்களை வெல்லத் திரண்டது படை!

படுகளமதில் பாண்டியன் வென்றான்.
புறமுதுகிட்ட பகைவரை விரட்டினான்.
வெற்றி வெற்றி வெற்றி
அதிர்ந்தது முரசம்! வியந்தனர் மக்கள்!
வாழிய மன்னா! புகழ்ந்தனர் புலவோர்.

புகழ்மொழி யாவும் போதையாய்மாற
இகழ்பவர்யாரடா? தலைக்கனம் கொண்டான்.

"வீரர்கள் சிந்திய இரத்தம்மீதும்
தீரர்கள் மாய்ந்த களத்தின்மீதும்
தேடிய வெற்றியை தொலைக்கவேண்டாம்.
நாடிய மக்களை நல்லாட்சி புரிக!"
உரைத்த அமைச்சரை
உதைக்காத குறையாய் விரட்டியனுப்பினான்.

பள்ளியறைக்கு பாவைகள் தேவை.
அள்ளிக்கொடுக்க பொன் பொருள் தேவை.
துள்ளியாடும் துடியிடைப் பெண்களை
கிள்ளி விளையாட மாளிகை தேவை.

துடியிடை வருந்த தொங்கும் அழகுகள்!
கடிதென விம்மி உயரும் எழில்கள்!
படிபடியென்று விண்ணப்பம் போட்டு
மடியதில் அழைக்கும் மங்கையர் விழிகள்!

படித்தான்- படித்தான்
தினம் ஒரு புத்தகம் புரட்டிப் படித்தான்!
சுவைத்தான்-சுவைத்தான்
தினம் ஒரு தேன்கனி தேடிச் சுவைத்தான்!
நனைந்தான்-நனைந்தான்
தினம் ஒரு அருவியில் தேகம் நனைந்தான்.
குடித்தான்-குடித்தான்
பல மலர்தாவி மகரந்தம் குடித்தான்.

மக்களும் வேண்டாம், மறவரும் வேண்டாம்!
பக்கமிருந்திடும் முற்றித்திரண்ட பூவையர் போதும்.
மந்திரிகளும் வேண்டாம், மதியுரைக்கவும் வேண்டாம்!
பந்திக்கு வரும் பருவ விருந்துகள் போதும்!

பருவ மழை பொய்த்தால் என்ன?
உருவம் மெலிந்தவர் வறுமையில் செத்தால் என்ன?
பருவ மங்கையர் பஞ்சமில்லாத
அருமைமிகு பள்ளியறை போதும்!

கொட்டுக வரி! குவித்திடு திறை!
தட்டுக கரம், மன்னன் வாழ்க!
கொட்டமடித்தான், குடிகளை வதைத்தான்!
தட்டிக் கேட்டால் சிறையினில் அடைத்தான்!

மன்னனுக்காகவே மக்கள் இங்கே.
கண்ணைக் கொடுத்தும் மன்னனைக் காப்பீர்!
ஆட்சிக்கு அடங்கி வாழ்பவர் பிழைப்பர்.
ஆதிக்கம் என்று உரைப்பவர் தொலைவர்!

மன்னன் எவ்வழி மற்றோர் அவ்வழி.
கண்ணை மூடி மன்னன் இருக்க
பெண்களை நாடிய மன்னனின் படைகள்
கண்களை குத்தும் விரல்களாய் மாறின.

பணிந்தால் பரிசு, மறுத்தால் சாவு!
கனிந்தால் என்ன, காயென்றால் என்ன?
துணிந்து கேடு எங்கும் விதைத்தனர்.
பணிந்து கிடந்தவர் ஒருநாள் எழுந்தனர்!

சாவது ஒருமுறை, தினமும் சாவது கொடுமை.
வருவது வரட்டும், பதுங்குதல் வேண்டாம்.
பொறுத்தார் ஆள்வார் என்பது பொய்யே;
பொறுத்தார் மாள்வார் என்பது மெய்யே!
நெருப்பாய் எழுக, நீதி வெல்லும்.
தடுப்பாரில்லாத கொடுங்கோல் வீழும்!

தீது தீது என்றால் போதுமோ
தீர்த்திட வருக, தீய்ந்திடச் செய்க!
சூது சூது என்றால் போகுமோ
சுழன்றடிக்கும் புயலாய் சுழல்க!

முழக்கம் எழுந்தது. புயல் திரண்டது.
கலக்கம் இல்லாமல் மன்னன் இருந்தான்.

"கொஞ்சம் சிரியடி, கொஞ்சம் சிரியடி;
கொவ்வை இதழ்களால் கள்வெறி ஊட்டடி!
நெஞ்சில் தாங்கடி, நெஞ்சில் தாங்கடி;
கொஞ்சம் இரவை பகலாய் மாற்றடி!
மஞ்சம் தாங்குமா? மஞ்சம் தாங்குமா?
பஞ்சம் இல்லாமல் படையல் போடடி!"

"மன்னா, மன்னா! மயக்கும் மன்மதா!
கண்ணா வருக, வெண்ணெய் நானே!"

"பொன்னே, கண்ணே, பூவின் பூவே!
மன்னனேயானாலும் மன்மதலீலையில்
கண்ணனாயானால்தான் கிடைக்கும் நிம்மதி."

"பசியோ மன்மதா! பசியோ மன்னவா?
பசியதிகமானால் புசிப்பது ருசிக்காது."
வசியப் புன்னகையால் வலை வீசினாள்.

"புசிப்பது வயிற்றுக்கு,-உன்னை
பூஜிப்பது மனதுக்கு!2
பசிக்குப் பால், பழம்
ருசிக்கு நீ தரும் தேன்ரசம்!"

மன்னன் விழிகளில் மயக்கம்
மங்கையின் மேனியில் கிறக்கம்.

"உண்டி சுருங்கினர் மக்கள்
உணவு கொடுக்க ஒரு வழியில்லையோ?
உள்ள வளமும் உருக்குலைந்து போகிறது
நல்ல ஆட்சி வழங்க மனமில்லையோ?
வேலிகளே மேய்கிறது பயிரை
வெகுண்டெழ வேண்டாமோ தீர் மன்னன்?"

புருவம் உயர்த்தினான் புரவலன்.
உருவம் குலுங்க நகைத்தான்.

"உறவுக்கு வந்தவளே
உபதேசம் எதற்கடி?
பருவ சுகம் பரிமாற வந்தவளே
தரும நியாயம் உனக்கேனடி?

தேன்தரும் உன் உதடுகளில்
தீயென வார்த்தைகள்
ஏன் தொடுத்தாய்?

பூவை நீ என்றதால்
போகட்டும் என்று மன்னித்தேன்.
வேறு யாராக இருந்திருந்தாலும்
புழுவைப்போல போட்டு மிதித்திருப்பேன்!

தேன்தர மட்டும்
நீ இதழ் திறந்தால் போதும்!"

மங்கை நகைத்தாள்.
மன்னன் விழித்தான்.

"மன்னா! உன்
கண் திறக்காது எப்போதும்!
நாய்வாலானாய்! இனிமேல்
நிமிர்த்தவே முடியாது!"

"அணைக்கவந்த புறாவே-நீ
கனைத்துக் கொண்டிருக்கிறாய்!
புலியின் குகைக்குள் நீ ஒரு
புள்ளிமான்!"

சிங்கத்தின் கோட்டைக்குள்
நீ ஒரு சிலந்தி!
வாடி வந்து கலந்துகொள்!
தேடி சுகம் கண்டுகொள்!

மங்கை நகர்ந்து மன்னன்
முதுகை வளைத்து அணைத்தாள்.
"தேகமெல்லாம் இன்பம்
தாகமெல்லாம் தீரட்டும்"
சொன்னவன் மன்னன் சொக்கினான்.
அடுத்த நொடியே 'அய்யகோ'
என்று துடித்தான்- துவண்டான்!

"மேய்ந்தனர் என்னை உன்னவர்
பாய்ந்தது உன்னிடம் குறுவாள்
மேயவிட்டது உன் குற்றம்
மாய்ந்துபோ மன்னா! வாழட்டும் சுற்றம்!"

"கொலைத்தொழில் செய்ய
பெண் நீ வந்தாயே!
வெட்கம்! வெட்கம்!"

"திருந்தாத மன்னா!
திருக்குறள் தெரியுமா?
குடிகளைத் வருத்தும் மன்னனைவிட
கொலைத்தொழில் செய்வோர்
கொடியோர் அல்ல!"

"கொலைமேற்கொண் டாரிற் கொடிதே
அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து"
குறள்-551, அதிகாரம்-56.

## ஐந்து கப்டன்கள்

ஸ்போர்ட்ஸ்



இதுவரைகால கிரிக்கெட் அணி கப்டன்களில் திறமையான கப்டன்களாக செயற்பட்டவர்களில் முதல் ஐந்து இடங்களில் உள்ளவர்கள் அலன் போடர் (அவுஸ்திரேலியா), இம்ரான்கான் (பாகிஸ்தான்), விவியன் ரிச்சாட்ஸ் (மேற்கிந்தியத்தீவு), அசாருதீன் (இந்தியா), அர்ஜுன ரணதுங்கா (இலங்கை).

முதல் ஐந்து இடத்தில் உள்ள சிறந்த கப்டன்களும் தலைமைதாங்கிய, வெற்றியீட்டிய, தோல்விகண்ட, வெற்றி தோல்வி இல்லாமல் முடிந்த மற்றும் முடிவு தெரியாத போட்டிகள் முறையே பின்வருமாறு.

அலன் போடர், 178-107-67-1-3, இம்ரான் கான் 139-75-59-1-4, விவியன் ரிச்சாட்ஸ் 108-70-36-0-2, அசாருதீன், 118-59-55-2-2. அர்ஜுன ரணதுங்கா, 115-51-60-0-4. (அர்ஜுன ரணதுங்கா சிங்கர் கிண்ணம் வரையான போட்டிகள் மட்டும் 51. கென்யா போட்டிகள் சேர்க்கப்படவில்லை.)

## முதலிடத்தில் டெண்டுல்கர்

தற்போதைய கிரிக்கெட் வீரர்களில் முதலிடத்தில் இருக்கிறார் டெண்டுல்கர். சி.ஈ.ஏ.ரி. என்னும் அமைப்பினர் வெளியிட்டுள்ள கிரிக்கெட் வீரர்களுக்கான தராதரப் பட்டியலில் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் வந்துள்ளார்.

இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் டொமினிக் கோக் முன்னர் முதலிடத்தில் இருந்தார். சிங்கர் கிண்ணப்போட்டியில் அடித்த அசத்தலான செஞ்சுரியோடு டொமினிக் கோக்கை பின்னே தள்ளிவிட்டு முதலிடத்தில் வந்துவிட்டார் டெண்டுல்கர்.

சிறந்த கிரிக்கெட் வீரர்களும் அவர்கள் பெற்றுள்ள புள்ளிகளும் பின்வருமாறு:

சச்சின் டெண்டுல்கர் 28 புள்ளிகள், மிக்நைட் (இங்கிலாந்து) 28 புள்ளிகள், அலெக் ஸ்ரீவோட் (இங்கிலாந்து) 25 புள்ளிகள், டொமினிக்கோக் (இங்கிலாந்து) 25 புள்ளிகள், ஜேக் ரஸல் (இங்கிலாந்து) 23 புள்ளிகள், முஸ்தாக் அகமட் (பாகிஸ்தான்) 22 புள்ளிகள், வெங்கடேஷ் பிரசாத் (இந்தியா) 20 புள்ளிகள், சவுரவ் கங்குலி (இந்தியா) 19 புள்ளிகள், நசீர் உசேன் (இங்கிலாந்து) 18 புள்ளிகள், கிரிஸ் லூயிஸ் (இங்கிலாந்து) 18 புள்ளிகள், மைக்கல் ஆர்தட்டன் (இங்கிலாந்து) 17 புள்ளிகள். இஜாஷ் அகமட் (பாகிஸ்தான்) சயீட் அன்வர் (பாகிஸ்தான்) சிரஹாம் தோர்ப் (இங்கிலாந்து) தலா 16 புள்ளிகள், மொய்ன்கான் (பாகிஸ்தான்) 15 புள்ளிகள். ரொமேஷ் கலுவித்தாரன (இலங்கை) 13 புள்ளிகள், அரவிந்த டி சில்வா (இலங்கை) 12 புள்ளிகள், முத்தையா முரளிதரன் (இலங்கை) 11 புள்ளிகள், சனத் ஜெயசூரியா (இலங்கை) 10 புள்ளிகள்.

## ஷேன் வோர்ன் கிடையாது

இந்தியாவில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சுற்றுப்பயணத்தில் ஷேன் வோர்ன் இடம் பெறவில்லை. அவருக்குப் பதிலாக பீற்றர் மெசின் பயர் இடம்பெற்றுள்ளார்.

இந்தியாவில் அவுஸ்திரேலிய அணி ஆறுவாரங்கள் தங்கியிருக்கும். சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும், ஒரு டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி விளையாடும்.

கைவிரல் பூரண குணமடையாமல் இருப்பதால் ஷேன் வோர்ன் கலந்துகொள்ளவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கனடாவில் ஏற்பட்ட தோல்விக்கு பொறுப்பேற்று இந்திய அணி மனேஜர் சந்திப் பட்டில் நீக்கப்பட்டு, புதிய மனேஜராக மதன்லால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர்.

★ கமலுக்கு இந்தியனில் 'மேக் அப்' போட்டதாக தன்னைப் பற்றிக் கூறிய இலங்கையர் ஒருவர் சளைக்காமல் தொடர்ந்தும் அதையே கூறிவருகிறாரே?

எம். நிரஞ்சலா, கண்டி.

அவர் இங்கே அதைக் கூறிக்கொண்டிருக்காமல் இந்தியா சென்று கமல்மீது வழக்குப் போடலாமே? "அய்யய்யோ நான்தான் 'மேக் அப்' போட்டேன். கமல் ஹொலிவுட் 'மேக் அப்' மேன் போட்டதாக சொல்கிறார். இது அநியாயமய்யா அநியாயம் என்று மோசடி வழக்குப்போடலாமே?" அதை விடுத்து நமது காதுகளில் பூ வைக்க இடம் தேடுவது முறையோ?

♠♣

★ கிளிநொச்சி நகரை படையினர் கைப்பற்றுவார்களா?

சி. புவீந்திரன், கொழும்பு-11.

கைப்பற்றிவிட்டார்கள். ஆனால் நகரத்தைத்தான் காணவில்லையாம். கிளிநொச்சி மீண்டும் நகராவதற்கு பல காலங்கள் நகர வேண்டியிருக்கும்.

♠♣

★ சில்க் சுமிதாவின் மரணம் கொலையா? தற்கொலையா?

எச்.எம். பாருக், கல்முனை.

தற்கொலை என்று ஃபைலை அடித்து மூடிவிட்டது பொலிஸ். ஒருவாரத்திற்குள் விசாரணையை சுத்தமாக முடித்து பொலிசாரே அறிக்கையும் விட்ட சுறுசுறுப்பு ஆச்சரியமாக இருக்கிறது. சுமிதாவின் காதலரிடம் சுமிதாவின் பணம் இருக்கிறது. 'பணம் பாதாளம்வரை பாயும்' என்றொரு பழமொழியும் இருக்கிறது.

♠♣

★ டியர் சிந்தியா! யாழ் இளைஞரான அருளானந்தம் தொடர்ச்சியாக ஓடி உலக சாதனை படைத்துள்ளாரே?

ஜெ. பாஸ்கரன், கொழும்பு-7.

அருளானந்தத்துக்கு பாராட்டுக்கள்! ஏற்கனவே இலங்கைத் தமிழர்கள் உள்நாட்டிலும் உலகளாவியரீதியிலும் தொடர்ச்சியாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அது சோதனை. அருளானந்தம் செய்திருப்பது சாதனை.

♠♣

★ டியர் சிந்தியா! உங்களுக்கு நெத்தியடியான பதில் சொல்லத் தெரியுமா?

செல்வி இ. சியாமளா, பண்டாரவளை.

எனக்குத் தெரியாது. வேண்டுமானால் ஒரு கணவன் மனைவிக்கு சொன்ன நெத்தியடியான பதிலைச் சொல்கிறேன்.

புத்தகப் புழுவான தனது கணவரிடம் மனைவி அலுத்துக்கொண்டாள்.

"நான் ஒரு புத்தகமாகப் பிறந்திருக்கலாம். அப்போதுதான் என்னையும் கவனித்திருப்பீர்கள்!"

கணவன் தயங்காமல் பதில் சொன்னான்:

"ஆஹா! நீ மட்டும் நிஜமாகவே ஒரு புத்தகமாக, அதுவும் பஞ்சாங்கமாக இருந்தால், ஆண்டுக்கு ஒரு முறை புதுப்புது பஞ்சாங்கமாக மாற்றிக்கொண்டே இருப்பேனே!"

♠♣

★ இந்திய அணியின் கப்டன் டெண்டுல் கருக்கும் அசாருதீனுக்கு ஏற்பட்ட நிலை ஏற்படுமா?

எம். நாகராஜன், வவுனியா.

ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. கனடா சகாரா கிண்ணப் போட்டியில் கங்குலியை ஒதுக்கிவிட்டு காம்ளிக்கு இடம்கொடுத்தார் என்று புகார் கிளம்பியிருக்கிறது. கல்கத்தாவில் டெண்டுல்கரின் படங்களை தீயிட்டுக் கொளுத்தி பெரிய ஆர்ப்பாட்டமே பண்ணி விட்டார்கள்.

♠♣

★ எதிலும் நம்பிக்கை இருக்கவேண்டும் என்பதற்காக முடியாத காரியங்களிலும் நம்பிக்கை வைப்பது சரியா?

இ. ஜேசுதாஸ், புத்தளம்.

அறிவுகலந்த நம்பிக்கைதான் ஆரோக்கியம். ஒரு மாணவனிடம் ஆசிரியர் கேட்டார்:

"கடவுள் ஒரு பானைக்குள் ஒரு யானையை நுழைய வைச்சார் என்று சொன்னா அதை நீ நம்புவியா?"

"நம்புவேன் சேர்" என்றான் மாணவன்.

"எப்படி நீ நம்புகிறாய்?" என்று கேட்டார் ஆசிரியர்.

"அந்தப் பானை அந்த யானையை விடப் பெரிசாக இருந்திருக்கும்!" என்றான் மாணவன்.

♠♣



★ கத்தியால் வெல்லமுடியாத காரியத்தை புத்தியால் வெல்லமுடியுமா சிந்தியா?

சோ. ஹரிகரன், திருக்கோணமலை.

முடியும் ஹரிகரன். இந்தக் கதையைப் படியும்.

சக்கரவர்த்தி அக்பர் கீழே சிந்திக்கிடந்த நாணயங்களை எடுத்துக் கொண்டிருந்தார். பின்புறமிருந்த பீர்பால், மன்னரின் பின்புறத்தில் செல்லமாக ஒரு தட்டுத் தட்டிவிட்டார். அக்பருக்கு வந்ததே கோபம். "இந்தப் பீர்பாலைச் சிரச்சேதம் செய்யுங்கள்," என்று உத்தரவிட்டார். பின்னர் சிறிது நேரம் கழித்து;

"இத் தவறு செய்தமைக்கான காரணம் இந்தத் தவறைவிட மோசமாக இருந்தது என்று எண்ணும்படி ஒரு காரணம் சொன்னால் உமக்கு விடுதலை" என்றார் அக்பர்.

பீர்பால் மெல்ல அக்பருக்கு மட்டும் கேட்கும்படி சொன்னார்: "உண்மையாகவே அது நீங்கள் என்று எனக்கு தெரியாது மன்னரே! நான் மகாராணிதான் குனிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்து விட்டேன்."

♠♣

★ இந்திய கிரிக்கெட் கப்டன் சச்சின் டெண்டுல்கரின் துடுப்பாட்டம் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ஜெ. நிஷாந்தன், பதுளை.

பந்தை தட்டித் தட்டி தடுமாறத் தொடங்கிவிட்டால் விரைவில் அவுட்டாகப் போகிறார், 'மூட்'சரியில்லை என்று புரிந்துவிடும். சரியான கோணத்தில் முதல் சில ஓவர்களில் பந்துகளை கையாளத் தொடங்கி குஷியாகிவிட்டார் என்றால் மின்னல்தான். நிலைத்து ஆடத்தொடங்கும்வரைதான் 'மூட்' பிரச்சனை. நிலைகொண்டு விட்டார் என்றால் பின்னர் புகுந்து தூள் பண்ணிக்கொண்டே இருப்பார். லேசில் ஆடுகளத்தைவிட்டு பிரிக்க முடியாது.

♠♣

★ ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் மோதிக்கொள்கிறார்களே. இதுதான் ஜனநாயகமா?

எச்.என். லாபீர், நீர்கொழும்பு.

ஜனநாயகம் வோட்டுக் கேட்கும்வரைதானே!

♠♣

★ ஹீரா, சுவாதி இருவரில் அஜித்குமாரை அதிகம் கவர்ந்தவர் யார்?

சி. மனோகரன், வவுனியா.

அது தெரியவில்லை மனோகரன். ஆனால் அஜித்குமார் அதிகமாகக் கவர்ந்து கொண்டிருக்கிறார். கவர்ந்த பட்டியல் ரொம்பப் பெரிசாகும்போல் இருக்கிறது.

♠♣

★ 'சிவசக்தி' படம் பார்த்தீர்களா? சத்தியராஜின் நடிப்பு எப்படி?

ஏ. நிமால், மருதானை.

பழைய சத்யராஜை மீண்டும் பார்த்த திருப்தி. அசத்தல் ராஜ்.

♠♣

★ டியர் சிந்தியா! இப்போதெல்லாம் உண்மை சுடுவதில்லையே- அது ஏன்?

கோ. குகதாசன், மன்னார்.

தோட்டாக்கள் தீர்ந்துபோயிருக்கலாம்! அதாகப்பட்டது உண்மைக்காக போராடுகிறவர்களின் எண்ணிக்கையைச் சொல்கிறேன்.

♠♣

## சிந்தியா பதில்கள்

★டியர் சிந்தியா! விடாமுயற்சிக்கு ஒரு உதாரணம் சொல்ல முடியுமா?

எஸ். தயாளன், நுவரெலியா.

ஹிட்லரும், முசோலினியும் இரண்டாம் உலகப் போரில் ஒரே அணியில் இருந்தவர்கள்.

முசோலினி ஒருமுறை ஹிட்லருக்கு அவசரத் தகவல் அனுப்பினார்.

"இங்கு நாம் கடுமையாகப் போரிட்டுக் கொண்டிருக்கிறோம். படையினருக்கு உணவு போதவில்லை. உடனடியாக உணவுப் பொருட்களை அனுப்பி உதவவும்."

அதற்கு ஹிட்லர் பின்வருமாறு பதில் அனுப்பினார்:

"உங்கள் செய்தி கிடைத்தது. மிக வருந்துகிறேன். இங்கும் உணவுப் பற்றாக் குறை உள்ளது. எனவே அனுப்ப முடியவில்லை. உங்கள் வீரர்களின் வயிறுகளை பெல்டால் இறுக்கிக் கட்டிக்கொண்டு போரிடச் சொல்லுங்கள்."

முசோலினி விடவில்லை. மறுபடியும் ஹிட்லருக்கு செய்தி அனுப்பினார்.

"உங்கள் யோசனைக்கு நன்றி.

உடனடியாக பெல்ட்டுக்களை அனுப்பி வைக்கவும்."

ஹிட்லர் அதைப்பார்த்து சிரித்துவிட்டு உணவுப் பொருட்களையே அனுப்பி வைத்தார்.

♠♣

★ சிந்தியா! காதலை அதிகம் நேசிப்பவர் யார்?

ஜே. ஜிப்ரி, அக்கரைப்பற்று-06.

காதலின் முதல் படிக்கட்டில் காலடி வைப்பவர்கள்!

♠♣

★ மலையக மக்கள் முன்னணிக்கும், இ.தொ.காவுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைக் கூறுவீர்களா?

து. கிருஷ்ணகுமார், பொகவந்தலாவ.

குரு-சிஷ்யன்
அமைச்சர்-பிரதி அமைச்சர்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 51

இராமபிரானுடைய கோதண்டத்திலிருந்து சீறிப்பாய்ந்த இராமபாணம் வாலியின் மார்பைத் துளைத்து அந்த மாவீரனை மண்ணில் கிடத்தியது. மாமேருமலை சரிந்தால் எவ்வாறிருக்குமோ அதே போன்று வாலி வீழ்ந்து கிடந்தான்.

இந்திரன் மகனான வாலி இணையிலா வீரன். அவனைப் போரில் நேருக்கு நேர் நின்று பொருதி வெல்லக்கூடிய வல்லமை உலகில் எவருக்குமே இல்லை. தேவர்களிடம் வரங்களைப் பெற்றவன். தேவேந்திரனால் அளிக்கப்பட்ட மார்புப்பதக்கத்தைப் பெற்றவன்.

## அமிழ்தம் கடைந்தவன்

கம்பநாட்டழ்வார் வாலியின் ஆற்றலை விளக்கும் நோக்குடன் தரும் பாடல் இவை:

போவதில்லை என்று அவனுள்ளம் நம்பிக்கை கொண்டிருந்தது. மண்ணில் கிடந்த வாலியின் மார்பில் பாய்ந்த கணையினால் ஏற்பட்ட துன்பத்தை விட அவனுடைய மனத்தில் ஏற்பட்ட துன்பமே கரைகாண முடியாத தொன்றாக அவனை ஆட்டிப்படைத்தது.

## யார் செலுத்திய கணை?

தனது மார்பினை ஊடுருவிய அம்பு யாரால் ஏவப்பட்டது என்பதை அறிய அவன் உணர்வு துடித்தது. தன்னை வீழ்த்தக்கூடிய கணையினை வீசியவன் தேவேந்திரனாக இருக்கமுடியாது; திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் சாட்சாத் சிவபிரானாக இருக்கலாமோ; திருப்பாற்கடலில் படுத்துறங்கும் திருமாலாகவோ அல்லது திருமாலின்

அவனையும் அறியாமல் அவன் வாய் "அண்ணா...!, அண்ணா...!" என்று அலறியது. கண்களிலிருந்து கண்ணீர் மழையெனப் பொழிய வாலியின் பாதங்களில் வீழ்ந்தான்.

"அண்ணா... அண்ணா...!

ஈரேழு உலகங்களிலும் உள்ள எவராலுமே வீழ்த்த முடியாத-ஈடுஇணையற்ற வீரனான உன்னை, உன் தம்பியாகிய நானே வீழ்த்தக் காரணமாகி விட்டேனே! உன்னை அணுக அந்த இயமதர்ம ராஜனே அஞ்சி நடுங்குவானே! உனக்கு உன் உடன் பிறப்பாகிய நானே எமனாகிவிட்டேனே! அண்ணா...! அண்ணா! என்னை மன்னித்து விடுங்கள் அண்ணா...!" சுக்கிரீவன் இவ்வாறு அழுதவண்ணம் மயக்க முற்று வீழ்ந்தான்.

## வீரன் வாலி விடுத்த வினா

மந்தர நெடுவரை மத்து வாசுகி
அந்தம் இல் கடை கயிறு அடை
கல் ஆழியான்
சந்திரன் தூண் எதிர் தருக்கின்
வாங்குநர்
இந்திரன் முதலிய அமரர் ஏனையோர்.
(கிட்கிந்தா காண்டம்-252)-3959.

மந்திரமாமலையினை மத்தாகவும் வாசுகி எனும் பாம்பினை கடலைக் கடைவதற்குரிய நீண்ட கயிறாகவும்; அம்மலை கடலுள் அமிழ்ந்து விடாமல் கீழே தாங்கிப் பிடிப்பதற்கு திருமால் ஆமை வடிவில் அடைகல்லாகவும், மலை சாய்ந்து விடாமல் உச்சியில் சந்திரன் மலையைத் தாங்கி நிற்கும் தூணாகவும் நின்று பிடித்துக் கொள்ள, கயிறாக மலையைச் சுற்றியிருந்த வாசுகியை ஒரு பக்கம் தேவர்களும் மறுபக்கம் அசுரர்களும் இழுத்துக் கடைந்தனர்.

★★★




சுக்கிரீவன் தன் காலடியில் விழுந்து அழுவதை வாலி உணர்ந்தான். தன் தம்பி படும் பாட்டையும் தனது கீழ்ப்பார்வையால் ஓரளவு கண்டான்; எனினும் அவனுடைய முழுச் சிந்தையும் பலமும் தன்மார்பில் புதைந்து கிடக்கும் கணையினைப் பிடுங்கி, அவ்வம்பினை எய்தவன் யார் என்பதை அறிவதிலேயே லயித்திருந்தன.

பெயர்வுற வலிக்கவும் மிடுக்கு இல் பெற்றி யார்
அயர்வுறல் இற்றதை நோக்கி யான் அது
தயிர் எனக் கடைந்து அவர்க்கு அமுதம் தந்தது,
மயில் இயல் குயில் மொழி மறக்கல் ஆவதோ?
(கிட்கிந்தா காண்டம்-253) 3960.

<u>பொருள்:</u>

**"வாசுகியைக் கயிறாகக் கொண்டு மந்திர மலை மத்தினை இருபுறத்திலிருந்தும் தேவர்களும் அசுரர்களும் கடையும் போது அவர்கள் களைப்புற்றனர். அவ்வேளையில் அவர்களை விலக்கிவிட்டு நான் (வாலி) அக்கடலைக் கடைந்து அமிழ்தம் கிடைக்கச் செய்தேன். மயிலைப் போன்ற சாயலும் குயிலைப் போன்ற குரலும் கொண்டவளே! இதனை நீ மறந்துவிடலாமோ?" இவ்வாறு வாலி தனது வீரத்தையிட்டு மனைவி தாரையிடம்- சுக்கிரீவனுடன் போருக்குப் புறப்படுமுன்னர் கூறுகிறான்.**

இப்பாடல்களின் கருத்துப்படி பார்த்தால் தேவர்களையும் அசுரர்களையும்விட அதிக வலிமையுள்ளவன் வாலி என்பது தெளிவாகத் தெரிகிறது. அசுரர்க்கு அரசனான இராவணனே வாலியின் ஆற்றலுக்குப் பயந்தவன் என்றும் கருதப்படுகிறது.

இத்தகைய பராக்கிரமசாலியான தன்னை தரையிலே வீழ்த்தியவன் யார்? என்பதை அறியமுடியாமல் வாலி தடுமாறுகிறான். சுக்கிரீவன் இரண்டாவது தடவை போருக்கழைத்தபோது வாலியினுடைய உள்ளத்தில் சந்தேகம் தோன்றியது. இருப்பினும் அதனைப் பொருட்படுத்தாமல் போருக்குப் புறப்பட்டதை ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறான். தனது அன்பிற்குரிய மனையாள் தாரை தடுத்ததையும் எண்ணிப் பார்க்கிறான். தசரத குமாரர்கள் சுக்கிரீவனுடன் சேர்ந்து வருவதாகக் கூறினாள் தாரை. ஆனால் நீதி நெறிகளுக்கு முக்கியத்துவம் தந்து தர்மத்தை நிலை நாட்டும் தகைமையுடைய இராமன், தன் தம்பியுடன் சேர்ந்து தன்னை எதிர்க்க என்றுமே வரப்

வயிற்றிலுதித்த நான்முகனாகவோ இருக்கலாமோ என்றெல்லாம் எண்ணிப்பார்த்தான். அந்த ஆயுதம் திரிசூலமாகவோ? சக்கரமாகவோ, வஜ்ஜிராயுதமாகவோ தென்படவில்லை. வில்லின் நாணிலிருந்து விரைந்து வந்து பாய்ந்த கணையாகத்தான் பட்டது. தனது கைகளால் நன்றாக அவ்வாயுதத்தைத் தொட்டுத்தடவிப் பார்த்தான். தனது பலன் முழுவதையும் திரட்டி இழுத்துப் பிடுங்க எத்தனித்தான். வேதனை தான் அதிகரித்தது. குருதிவெள்ளம் பாய்ந்து அந்த மண்ணில் பெருக்கெடுத்தோடியது. கணையினைப் பிடுங்கினால், அக்கணையினை ஏவியவன் யார் என்பதை அறிந்து விடலாமே என்று மீண்டும் மீண்டும் முயற்சித்தான்.

வாலியால் எழுந்திருக்க முடியவில்லை. சோர்வினால் உடல் வலிமையினை இழக்கத் தொடங்கிவிட்டது. தனது தலையினை இருபுறமும் மட்டுமே திருப்ப முடிந்தது. அவ்வாறு அசைத்தும் அவன் கண்களுக்கு எவருமே தென்படவில்லை.

## சுக்கிரீவனின் துயரம்

வாலி இராமபாணத்தால் வீழ்த்தப்பட்டதும், அவனுடைய பிடியில் அகப்பட்டுக் கிடந்த சுக்கிரீவன் தன்னை விடுவித்துக் கொண்டு மேலெழுந்தான். இராமரும் இலக்குவனும் நின்றிருந்த திசை நோக்கி நன்றி கூறுவதுபோல் மகிழ்ச்சியுடன் வணக்கம் செலுத்தினான். அடுத்த கணம் குற்றுயிராகத் தரையில் கிடந்து துடித்த தன் அண்ணனைப் பார்த்தான். தன் சக உதிரத்தோன்றல், உதிரம் பெருகத் துடித்துக் கொண்டிருந்த காட்சியைக் கண்டதும் அவனது மகிழ்ச்சி நீடிக்கவில்லை. விவரிக்க முடியாத சோகம் சுக்கிரீவனை ஆட்கொண்டது. துடிதுடித்துக் கொண்டிருந்த வாலியை இமைவெட்டாமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

தனது கால்களிலும் வாலிலும் முழுப் பலத்தையும் திரட்டி இரு கைகளாலும் அம்பினைப் பிடித்து இழுத்தான். அம்பு வெளிவந்தது. மார்பிலிருந்து பாய்ந்த இரத்தம் மலை உச்சியைத் தொடும் அளவு மேலே சீறிப்பாய்ந்தது.

பிடுங்கியெடுத்த அம்பினை இருகைகளாலும் ஏந்தி தன் கண்களுக்கு நேரே கொண்டு வந்தான். 'ராம்' என்ற எழுத்துக்கள் அந்த அம்பின் அடிப்பகுதியிலே பொறிக்கப் பட்டிருந்தது. அதனைக் கண்டதும் "ராம்... ராம்...ராம்..." என்று மூன்று முறை பலத்த ஒலியுடன் உச்சரித்தான். அந்தக் கணமே அவனுடைய காயத்திலிருந்து வெளியேறிய இரத்தப்பெருக்கு உடன் நின்று விட்டது. அதுமட்டு மல்லாமல் அவனை வாட்டிய வேதனையும் மறைந்துவிட்டது. எனினும் அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

'தர்மநெறிகாத்து தரணியிலே தன்னிகரற்ற ஆட்சியினைக் கண்ட தசரதன் மைந்தன் இராமனா இத்தகைய கோழைத் தனத்தைக் கடைப்பிடித்தான்?' என்று வாலி எண்ணத் தலைப்பட்டான். இராமரின் பாணத்தை வேறொருவன் கையினால் தொட்டெடுத்து எய்யக்கூடியவனல்ல என்பதை வாலி நன்கறிவான். 'மூவுலகும் போற்றுதற்குரிய வீரனான இராமன் இத்தகைய இழி செயலில் இறங்கக்கூடியவனல்ல' என்று ஒரு கணம் அவன் மனம் எண்ணத் துணிந்தது. அடுத்த கணம் இராமன்தான் இந்த இராமபாணத்தால் தன்னை வீழ்த்தியுள்ளான், என்று துணிந்தான். தன் அன்பு மனையாளான சீதையை இலங்கையர்கோன் இராவணன் கவர்ந்து சென்றமையினால், 'இராமன் சித்தம் தடுமாறி, செய்வதறியாது முறை தவறி விட்டானோ?' என்றும் மறுகணம் கருதலானான். 'மனைவியைக் கவர்ந்து சென்ற அரக்கர் கோனை சமர் செய்து வீழ்த்தும் ஆற்றலற்ற இராமர், இந்த வானரர் கோன் மீது கணைதொடுக்கும் இழி செயலைச் செய்தானோ?' இவ்வாறு கருதிய வாலியின் கண்களில் நீலவண்ண மேனியுடன் கோதண்டம் கையிலேந்தி தன்னை நாடி வந்து கொண்டிருந்த இராமரின் உருவம் தெரிந்தது. சோர்வுடன் சுருங்கிக்கிடந்த கண்களை நன்றாகத் திறந்து அவ்வுருவினைப்பார்த்து தன் உள்ளத்தில் பதித்துக் கொண்டான். இராமர் அருகில் வந்ததும் தன் வாயைத்திறந்து, "என்ன நினைத்தாய்? என்ன செய்தாய்?" என்ற வினாவினை எழுப்பினான்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 49

**சரியானவிடை:- ஒரே அம்பினால் ஏழு மராமரங்களைத் துளைத்தார்.**

1. **வீ.சொ. விஜயானந்த்.** அ.த.ம.வித்தியாலயம், உடப்பு.
2. **கா. கஜரூபன்.** வின்ஸர் அவென்யூ, தெகிவளை.
3. **செல்வன் சி. கஜேந்திரன்.** இல-175, டைக் வீதி, திருகோணமலை.
4. **செல்வி த. பத்மலோஜினி.** 64/47, மோதர வீதி, கொழும்பு-15.
5. **செல்வி பிரியதர்ஷினி குமாரசாமி.**, மாளிகாவத்தை அரச தொடர்மாடி, கொழும்பு-10.

**போட்டி இல. 51** கேள்வி:- வாலியின் மார்பைத் தைத்தது இராமபாணம். இது தவிர வேறு மூன்று ஆயுதங்கள் பற்றிக் கூறப்படுகிறது. அவற்றின் பெயர்களைத் தருக?

ஒக்டோபர்.12 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.51, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# கவுண்டமணி செந்தில்
## கல கல அரசியல்

காதில பூ கந்தசாமி

செந்தில்:- அண்ணே, அண்ணே.

கவுண்டமணி:- (காதில் விழாதது போல இருக்கிறார்)

செந்தில்:- (பாடுகிறார்)
செந்தில் வந்து சேதி சொல்லல்லோ
காதுக்குள்ளே குரல் விழுந்தல்லோ
நான் கதைக்க ஹேய் நான் கதைக்க
நேரம் உண்டல்லோ.

கவுண்டமணி:- நிறுத்துடா பேமானி. பெரிய பாலசுப்பிரமணியம் எண்ணு நினைப்பு. கழுதை தோத்துடும்.

செந்தில்:- அண்ணே! கோவிக்காதீங்க அண்ணே! நாட்டில எத்தனையோ நடந்து போச்சண்ணே. உங்ககிட்டே டவுட்டைக் கிளியர் பண்ண வந்தேன் அண்ணே!

கவுண்டமணி:- வெரி வெரி சொரி மிஸ்டர் பன்னி வாயா! நான் இப்போ அரசியல் பேசறதில்ல. ஒதுங்கிட்டேன்.

செந்தில்:- ஓ. மை காட். ஓ மை கோட். (பாடுகிறார்)
உனது ராஜாங்கம் இதுதானே
ஒதுங்கக்கூடாது நல்லவனே.
பதில்கள் சொல்ல நீயிருந்தால்
கேள்விகள் எழாது மணியண்ணே.

கவுண்டமணி:- நிறுத்துடா. நிறுத்து! உனக்கு என்னை அடிக்கணும்போல இருந்தா நாலு அடி அடிடா. இப்படிப் பாடிப்பாடியே என்னைக் கொல்லாதடா. உனக்கு என்ன டவுட்டு. கேளுடா தேங்காய் தலையா.



செந்தில்:- அப்படி வாங்கண்ணே! வளர்ப்பு மகன் உறவை அம்மா இரத்துச் செய்துட்டாங்களே. இனி யாரண்ணே அந்தப் பையனை வளர்க்கிறது?

கவுண்டமணி:- முதல்லே வளர்ப்பு மகன் என்னுறதே தப்புடா. இந்தம்மா தத்தெடுக்கும் முன்னமே அந்தப் பையன் வளர்ந்து முடிச்சுட்டான்.

செந்தில்:- கரெக்ட்டு. வளர்ந்த மகன் எண்ணு தான் சொல்லணும்.

கவுண்டமணி:- களிமண் தலையா, உனக்கே புரியுது. ஜனங்களுக்கு புரியாமப் போகுமா. அதான் கழட்டிவிடுறதா அம்மா அறிவிச்சுப் புட்டாங்க.

செந்தில்:- உடன்பிறவா சகோதரியை, உடன் சேரா விரோதியா அறிவிச்சுட்டாங்களே அம்மா. தோழி துடிச்சுப்போயிருப்பாங்ளே யண்ணே.

கவுண்டமணி:- (பாடுகிறார்)
அழுதவர் சிரிப்பதும்
சிரித்தவர் அழுவதும்
விதிவழி வந்ததில்லை.
ஒருவருக்கென்றே
உள்ளதையெல்லாம்
இறைவனும் தந்ததில்லை.
யாரு பாடினது தெரியுமா? வாத்தியாரு! அன்னைக்கு ஊரைப் பார்த்து தோழி சிரிச்சாங்க. இன்னைக்கு தோழியைப் பார்த்து ஊரு சிரிக்குது.

செந்தில்:- இந்த நேரத்தில சிறையில சசிகலா என்ன பாடுவாரு தெரியுமா? (பாடுகிறார்)
வீடுவரை தோழி
வீதிவரை பொலிசு
வழக்குவரை ஜட்ஜ்சு
சிறைக்குள்ளே நுளம்பு
காடுவரை கணவன்
கடைசிவரை ஜெயிலோ?

கவுண்டமணி:- அம்மா என்ன பாடுவாரு? அதையும் பாடி முடிச்சுடு.

செந்தில்:- (பாடுகிறார்)
கட்டிய தோழி, வளர்ப்புப் பிள்ளை,
உறவைக் கொடுத்தவர் எங்கே?
வழக்குகள் மேலே வழக்காய் தொடுத்து
உறவைக் கெடுத்தவர் இங்கே!
ஒருநாள் போனாய், ஒருநாள் வருவாய்
ஒவ்வொரு நாளும் துயரம்.

கவுண்டமணி:- அடே எருமைவீட்டு பன்னிக் குட்டி. உடம்பை வளர்த்து வைச்சிருக்கியே தவிர, மூளையிலே ஒண்ணுமேயில்லடா மூதேவி!

செந்தில்:- ஏனண்ணே இப்படியெல்லாம் வாழ்த்துறீங்க.

கவுண்டமணி:- வெட்கப்படாதே ரொம்ப விகாரமாயிருக்கு. அடே சட்டித்தலையா! அந்தம்மா தோழியை பிரியுறமாதிரி நடிச்சிருக்காங்கடா. நான் பிரியுற மாதிரி பிரியறேன், நீ அழுவுற மாதிரி அழு எண்ணு ரெண்டுபேரும் சேர்ந்துகிட்டு சூப்பர் பிலிம் காட்டறாங்கடா.

செந்தில்:- (பாடுகிறார்)
மனிதர் கொண்டாடும் உறவுகளோ
எந்த மனம் சேரும் யார் கண்டார்
உறவினில் தோன்றிய ஊழல் நதி
சொத்துக் கடலாக மாறிய காலவிதி
அவளுக்கு இவள் என்று எழுதிய கணக்கு
கணக்குகள் புரியாமல் கனவுகள் வழக்கு
உறவின் மாறாட்டம், உரிமைப் போராட்டம்
இரண்டும் தீர்வதெப்போ. இரண்டும் தீர்வதெப்போ?
அண்ணே! தனக்கு ஒண்ணுமே தெரியாது. சுற்றியிருந்தவங்கதான் வம்பு பண்ணிப்புட்டாங்க அப்படின்று அம்மா சொல்லுறாங் கண்ணே.

கவுண்டமணி:- அப்படியா சொல்லுறாங்க. (பாடுகிறார்)
கொக்கு சைவ கொக்கு
ஒரு பதவி மீனைக்கண்டு
விரதம் முடிச்சிடுச்சாம்.
பதவிமேல் கண்ணு அது ஒத்தகாலில் நிண்ணு
சொத்துத்தான் சேர்த்திடுச்சாம்.

செந்தில்:- (விட்ட இடத்திலிருந்து பாடுகிறார்)
சொத்தையெல்லாம் பொத்திவைக்கமுடியாது
உன் கண்ணில் உன் ஊழல்
அட துள்ளுதே பாரு.
அண்ணே! அம்மா விவகாரம் போதுமண்ணே. கலைகுரு மகனுக்கு மேயர் பதவி கொடுக்க முடிவு செஞ்சிட்டாரே. இதுக்கு என்ன அர்த்தமண்ணே?

கவுண்டமணி:- வீடு, மனைவி, மக்கள். கலைஞர் 'மக்கள்' ஆட்சி மலரப் பாடுபடுறதா சொல்லுறாங்க.

செந்தில்:- அதென்ன அண்ணே மக்கள் ஆட்சி?

கவுண்டமணி:- தந்தை தமிழக முதல்வர். மைந்தன் தலைநகர முதல்வர். மற்றொரு மைந்தன் மு.க.அழகிரி வைச்சதுதான் மதுரையில சட்டம். இதுதாண்டா 'மக்கள்' ஆட்சி.

செந்தில்:- பாவமண்ணே மு.க.முத்து. அவரும் மகன்தானே!

கவுண்டமணி:- முத்து என் சொத்தல்ல எண்ணு நினைக்கிறாரு கலைஞர். அதான் முத்து ஜெயலலிதாகிட்டே சரண்டராயிட்டாரு.

செந்தில்:- அண்ணே! இன்றைய மேயர் நாளைய முதல்வர் எண்ணுதானே அர்த்தம். கோட்டைக்கு போறதுக்கு வசதியா சென்னையைப் பிடிக்கப்போறாரு ஸ்டாலின். ஐடியா சூப்பரு!

கவுண்டமணி:- (பாடுகிறார்)
'பதவி எல்லாம் இப்ப நமக்கெதற்கு
கலைஞரின் கையில் அது இருக்கு
கனியட்டும் காலம் நேரம்
அவருக்கு என்னவோ திட்டம் இருக்கு'
எண்ணுதான் ஸ்டாலின் பொறுமையா இருந்தாரு. இப்ப பாரு தந்தை மகனுக்காற்றும் கடமையை கரெக்டா செய்துட்டாரு கலைஞர்.

செந்தில்:- அண்ணே! அரசியல் போதுமண்ணே. (திடீரென்டு குலுங்கிக் குலுங்கி அழுகிறார்)

கவுண்டமணி:- மாங்கொட்டை வாயா! சொல்லிப்புட்டு அழுவுடா.



செந்தில்:-
நேற்று ராத்திரி யண்ணே!
சிலுக்கு போச்சுதே யண்ணே
நினைச்சுப் பார்க்கவே யண்ணே
நெஞ்சு வேகுதே யண்ணே!

கவுண்டமணி:- (பாடுகிறார்)
சிலுக்கு என்றால் ஜில்லு
குலுக்கு என்றால் ஜொள்ளு
கலக்கு என்றால் சிலுக்கு
அவளே உலகில் தெய்வம்.

செந்தில்:- (அழுதபடியே பாடுகிறார்)
அவள் இறந்து போனாளே
என்னை கவர்ந்து போனாளே
நான் காணும் போது
ஃபானில் தொங்கி இறந்து போனாளே.

கவுண்டமணி:- மவனே! அழாதேடா. அழுவாதே.

செந்தில்:- என் கடைசி ஆசையை நிறைவேற்றாமல் பேயிட்டாவே, அதுதானண்ணே தாங்க முடியல்லே.

கவுண்டமணி:- என்னடா உன் கடைசி ஆசை.

செந்தில்:- ஒரே ஒரு படத்தில ஒரே ஒரு டூயட்டாவது அவங்களோட சேர்ந்து ஆடணும் எண்ணு வாழ்க்கையில ஒரு பெரிய இலட்சியமே வைச்சிருந்தேனே. இப்போ.... ஓ.. மை டியர் சில்க்ஸ்! நீ எங்கே போயிட்டே, நீ யாரால போயிட்டேயெண்ணே எனக்கு தெரியாமலே போயிட்டியே. (பாடுகிறார்)
விசிலடிச்சு வளர்ந்த கிளி
விழியாலே ரசிச்ச கிளி
நான் ரசிச்ச வண்ணக்கிளி
என் மணியண்ணே என் மணியண்ணே!

கவுண்டமணி:- இதெல்லாம் உனக்கு தேவையா. அதெங்கே. நீயெங்கே. உனக்கொரு ஆசை. வாயில தோசை. (எட்டி உதைக்கிறார். செந்தில் குப்புற விழுந்து, பின் எழுந்து ஓடுகிறார்)



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# வாழ்வுக்கு கலை அழகு





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


வெள்ளவத்தை சைவமங்கையர் கழக பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் "ரங்கோலி காலா" எனும் பல்சுவை நிகழ்ச்சி கடந்த 21ம் திகதி சனிக்கிழமை சைவமங்கையர் கழகத்தில் நடைபெற்றது.

தருவது

இந்நிகழ்ச்சியில் திருமதி.சூர்யகலா ஜீவானந்தனின் சிறப்பு நடன நிகழ்ச்சி அன்று நடைபெற்றது. திருமதி சூர்யகலா புதுடில்லி ஸ்ரீராம் பாரதீய கலாகேந்திராவில் நான்காண்டு பரத நடனத்துறையில் பட்டம் பெற்றவராவார். தலைநகர கைதுகள், தேடுதல்கள் மத்தியில் இவ்வாறான நடன நிகழ்வுகள் மனதுக்கு ஓரளவு ஆறுதல். கண்ணுக்கும் மனதுக்கும் மட்டுமல்ல வாழ்க்கைக்கும் கலை அழகு.

## உடனே உச்சியில்

இது 70 மாடி உயர குடிமனை. இதன் உயரம் 296 மீட்டர் (971அடி). ஜப்பான் நாட்டின் யொக்கோஹாமா நகரில் அமைந்துள்ள இந்தக்கட்டிடத்தின் பெயர் 'லாண்ட்மார்க் டவர்.' இந்த மாடிக் குடியிருப்பில் உலகிலேயே விரைவாகப் பயணிக்கக்கூடிய 'லிஃப்ட்' அமைக்கப்பட்டுள்ளது.

16 ஜூலை 1993ல் இயங்கவிடப்பட்டது. மிட்சுபிசி எலெக்ரிக் கோப்பரேசன் இந்த அதிவேக லிஃப்ட்டைத் தயாரித்தது.

← இந்த அதிவேக லிஃப்ட்டின் வேகம் 45 கி.மீ/மணி (28மைல்/மணி).

தரையிலிருந்து 69வது மாடியிற்கு செல்ல 40 செக்கன்கள் போதும். உலகிலேயே வேகமாக இயங்கும் 'லிஃப்ட்' இருப்பதுதான் இந்த மாடிக் கட்டிடத்தின் சிறப்பு.




## உரு மாற்றம்

→ 'மிஸஸ் டவுட் ஃபையர்' படத்தின் வெற்றி ஹொலிவூட் முதல் கோடம்பாக்கம்வரை பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அந்தப் படத்தின் பயங்கர வெற்றிக்குப் பிரதான காரணம் 'ரொபின் வில்லியம்ஸ் என்னும் நடிகர் பெண் வேடமிட்டு அசத்தியதுதான். அந்தப் படத்தை கிட்டத்தட்ட தழுவித்தான் கமல் நடிக்கும் 'அவ்வை சண்முகி' கோடம்பாக்கத்தில் உருவாகி வருகிறது.

பெண் நடிகைகள்தான் சற்றுக் கலங்கிப் போய் இருக்கிறார்கள். ஆண் நடிகர்கள் அழகான பெண்களாக நடித்து தங்கள் பிழைப்பில் மண் அள்ளிப்போட்டு விடுவார்களோ என்று பயப்படுகிறார்கள்.

இங்குள்ள படங்களைப் பார்த்தால் பெண் நடிகைகளின் பயம் நியாயமானது என்று தெரிகிறது. நளினமான பெண்களாகத் தெரியும் இவர்கள் மூவருமே அட்டகாசமான ஆண் நடிகர்கள். இவர்களது தோற்றம் ஹொலிவூட் ரசிகர்களை கவர்ந்துவிட்டது. மூவரும் இப்படித் தோன்றுவது 'ரு வொங் ஃபூ தாங்க்ஸ் ஃபோர் எவ்றிதிங், ஜூலி நியூமர்' (நீளமான பெயர்தான்) என்னும் படத்திற்காக. அப்படம் ஹொலிவூட்டில் சக்கை போடுபோடுகிறது. அதுசரி: நீளமான பெயர் வைக்கும் பழக்கம் கோடம்பாக்கத்தில் இருந்து ஹொலிவூட்டுக்கு ஏற்றுமதியாகிவிட்டதோ?




வாரமலர் தினமுரசு





## நேற்று நீ இன்று நான்



சமீபத்தில் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரை வென்றது. அணிக்கு மற்றொரு சந்தோசம். கப்டன் வாசிம் அக்ரம் 300 டெஸ்ட் விக்கெட்டுக்களை கைப்பற்றியது. இங்கிலாந்தில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் வீழ்த்திய விக்கெட்டுக்களோடு 300 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்திய பாகிஸ்தான் வீரர்களில் இரண்டாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் வாசிக் அக்ரம். உலகளவில் பதினொராவது வீரர். முன்னாள் கப்டன் இம்ரான்கான்தான் முதன்முதலில் 300 டெஸ்ட் விக்கெட்டுக்களைச் சாய்த்த பாகிஸ்தான் வீரர்.

இம்ரான்கானின் சீடர்தான் வாசிம் அக்ரம். குருவுக்கும் சிஷ்யருக்கும் 300 டெஸ்ட் விக்கெற்றுக்கள் விடயத்தில் ஒரு ஒற்றுமையும் உண்டு. இருவருமே இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில்தான் தமது 300 டெஸ்ட் விக்கெட் சாதனையைப்படைத்தனர்.

உலகில் இதுவரை முன்னூறு டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்திய இடதுகைப்பந்து வீச்சாளர் வாசிம் அக்ரம் மட்டும்தான்.

முன்னூறு டெஸ்ட் விக்கெட் வீழ்த்தியவர்களில் இருவர்தான் தற்போதும் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் வாசிம் அக்ரம். இன்னொருவர் மேற்கிந்தியதீவு அணி வீரரான கொட்னி வோல்ஷ்.

## நீருக்குள் இருந்து நிலத்தைத் தாக்கு!

↓ ஏவுகணைகள் பலவகைப்படும். கண்டம்விட்டுக் கண்டம் பாய்ந்து தாக்கும்வகை, தரையிலிருந்து ஆகாயத்திற்கு, ஆகாயத்திலிருந்து தரையிற்கு ஏவப்படுவது இவ்வாறு பல வகையுண்டு.

படத்தில் காணப்படுவது ரொமஹுவக் என்றழைக்கப்படும் ஏவுகணை. யூஎஸ்எஸ் லா ஜோலா என்ற அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான அணுசக்தி விசையால் இயங்கும் நீர்மூழ்கியிலிருந்து எதிர்க்கப்படுவொன்றை அழிக்க ஏவப்படுகின்றது. கடலின் கீழிலிருந்து நீரைக் கிழித்துப் புறப்படும் இந்த ஏவுகணையின் அதிகுறைந்த பறப்புத் தூரம் 408 கிலோமீட்டர். நீருக்குள் இருந்து தரையில் உள்ள இலக்குகளை நோக்கியும், இதனால் தாக்கமுடியும்.

இதன் முனையில் 1000 இறாத்தல் வெடிமருந்து பொருத்தப்பட்டுள்ளது.

வளைகுடாயுத்தத்தில் ஈராக்கிற்கெதிரான தாக்குதலின்போது 300 ரொமஹுவக் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாம். இவைகள் துல்லியமாக ஈராக்கின் இராணுவ நிலைகளைச் சென்று தாக்கியழித்தன.

இதைவிட இத்தகைய ரொமஹுவக்கின் நவீன வடிவமைப்பொன்று 2400 கிலோமீட்டர் தூரத்திலுள்ள இலக்குகளைத் தாக்கக்கூடியவகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாம். எதிரி இலக்கை நெருங்கிச் செல்லத்தேவையில்லை. எட்ட நின்றே பட்டனை அமுக்கினால் போதும். டமால். அழிவுகளுக்குத்தான் எத்தனை விதமான கண்டுபிடிப்புக்கள்!

ஒரு நவீனரக நீர்மூழ்கியை வைத்து ஒரு நாட்டையே நாசமாக்க முடியும்.






| | கிழக்கு | |
|---|---|---|
| புதன் பச்சை EMERALD | சுக்கிரன் வைரம் DIAMOND | சந்திரன் முத்து PEARL |
| குரு புஸ்பராகம் TOPAZ | சூரியன் நெம்பு RUBY | செவ்வாய் பவழம் CORAL |
| கேது வைடூரியம் CATSEYE | சனி நீலம் SAPPHIRE | ராகு கோமேதகம் CINNAMON |
| | மேற்கு | |

வடக்கு / தெற்கு

NAVARATNAM
இங்கு நவகோள்களின் அம்சமான, நவரத்தினங்களைப் பற்றிய விபரங்கள் உள்ளன. பிறப்பு எண்ணையும் கூட்டு எண்ணையும் வைத்து இலவசமாக கணித்து கூற அவரவர்க்கு ஏற்ற ரத்தினங்களை அணிந்து அதற்கேற்ப பலன்களையும் நன்மைகளையும் அடையலாம். நன்றி

அருள் ஜுவலர்ஸ் 3 ARUL JEWELLERS
3, SEA STREET, COLOMBO-11. T.P.436331

இலவசம்.
முதல் பத்து வாடிக்கையாளருக்கு அழகிய பென்டன்.



மற்றவர்கள் பேசுவதை நாம் செய்கின்றோம்.





படிப்பகம்